ஸ்ரீ:

கலிங்கத்துப்பரணியாராய்ச்சி.

இராமநாதபுரம்

மு. இராகவையங்கார்

எழுதியது.

உ

தமிழ்ச்சங்கமுத்திராசாலை,

மதுரை.

1925.

[விலை அணா 8.]

பிழையுந் திருத்தமும்.

பக்கம்.	வரி.	பிழை.	திருத்தம்.
11	10	விஹிதவிலோசன	விஹுதவிலோசன
15	29	பாரிபோகம்	பரிபோகம்
49	14	பெயர்களேயாம்	பெயரேயாம்
61	3	புலவிவருணனைகளை	கலவிவருணனைகளை
63	11	குழீஇய	தழீஇய
64	25	வெயிலினஞ்	வெயிலிளஞ்
69	14	அரக்கர்போன்றார்க்கு	அரக்கர்போன்றார்கண்களுக்கு

ஸ்ரீ:

முன்னுரை.

தமிழணங்கினுக்கு ஓர் அணிகலமாக விளங்கும் கலிங்கத்துப் பரணியின் பழையபதிப்புக்கள்யாவும், பலவிடங்களினும் பொருட் பொருத்தமின்றிப் பாடங்கள் சிதைந்துள்ள செய்தி, ஆராய்ச்சியாளரெல்லாம் நெடுங்காலமாக அறிந்ததேயாம். செந்தமிழ்ப் பத்திரிகையை யான் நடத்திவந்தகாலத்தே, சங்கத்துப் புத்தகசாலையிலுள்ள கலிங்கத்துப்பரணி ஏட்டுப்பிரதியொன்றைக் கொண்டு அப்பரணியச்சுப்பிரதிகளைச் சோதிக்கநேர்ந்தபோது, பொருணயமுள்ள சுத்தபாடங்கள் பல கிடைத்தமையாற் பெருமகிழ்ச்சி விளைத்தது. அதனால் அவ்வரிய ஏட்டுப்பிரதியுட்கண்ட சிறந்த பாடங்களைக் 'கலிங்கத்துப்பரணியாராய்ச்சி' என்ற தலைப்பெயரின்கீழ்ச் செந்தமிழ் ஏழு, எட்டாந்தொகுதிகளில் வெளியிடலாயினேன். அவ்வாராய்ச்சியுட் குறிக்கப்பட்ட பாடங்கள் சிறந்திருத்தலைப்பற்றி அறிஞர் சிலரும் அப்போது ஆமோதித்து எழுதினர். ஆனால், பத்திரிகைநடத்தும் வேலையினின்றும் நான் மாற நேர்ந்தமையால், அதனை முற்றுவிக்கக்கூடாமற் போயிற்று.

இரண்டுவருஷங்கட்குமுன்பு, இப்பரணியின் புதியபதிப்பொன்று, பண்டிதர்: ஸ்ரீ. அ. கோபாலையர் அவர்களால் வெளியிடப்பெற்றது. இதன் முகவுரையுள்—"இக்கலிங்கத்துப்பரணி இதற்குமுன் முறையாக அச்சிடப்பட்டிருப்பினும், அப்பதிப்புக்களிலெல்லாம் பிழைகள் நிரம்பிக் கிடக்கின்றன என்பது, சென்ற 1921-ம் வருஷமுடிவில் எனக்குத் தெரியவந்தது" என்று பதிப்பாளர் எழுதியுள்ளார். 17-வருஷங்கட்கு முன், இதுவே விஷயமாக யான் எழுதிவந்த ஆராய்ச்சியுரைகளை, அப்போது சங்கத்தில் அமர்ந்திருந்த பதிப்பாளரும் படித்திருத்தல் கூடியதே; ஆயினும், பலவருஷங்கள் கழிந்தமையால், அதன் ஞாபகமின்றியே ஒருகால் இங்ஙனம் அவர் எழுதநேர்ந்ததுபோலும். அஃது எவ்வாறாயினும் ஆகுக. ஒன்பதுக்கு மேற்பட்ட பரணியேட்டுப்பிரதிகளைவைத்து ஒப்புநோக்கியதாக அவர் தம் முகவுரையுள் எழுதியிருந்த

உள்ளுறை.

1.	சயங்கொண்டார்	...	... பக்கம்	**1**
2.	புதுப்பதிப்பு (ஆராய்ச்சி) ...	...	,,	**2**
3.	கருணாகரத்தொண்டைமான்	...	,,	**33**
4.	சங்கோத்தரம்...	...	... ,,	**57;**

ஸ்ரீ:

கலிங்கத்துப்பரணியாராய்ச்சி.

[சயங்கொண்டார்.]

புலவர்பெருமானாகிய சயங்கொண்டார் பாடிய கலிங்கத்துப்பரணியின் வாக்கினிமையையும் சொற்செறிவு பொருட்பொலிவுகளையும் தமிழறிஞரெல்லாம் நன்கறிவர். இப்பரணி, அபயன் என்ற முதற் குலோத்துங்கசோழன் கலிங்கப்போரில் அடைந்த பெருவெற்றியைப் புகழுமுகத்தால், அச்சோழன்பெருமையையும், அவன் சேனாபதி பெருமையையும் நிலவுலகில் நிலைபெற நிறுத்துவது. இந்நூல்வாயிலாகச் சயங்கொண்டார் அபயனுக்களித்த நிலைத்த புகழ்க்கொடை, அவன் அவர்க்குதவியிருக்கக்கூடிய நிலையாப்பொருட்கொடையினும் பல்லாயிரமடங்கு பெரிது என்பது சொல்லவும் வேண்டுமோ?

"காவல ரீகை கருதுங்காற் காவலர்க்குப்
பாவலர் நல்கும் பரிசொவ்வா—பூவினிலை
யாகாப் பொருளை யபயனளித் தான்புகழாம்
ஏகாப் பொருளளித்தேன் யான்." (தமிழ் நா. சரி. 115.)

என்று ஒருகால் அபயனிடம் முனிவாக அப்புலவர் பாடிய வெண்பாவொன்று வழங்குதலும் அறியத்தக்கது. சோழராஸ்தானத்தே கம்பர் கூத்தர்களுக்குமுன்பு கவிச்சக்கரவர்த்தி என்ற சிறப்புப்பெயர் பெற்று விளங்கியவர் இப்புலவர்பெருந்தகையேயாவர். இவர்க்கு அச்சிறப்புப் பெயர் முற்காலத்தே வழங்கிவந்ததென்பது, அடியார்க்குநல்லார் சிலப்பதிகாரவுரையுள் (5, 76-88) இந்நூற்றுழிசைகளை மேற்கோள்காட்டியவிடத்து எழுதிய குறிப்புக்களாற் புலப்படும். "குலோத்துங்க சோழ பெருமானுக்குத் தீபங்குடி கவிற்சண்டிதன் கவிச்சக்கிரவர்த்தி செயங்கொண்டான் பாடின கலிங்கத்துப்பரணி* என்ற தொடர் அப்பரணிப் பிரதியில் உள்ளதாகத் தெரிதலாலும் அவ்வழக்கினுண்மை வலியுறுகின்றது. இத்தொடரினின்று தீபங்குடி என்பது இவரதூர் என்று வெளியாவதுபோலவே, தமிழ்நாவலர்சரிதையாலும் அறியப்படும் (114).

* இப்பரணியின் புதிய பதிப்பிற் சயங்கொண்டார்வரலாறு பார்க்க.

கவிற்சண்டிதன் என்பதும் அக்காலத்து இவர்க்கு வழங்கிய சிறப்புப்பெயர்போலும். இப்புலவர் பாடிய பரணியின்வாக்கிலும் போக்கிலும் ஈடுபட்டு முன்னோரும் பின்னோருமான தமிழ்மக்களெல்லாம் இதனைப் பாராட்டிவந்திருக்கின்றனர். சயங்கொண்டாரை யடுத்துச் சோழர்வாயிற் பெரும்புலவராக விளங்கிய கூத்தரும், பிறரும்—

"கலிங்கப் பெரும்பரணிகொண்ட பெருமான்" (விக்கிரமசோழனுலா)

"கலிங்கரோடத் தென்றமிழ்த் தெய்வப் பரணி கொண்டு
......உலகாண்ட பிரான்." (தக்கயாகப்பரணி.)

"பரணிக்கோர்சயங்கொண்டான்" (படிக்காசுப்புலவர்)

என்று புகழ்வராயின் வேறுகூறவும் வேண்டுமோ? இப்பரணியன்றியும், புகார்நகரத்துவணிகரைப் புகழ்ந்து இசையாயிரம் என்றொருநூலும் சயங்கொண்டார் பாடியவர் என்பது —

"செட்டிகள்மேல் இசையாயிரம் பாடியபோது செக்கார்
'புகார் தங்கட்கு ஊர்' என்று பாட (வேண்டச்) சொல்லியது."

"ஆடுவதுஞ் செக்கே யளப்பதுவு மெண்ணெயே
கூடுவதுஞ் சக்கிலியக் கோதையே—நீடுபுகழ்க்
கச்சிச்செப் பேட்டிற் கணிக்குங்காற் செக்கார்தாம்
உச்சிக்குப் பின்புகா ரூர்."

எனத் தலைக்குறிப்புடன் காணப்படும் தமிழ்நாவலர்சரிதை வெண்பாவால் (116) அறியப்படுகின்றது. இவ்விசையாயிரம் இப்போது கிடைக்கவில்லை.

[புதுப்பதிப்பு.]

இங்ஙனம், சொற்சுவை பொருட்சுவைகள்பற்றித் தமிழறிஞராலும், வெற்றிவேந்தனொருவனது வரலாற்றினை விளக்குதலாற் சரித்திர அறிஞராலும் போற்றப்பட்டுவரும் இப்பரணி, இதுவரை மூன்று பதிப்புக்கள்பெற்றிருப்பினும், பாடப்பிறழ்ச்சிகொண்டு திருத்தம் பெறுதேபோனமையால், பலவிடங்கட்குப் பொருள்களும் சரித்திரக் கூறுகளுந் தெரிய இடமில்லையாயிற்று. இப்போது, மதுரைத் தமிழ்ச் சங்கத்துப் பழையமாணவருளொருவரும் 'அடையாற்று 'நாஷனல்-காலேஜ்' தமிழ்ப்பண்டிதருமான ஸ்ரீமத். அ. கோபாலையரவர்களால் புதி

தாகப் பலபிரதிகளைக்கொண்டு பரிசோதிக்கப்பெற்று நான்காமுறையாக வெளிவந்துளது. இதன் முதலில் முகவுரை நூலாசிரியர் வரலாறுகளும், இறுதியில் அரும்பொருள்விளக்கம் அரும்பதமுதலியவற்றின் அகராதி முதலியனவும் பதிப்பாளரால் எழுதிச் சேர்க்கப்பட்டிருக்கின்றன. இப்பதிப்பு முன்னையவற்றினும் திருத்தங்கள் பல கொண்டுள்ளதென்பதில் தடையில்லை. ஆயினும், பாடங்களும், பொருள்களும், சரித்திரக்கூறுகளும் தெளிவுபடாதவை இப்பதிப்பினுள்ளுஞ் சிலபலவுள்ளன என்பது ஆராய்ச்சியில் எனக்குத் தெரியவந்தமையால், அவற்றைத் தொகுத்து வெளியிட எண்ணினேன். இங்ஙனம் வெளியிடுவதன் கருத்து—தமிழணங்குக்குச் சிறப்பாகவமைந்த இப்பரணியிலுள்ள தாழிசைமணிகள், தம் மியற்கைநலம்விளங்கக் கழுவப்பெற்று, அவ்வணங்கினுக்கு அலங்காரமாக விளங்கவேண்டும் என்பதேயன்றிப் பிறிதன்று; 'கற்பாலுமிழ்ந்த மணியுங் கழுவாது விட்டால்—நற்பாலழியும்' என்பது வழக்கன்றே? இனி விஷயத்தினுட் செல்வேன்.

(1) கடைதிறப்பின்கருத்து.

பரணியின் முதற்பகுதியான கடைதிறப்புக்குப் புதுப்பதிப்பின் அரும்பொருள்விளக்கத்தே அடியில்வருமாறு கருத்தெழுதப்பட்டுளது:—

" விசயதானதுபட்டினத்துள்ளபெண்கள் போர்க்குச் சென்றிருந்த தங் கணவர் திரும்பிவரத்தாழ்த்தமையாற் கவலையுற்றும் ஊடியும் கதவைத் தாழிட்டுக்கொண்டு வீட்டினுள்ளேயிருக்க, கவி(சயங்கொண்டார்), அப்பெண்களின் இயற்கையழகு, செயற்கையழகு, மென்மைத்தன்மை, முன்னாட்களில் அவர்கள் ஊடியுங் கூடியும் அனுபவித்த இன்பம் முதலியவற்றை எடுத்துக்கூறி அவர்களை அழைத்துக் கதவுதிறக்கவும் கலிங்கப்போரின் வெற்றியைக் கேட்கவும் வேண்டுதல்" என்பது.

போர்க்குச் சென்றிருந்த தங் கணவர் திரும்பிவரத்தாழ்த்தமையால் தம் வீட்டுக் கதவை அடைத்துக்கொண்டு கவலையுற்றிருந்த மகளிரைப்பற்றியதே கடைதிறப்பு என்று கருதுவதற்கு, அப்பகுதியுள் யாதொருகுறிப்புங் காணப்படவில்லை. ஆனால், அதற்கு மாறாகக் கொழுநருடனிருந்து அவரோடு ஊடியுங் கூடியும் மகிழ்கின்ற நிலையில், மகளிரைக் கடைதிறக்கும்படிவேண்டும் பாடல்களே மிகுதியும் பயில்கின்றன. பிரிந்தநிலையில், மகளிர் கணவருடன் துய்த்த ஊடல்முதலிய முன்செயல்களை நினைப்பூட்டிச் செயங்கொண்டார் அவர்களைக் கதவுதிறக்

கும்படி வேண்டினரென்று இதற்குக் கருத்துக்கூறுதல், பொருத்தமும் வழக்குமுடையதன்று. பழையசெய்திகளையே நினைப்பூட்டியவராயின், ‘குழைந்தீர், புணர்ந்தீர்’ என்றாற்போல இறந்தகாலம்பட ஓரிடத் தேனும் கவி தன் கருத்தைக் குறிப்பிடாமற் போகாரென்பது திண்ணம். மற்றுக் கடைதிறப்பின் கருத் தியாதோவெனின்:—தம் அரசனும் அவன் தானைத்தலைவனும் அடைந்த கலிங்கவெற்றியைப் பாடுதற்குத் தலைநகரத்துள்ள பல்வேறுமகளிரும், நாட்காலையே எழுந்து தந்தோழியர் வாயிற்கடைமுன்னின்று அவரைத் துயிலெழுப்புவதேயாம்.

“ கேசவனைப் பாடவுநீ கேட்டே கிடத்தியோ
தேசமுடையாய் திற ”

“ பந்தார் விரலிநின் மைத்துனன் பேர்பாடச்
செந்தா மரைக்கையாற் சீரார் வளையொலிப்ப, வந்துதிறவாய்.”

(திருப்பாவை)

என்று மாயன்பேர்பாட ஆய்ச்சியர் தந் தோழியர்முன்றிலிற்சென்று அழைத்தாற்போல ஈண்டும் நகரமகளிர் அபயன்பேர்பாட ஒருவரை யொருவர் சென்றழைத்தனர் என்க.

“ காஞ்சி யிருக்கக் கலிங்கங் குலைந்த
களப்போர் பாடத் திறமினோ ”

“ கலிங்க மெறிந்த கருணா கான்றன்
களப்போர் பாடத் திறமினோ ”

எனக் கடைதிறப்பின் இறுதியில், கலிங்கவெற்றியைப் பாடுதற்கே இங்ஙனம் அழைக்கப்படுகின்றனர் என்பதைச் சயங்கொண்டார் குறிப்பிட்டு அப்பகுதியை முடித்தலும் அறியத்தக்கது. இக்கடைதிறப்பு நாட்காலையே நிகழ்வதென்பது,

“ புலர்ந்த தறியா தேகொழுநர் ஆகவமளி மிசைத்துயில்வீர்”
“ விடிவளவும் பொய்யே யுறங்கு மடநல்லீர்”

எனவருந் தொடர்களாற் பெறப்படும். இங்ஙனந் துயிலெழுப்பப்படுவோர் உயர்குலமகளிர், அரசனுந் தலைவரும் விழைந்த மகளிர் (24, 37), சிறையாகவுந் திறையாகவும் பெற்ற மகளிர் (41-43), வீரமகளிர், (பொருங்கண்வேலினார்) காதல்முதலியனபற்றிப் பிரிந்த மகளிர் (51),

பொதுமகளிர் (27, 30) முதலியோ ராவர் என்பதும் உய்த்தறியத் தக்கது.

(2) சிறைபிடிக்கப்பட்ட மகளிர்.

" மீனம்புகு கொடிமீனவர் விழியம்புக வோடிக்
கானம்புக வேழம்புகு மடவீர்கடை திறமின் " (41)

இதற்கு அரும்பொருள்விளக்கங்கூறும் பொழிப்புரையாவது :—

'மீனக்கொடியையுடைய பாண்டியர் கண்ணீர் சிந்தக் காட்டிற்புகுதலால், அப்பாண்டியரை எதிர்த்துச்சென்ற விசயதரனது யானை திரும்பிவருகின்றது; (அதனைக் காண) மடவீர் கடைதிறமின்' என்பது.

இப்பொருள்கூறின், தாம் பாடப்புக்க கடைதிறப்பிற் கலிங்கப் போரின்செய்தியன்றிப் பாண்டியன்போரைச் சயங்கொண்டார் கூறினவராவர். இவ்வாறு, சந்தர்ப்பத்துக்கு ஏற்காததொன்றை அப்புலவர் பாடினரென்றல் கொள்ளத்தக்கதன்றெனக.

இனி, 'வேழம்புகும்' என்று இப்போது திருத்தப்பட்ட தொடர் முன்னைப்பதிப்புக்களில் 'வேனம்புகும்' என்றும், சங்கத்துள்ள பாணி யேட்டில் 'வேளம்புகும்' என்றும் அமைந்துள்ளது. சங்கப்பிரதியி லுள்ள சிறந்த திருத்தங்களைப்பற்றிச் செந்தமிழிற் பலவருஷங்கட்கு முன் நான் எழுதிவந்த ஆராய்ச்சியிலே, அப்பிரதியிற் கண்ட 'வேளம்புகு மடவீர்' என்ற பாடத்துக்கு அப்போது எனக்குத்தோற்றிய பொருள்— 'மன்மதன் தன் பாணங்களை உகுத்தற்கு இலக்காகிய மடவீர்' என்ப தாம். இப்பொருள் சிறப்புடையதாகவே என்னாற் கருதப்பட்டதேனும், இப்போது, கவியின்கருத்து வேறென்பது ஆராய்ச்சியால் விளங்குகின்றது. அதனை ஈண்டு விளக்குவேன். சோழர்கள் பிறநாட்டரசரைப் போரில் வெல்லுங் காலங்களிலே அவரது களிறு நிதிக்குவை முதலியவற்றைக் கவர்வதோடு அவர்க்குரிய மகளிரைச் சிறைபிடிப்பதும், அவர்தம்மைத் தந் தலைநகரில் அமர்த்தித் தமக்கும் தந் தேவியர்க்கும் பணிசெய்வோராக்குவதும் வழக்கமாகக் கொண்டிருந்தவர்.* இப் பாணிக்குரிய அபயனும் அவ்வாறு கவர்ந்தவனே என்பது,

* இங்ஙனம் பிடித்துவரப்பட்ட மகளிர் கரிகாலன்காலத்தில், அம்பலம் அல்லது கோயில்களில் திருப்பணிசெய்வோராக அமர்த்தப்பட்டனர் என்பது, பட்டினப்பாலை 246—249 அடிகளால் அறியக்கிடக்கின்றது.

"நடைவ யப்பரி யிரத மொட்டகம்
நவநி திக்குவை மகளிரென்
றடைய வப்பொழு தவர்கள் கைக்கொளு
மவைக ணிப்பது மருமையே" (446)

"தென்ன ராதி நராதிப ரானவர்
தேவி மார்சடன் சேடிய ராகவே" (313)

"மலர்மாலை பணிமாறி யுடனே
புவனி காவலர்க டேவியர்கள் சூழ்புடைவர" (273)

என்ற சயங்கொண்டார்பாடல்களாலும்,

"வேள்குலத் தரசர்
பழியிகந்து கொடுத்த புகழின் செல்வியும்
வாளா ரொண்கண் மடந்தைய ரீட்டமும்
மீளாது கொடுத்த வெங்கரி நிரையும்
ஒருவிசைக் கைக்கொண்டு"

எனவரும் அபயன் மெய்க்கீர்த்தியாலும் அறியலாம். இங்ஙனம் சிறை பிடிக்கப்பட்ட மகளிர் அமர்ந்து வாழும்படி தலைநகரிற் சோழரால் தனியே அமைக்கப்பட்ட மாடமும் மாடப்புறமும் வேளம் என்று வழங்கப்பெறும். தஞ்சையிலும் பிறவிடங்களிலுமிருந்த இவ்வேளங் களைப்பற்றிச் சாஸனங்கள் அடியில் வருமாறு கூறுகின்றன :—

1. ஆனைமேற்றுஞ்சினர் தங்களாச்சி உடையபிராட்டியார் கிழானடிகள் கீழைவேளத்துப்பெண்டாட்டி.......அவனி சிகாமணி (S. I. I. III. 378)

2. தஞ்சாவூர்க்கூற்றத்துப் பழையவேளத்துப்பெண்டாட்டி போயன் திரிபுவன சுந்தரி (Ibid. 382)

3. தஞ்சாவூர்ப் பெருமானடிகள் சோழமாதேவியார் வேளத்து (Ibid. IV, 174)

4. ராஜகேஸரிவர்மன் வேளத்துப்பெண்டாட்டி மகாமல்லி (I. M. P. Tp. 748)

5. உய்யக்கொண்டான் திருமஞ்சனத்தார் வேளம் (Ibid. T; 1204, S. I. I. II, 439)

6. உடையார் ஆனைமேற்றுஞ்சினர் வேளம் (அல்லது) அபிமானபூஷணத் தெரிந்த திருவந்திக்காப்பு வேளம் (Ibid. 132)

இம் மேற்கோள்களைக்கொண்டு நோக்குமிடத்து, மேலேகாட்டிய தாழிசைக்கு —'(போர்க்காற்றாது) பாண்டியர் கண்ணீர்சொரியக் காட்டிட் புகுதலால் (சோழரது) வேளத்திற்புகும் அவர் மகளிர்காள்! கடைதிறமின்' என்பதே உண்மைப்பொருளென்பது தெளியலாகும். பாண்டியர் காட்டிற் றுரத்தப்பட அவர்மகளிர் வேளமேற்றப்பட்டனர் என்பது கருத்து. அபயனுடைய போனுக்குப் போறுன மூன்றாங் குலோத்துங்கன்காலத்தும், இங்ஙனம் பகைமகளிரை வேளமேற்றும் வழக்கமிருந்ததென்பது—

> "வீரபாண்டியனை முடித்தலைகொண்டு
> அவன்மடக் கொடியை வேளமேற்றி" (S. I. I. III, 217)

என வரும் அச்சோழன் மெய்க்கீர்த்தியால் அறியலாகும். இவ் வேளத்தை ஆளும் மகளிரே முதலில் வேளாட்டி எனப்பட்டனரென்றும், அச்சொல் வெள்ளாட்டி எனத் திரிந்து பிற்காலத்துப் பணிப்பெண்ணைப் பொதுவிற் குறிக்க வழங்கலாயிற்றென்றும் கருதத்தகும். இங்ஙனம் வேளமேற்றிய மகளிரன்றிப் பாராசர்களால் திறையாகச் சோழர்க்களிக் கப்பெற்ற மகளிருமுளர்.

(3) திறையாகப் பெற்ற மகளிர்.

> "அலைநாடிய புனலுடை யபயற்கிடு திறையாம்
> மலைநாடியர் துளுநாடியர் மனையிற்கடை திறமின்"
> "மழலைக்குறு மொழியிற்சில வடுகும்பல தமிழும்
> குழறித்தரு கருநாடியர் குறுகிக்கடை திறமின்" (42, 43)

என்ற இரண்டு தாழிசைகளால் அத் திறைமகளிர் கூறப்படுகின்றனர். இவற்றுள் முதற்கண்வரும் 'அபயற்கிடு திறையா மலைநாடியர்' என்பதற்கு—அபயனுக்கிடப்பட்ட 'திறையாகிய மலையைப் பார்க்கும்பொருட்டு' என்பது பொருளென்றும், அத்திறையைப் பார்க்கத் துளுநாடியர் விளிக்கப்பட்டனரென்றும் புதுப்பதிப்பின் அரும்பொருள்விளக்கங் கூறுகின்றது. மலைநாடு, துளுநாடு, கன்னடநாடுகளிலிருந்து திறையாக வந்த மகளிரையே கவி கூறுதல் தெளிவாகக் கிடத்தலால், இதற்கு மேற்கருதியவாறு நலிந்து பொருள்கொள்ளவேண்டிய ஆவசியகமில்லை. கடைதிறப்பில் அழைக்கப்படுவோர், போர்க்குச்சென்ற வீரர்களுடைய

மனைவியான்றி வேறல்லரென்று முதலிற் கருதிவிட்டதே இப்பொருள் கற்பிக்க நேர்ந்ததற்குக் காரணமாகத் தெரிகின்றது.

(4) பேய்விழிப்பின் உவமை.

"கொள்ளி கொண்டிரண் டேமுழை யுட்புகக்
குன்றி தோன்றுவ போல விழிப்பன" (125)

பேய்கள் விழிக்குந் தன்மையை வருணிப்பதாகிய இவ்வடிகட்கு—'இரண்டு அப்புக்கூட்டினுட் புகுந்த அக்குன்றிமணி தோன்றுதல் போல விழிப்பன' என்ற பொருள் தரப்பட்டுளது. இப்பொருள் கூறின், உவமை, பேய்விழிப்பின் சிறுமையையன்றிப் பெருமையைக் காட்டாமையாலும், முழையென்பது (அம்புக்) கூடு என்னும் பொருளில் வழங்கலரிதாகலாலும் 'புகக்குன்றி' என்பது 'புக+அக்குன்றி' என்று பிரிவுபடும்படி புலவர்பெருமான் வாக்கு அமையாதாதலாலும், 'கொள்ளி கொண்டு' என்ற தொடர் நின்றுவற்றுதலாலும் அக்கருத்து ஏற்புடையதன்று; இனி, இவ்வடியுள், 'குன்றி' என்பது குன்று என்று சென்னை 'மியூசியம்' கைபெழுத்துப்புத்தகசாலையிலுள்ள பரணிப்பிரதியொன்றிற் காணப்படுகின்றது. 'கொள்ளிகளைக்கொண்டு இரண்டு குகையுட் புகுங்கால், ஒரு குன்று எங்ஙனந்தோன்றுமோ, அங்ஙனந்தோன்ற விழிப்பன' என்று உவமையைச் சிறப்பித்துக்காட்டும் பொருள் இப்பாடத்திற்கு அமைதல் அறியத்தக்கது. அதனால், குன்றி என்பது சிதைந்த பாடமாகவே கொள்ளற்பாலது.

(5) ஈச்சோப்பி.

"கெடாதபடி நெடுஞ்செழியர் கெடும்பொழுதி
லிடும்பிண்டி பால மேந்தி
இடாகினிக ளிருமருங்கு மீச்சோப்பிப்
பணிமாற விருந்த போழ்தில்" (142)

தேவியின் கொலுவிருக்கையைச் சிறப்பிக்கும் இத்தாழிசையில், 'ஈச்சோப்பி' என்பதற்கு ஈச்சோப்புதலைச்செய்து என வினையெச்சமாகப் பொருள்கொண்டு வல்லொற்றுமிகப் பதிப்பிக்கப்பட்டுள்ளது. ஈச்சோப்புதல் என்று அரும்பதவுரையுள் வினையாகப் பதிப்பாளர் குறித்திருப்பினும் அதன்பொருளை விளக்கவில்லை. ஆயினும் அஃது ஈயை ஓட்டுதல் என்ற பொருள் பயக்கும். சோப்புதல்—அடித்தல்; 'நந்தன் மனைவி

கடை தாம்பாற் சோப்புண்டு' (திவ் பெரியாழ். 2, 1, 5.) என்ற இடங் காண்க. அடித்த லென்பது ஈண்டு ஓட்டுதற்பொருளது. இவ்வாறு, வினையெச்சமாக்கின், இடாகினிகள் கொலுவிலுள்ளதேவிக்கு ஈயோட்டுங் கைங்கரியஞ் செய்தனவாகப் பொருள்கொள்ளவேண்டும். தெய்வங்கட்குப் புரியும் உபசாரங்களிலே, ஈயோட்டும் பணியொன்று வழக்கிலுண்டென்பது தெளியக்கூடவில்லை.

இனி, ஈச்சோப்பி என வழங்கும் கருவியொன்றுண்டு. இது, கவரி ஆலவட்டம்போலக் கடவுளர் பெரியோர்க்குமுன் எடுத்துப் பணிமாறும் உபசாரப் பொருளாகும். இதனை—

"ஏறுமால் யானையே சிவிகையந் தளகமீச் சோப்பி வட்டில்
மாறிவா ழுடம்பினுர் படுவதோர் நடலைக்கு மயங்கி னீயல்."

(தேவாரம் சுவாமிநா. பதிப்.பக். 692, பாட். 7)

எனவரும் தேவாரவடிகளாலும் 'ஈச்சோப்பிக் கை' என்னும் சாஸனக் கூற்றாலும் (S. I. I. ii, 11, 17) அறிக.

"பொற்குடை சாமரையென்றிவை பணிமாறியே" (312)

"பொன்னின்மாலை மலர்மாலை பணிமாறி" (273)

என்ற பரணித்தொடர்களிற்போல, ஈண்டும் 'ஈச்சோப்பி பணிமாற' எனக் கூறப்பட்டதாம். திருச்சின்னம் பணிமாறுதல் என்று இக்காலத்தும் வழங்குவர். இதனால் அத்தொடர் ஒற்றுமிகாதே வைத்துப் பொருள் கொள்ளற்பாலதென்க. கவரிமுதலியனபோல, ஈச்சோப்பியும் ஈமுதலியவற்றை ஓட்டுதற்குரியதேனும், தொழிலாகக்கூறுவதற்கு வழக்கின்மையின், உபசாரக் கருவியாகக் கொள்வதேவேண்டும் என்க.

(6) கரிகாலன் காவிரிக்கரைகட்டிய வரலாறு.

"தொழுது மன்னரே கரைசெய் பொன்னியிற்
றொடர வந்திலா முகரி யைப்படத்
தெழுது கென்றுகண் டிவைமி கைக்கண்
றிங்க ழிக்கவே யங்க ழிந்ததும்," (184)

இத்தாழிசையுள் 'இதுமிகைக்கண்' என்று முன் பதிப்புக்களிற் கண்ட பாடத்தை மாற்றி, 'இவை மிகைக்கண்' என்று புதியபதிப்பில் அச்சிடப்பட்டுள்ளது. கரிகாலன்மரபினான தெலுங்குசோடராது

சாஸனமொன்றில் — 'தன் பாதகமலங்களிற் பொருந்திய கண்களை யுடையவரான திரிலோசனன் முதலிய அரசரைக் கொண்டு கரிகாலன் காவிரிக்கரை கட்டுவித்தனன் என்று கூறப்படுகின்றதென்றும், அவ்வாறு கட்டுவித்தபொழுது, தன்னாணைக்கடங்கிக் கரைகட்டவாராத ஓர் அரசனை அவன் கண் கொண்டானென்று தெரிதலால், அவனை இங்குக் கூறிய முகரியாதல்வேண்டுமென்றும், 'இருமிகைக்கண்' என்று பாடங்கொண்டு அதற்கேற்ப வரலாறு கற்பித்துக் கூறுவாரும் உளர்' என்றும் அரும்பொருள்விளக்கத் தெழுதப்பட்டுள்ளன. இதனால் திரிலோசனன் கண்ணையன்றி, வேறு அரசனொருவன் கண்களை யழித்தவன் கரிகாலன் என்பது பதிப்பாளர்கருத்தென்பது தெரிகின்றது.

தெலுங்குசோடர்கள் சாஸனங்களிலே, பிரசஸ்தி (மெய்க்கீர்த்தி) கூறுந் தொடக்கத்தில், அவரது முன்னோனாகக் கரிகாலன் புகழப்பட்டிருப்பது உண்மையே. அவனைப் பற்றிவரும் அப்பிரசஸ்தியின் வடமொழித்தொடர் வருமாறு:—

> " சரண ஸரோருஹ விஹத விலோசன த்ரிலோசந
> ப்ரமுகாகில ப்ருதிவீச்வர காரித காவேரீ தீர
> கரிகாலகுல...மஹாமண்டலேச்வர"

என்பது. இதன் பொருள்:— (தன்) 'பாதகமலத்தால் அழிக்கப்பட்ட விசேஷ நேத்திரங்கொண்ட திரிலோசனன் முதலிய அரசர்களாற் கட்டப்பட்ட காவிரிக்கரையை யுடைய கரிகாலன்குலத்திற்றோன்றிய....இன்னான்' என்பதாம். இதனால், திரிலோசனன் என்பவன், காவிரிக்கரை கட்டுவதற்கு உதவிசெய்ய வாராது கரிகாலனுடன் பகைத்தவனென்பதும், அவனுக்கு மிகையாக அமைந்த கண்ணை அக்கரிகாலன் தன் பாதகமலத்தால் அழித்தவனென்பதும், அவ்வழிவால் தன் வலிமை குன்றிப் பின்பு அப்பகைவன் காவிரிக்கரைகட்ட உதவினனென்பதும் நன்குபெறப்படும்; இத்திரிலோசனன் பல்லவ வமிசத்தவனென்பதும் அவன் கொண்டிருந்த மிகைக்கண் (விலோசனம்) நெற்றியில் அமைந்திருந்ததென்பதும்—

> " த்ரிநேத்ர பல்லவம் ச்ருத்வா கர்விதம்...
> ...லலாடஸ்ய பக்ஷம் க்ருத்வா வ்யராஜத "

எனச் சிதைந்து வழங்கும் மற்றொரு சாஸன சுலோகத்தால் * பெறப்படுகின்றன. திரிநேத்திரபல்லவன் என்ற அரசனொருவன் தெலுங்கு நாட்டை யாண்டவனென்பதும், ஏறக்குறையக் கரிகாலன் காலத்தவனென்பதும் சாஸனங்களாலும் அறியப்படுகின்றன. (I.M.P. Kt. 891.)

இனி, தெலுங்கசோடனது சாஸனத்தில்—'தன் பாதகமலங்களிற் பொருந்திய கண்களுடையவரான திரிலோசனர்' என்ற பொருளிலுள்ளதாகப் பதிப்பாளர்காட்டியவாக்கியம் மேற்குறித்த வடமொழிப் பிரசஸ்தியின் வேறானதென்று தெரியவில்லை. அதனால், 'சரண ஸரோருஹ விஹித விலோசந' என வருந் தொடரிலே, விஹத (=அழிக்கப்பட்ட) என்ற பதத்தை விஹித (=வைக்கப்பட்ட) என்று மாற்றி அவர் அப்பொருள் கொண்டிருத்தல்வேண்டும். இங்ஙனமாயின், 'பாதகமலங்களில் வைக்கப்பட்ட கண்' என்புழி, வைக்கப்பட்டதற்குக் காரணம்யாது என்ற கேள்விக் கிடமுண்டாதலின், 'விஹித' என்ற பதம் இயையாமையாலும், சோடரது சாஸனங்கள் பலவற்றிலும் 'விஹத' என்றே காணப்படுதலாலும், சயங்கொண்டாரும் இச்சொற்கேற்ப, 'இங்கழிக்கவே' என்று பாடுதலாலும், பகையரசனொருவனது பாதங்கள், 'சரணஸரோருஹ' என்று விசேடிக்கப்பட்டன என்பது சிறிதும் ஏற்காமையாலும் அவ்வாறு மாற்றிப் பொருள்கொண்டது பொருந்தாதென்க. எனவே, அடங்காதிருந்த பகைவனது செருக்குக்குக் காரணமான நெற்றிக்கண்ணை யழித்து, அவனையும் ஏவல்கொண்டவன் கரிகாலனென்பதே, அப்பிரசஸ்தியின் கருத்தென்பது தெள்ளிது. இவ்வரலாறே,—

"மண்கொண்ட பொன்னிக் கரைகட்ட வாராதாற்
கண்கொண்ட சென்னி கரிகாலன்" (குலோத்-உலா)

---

* காலஞ்சென்ற ஸ்ரீ வை. மு. சடகோபராமாநுஜாசாரியர் அவர்கள் எழுதிய கலிங்கத்துப்பரணி இராசபாரம்பரியவுரை பார்க்க. மேலும், அவ்வாசாரியரவர்கள், பிரதாபருத்திரன் என்பவன் முக்கண்ணுடையனாய்த் தனக்கடங்காதிருந்தனாக, சோழன், அவனைப் படத்தில் எழுதிவரச்செய்து, அவனது நெற்றிக்கண்ணையழித்துப் போரில் அவனையும் வென்றனனென்று 'சோழராஜாக்கள் சரித்திரம்' என்ற நூலில் ஒரு வரலாறு உள்ளதென்றுங் குறிப்பிட்டுள்ளார். இது, தெலுங்குசோடரது பிரசஸ்திவாக்கியத்தின் கதையை ஒருபடியாக விளக்குதலுங் காண்க.

" கண்கொண்டான் பொன்னிக் கரைகட்ட வாரானை
எண்கொண்ட சோழ னிரங்கேசா " (இரங்கேசவெண்பா)

எனப் புலவர்களாற் பாடப்பட்டதூஉ மென்க.

பாணிகொண்ட அபயனகாலத்தவனும், தெலுங்குசோட அரசனு மாகிய கன்னரதேவன் என்பவனாட்சியில், கி. பி. 1122-ல் அமைந்த சாஸனமொன்றினும் (S. I. I. iv, NO. 1328), கரிகாலன்செய்தி குறிக்கும் மேற்குறித்த பிரசஸ்திவாக்கியம் வருகின்றது. இதனால், சயங்கொண்டார் தங்காலத்ததாகிய சாஸனவரலாற்றோடு ஒப்பவே மேற் காட்டிய தாழிசையைப் பாடியவர் என்பது ஐயமின்றிப் போதரும். இதுகாறுங் கூறிப்போந்தவற்றாலும், 'இவைமிகைக்கண்' என்று பன்மையாகக் கருதற்குக் காரணமின்மையாலும் 'இதுமிகைக்கண்' என்ற பழையபாடமே ஈண்டுக் கொள்ளத்தக்கதாமென்க.

[முகரி என்ற சொல்லின் பொருள்]

இனி, முகரி என்பது அரசனொருவன்பெயராகவேண்டுமென்றும், அவன் பெயரால் முகரி என்ற ஊர் உண்டாயிற்றென்றும் அரும்பத விளக்கத்தெழுதியவாறு கருதுதற்கு ஆதாரங் குறிக்கப்படாமையால் அங்ஙனமே துணியக்கூடவில்லை. இங்ஙனமன்றி, வங்காளப்பிரதேசத் தில் ஆட்சிபுரிந்த மௌகரிகள் என்ற அரசவகுப்பினருள் ஒருவனைக் குறிப்பதாகக் கருதுவதும் ஏற்புடைத்தன்று. சயங்கொண்டார், தங்காலத்துச் சாஸனங்கூறும் வரலாற்றைத் தழுவியே பாடுதலும், அச்சாஸனத்துக் கண்ட திரிலோசனனையே திரிநேத்திரபல்லவன் என்று மற்றொரு சுலோகம் வழங்குதலும் மேலெல்லாம் நன்கு விளக்கப்பட்டன. அதனால், அவன் பல்லவமரபினன் என்பது தெளியக்கிடத்தலால், மௌகரியமரபுடன் அவனை இணைப்பதற்கு இடமில்லை என்க. மற்று, இச்சொற்குப் பொருள் யாதெனிற் கூறுவல் :—

முகரி எனத் தமிழ்விகுதிபெற்ற வடசொல், ஆரவாரிப்போன் என்ற பொருளுடையதாம். முகரம்-ஆரவாரம்; ['முகரமிக்க வீரரொடு' என்பது இரகுவம்மிசம் (இரகுவுற்-23).] அஃது ஈண்டுத் தம்மாணைகூறி ஆரவாரிக்கும் குறும்பரசனைக் குறிக்கும். இப்பொருளில் 'ஆரட்டர்', என்ற பெயர் குறும்புசெய்யுமரசர்க்கு வழங்குதலும் காண்க. [குறும் பரை அடக்குபவராதலின் 'ஆரட்டமுக்கி' என்ற திருநாமம் திருமங்கை

யாழ்வார்க்கு வழங்குதலும் அறியற்பாலது.] அங்ஙனமே, இம்முகரியும் பண்டைநாள்முதலே அப்பொருளில் வழங்கிவருவதென்பது —

"மூள்வாய தொழிற்பஞ்சேந் திரியவஞ்ச
 முகரிகாள் முழுதுமிவ் வுலகை யோடி
நாள்வாயு நும்முடைய மம்ம ராணை
 நடாத்துகின்றீர்க் கமையாதே, யானேல் வானோர்
நீள்வான முகடதனைத் தாங்கி நின்ற
 நெடுந்தூணைப் பாதாளக் கருவை யாரூர்
ஆள்வானைக் கடுகச்சென் றடைவே னும்மால்
 ஆட்டுணே னொட்டந்திங் கடையேன்மினே"

(தேவா. பக். 719, பாட். 9)

என்ற தேவாரப்பாசுரத்தால் அறியலாம். பஞ்சேந்திரியங்களைக் குறும்பு செய்யுந் தலைவராக உருவகப்படுத்தி, அவரது கொடுங்கோன்முறைக்குத் தாம் அடங்காமையைத் திருநாவுக்கரசுநாயனார் பெருமிதம்பெறப் பாடுஞ் சிறப்பு நோக்கத்தக்கது. எனவே முகரிக்குக் கூறப்படுரிய பொருளே 'தொடரவந்திலா முகரி' என்பதனுள்வருஞ் சொற்கும் கொள்ளற்பாலதென்பதும், முதலிற் குறித்த சாஸனப்பிரசஸ்திக் கருத்தைத் தழுவியே சயங்கொண்டார் பாடுதலின், அதனுட் கண்ட திரிலோசனனையன்றி வேறெவனையும் தம் தாழிசையுள் அவர் குறித்தவராகார் எனபதும் ஐயமின்றித் தெளியத்தக்கன.

(7) இராசராசன்.

"இருண்முழுது மகற்றும்விது குலத்தோன் றேவி
 இகல்விளங்கு தபனகுலத் திராசராசன்
அருடிருவின் திருவயிற்றில் வந்து தோன்றி
 ஆலிலையி னவதரித்தா னவனே மீள" (221)

என்பது, பழைய பதிப்புக்களில் அபயனது அவதாரங்கூறுமிடத்து அமைந்துள்ள தாழிசை. இதனுட்கண்ட இராசராசன் என்பவன், கங்கைகொண்டசோழனான இராசேந்திரனே—என்று சரித்திர அறிஞர்கள் கருதி எழுதலாயினர். (தபனகுலத்து=) சூரியகுலத்தவனான இராசராசனுடைய மகள்வயிற்று உதித்தவன் அபயன்—என்று சயங்கொண்டார் பாடுதலால், அவ்விராசராசப்பெயர், அபயனது தாய்ப்

பாட்டனாகிய இராசேந்திரனையே குறித்ததாகல்வேண்டும் என்று அன்னோர் கருதுவர் இயல்பேயாம். ஆனால், அத்தாய்ப்பாட்டனை அவனுக்குரிய பெயராற்கூறாது, அவன் தந்தை பெயரையிட்டுச் சயங்கொண்டார் பாடினரென்பது, அவர்காலவியல்புக்குச் சிறிதும் ஏற்றதன்று. சோழர்களிலே, இராசராசன், இராசேந்திரன், விசயராசேந்திரன், வீரராசேந்திரன், அதிராசேந்திரன் என்போர் ஒருவர்பின்னொருவராகப் பட்டம் பெற்றவர்கள். அவ்வரசர்கள்கொண்ட இவ்வியற்பெயர்களைச் சாஸனங்கள்கூறுமுறையே அவர்கள் காலத்துப் புலவரும் மாற்றாமலே பாடியிருப்பரென்பதில் ஐயமில்லை. அம்முறைதவறிப் பொருட்பேறுபற்றிப் பெயர்களை மாற்றிக்கூறுவதாயின், ஒருவரை மற்றொருவராக அவர் காலத்தே மயங்கநேர்ந்திருக்கும். இராசராசன் என்ற இயற்பெயர் பெற்றவன், பிரபல வெற்றிவேந்தனும் அபயனுக்குத் தாய்வழியிற் பிரபிதாமகனுமானவன். இவனுக்கும் இவன்மகனான இராசேந்திரனுக்கும் ஒரேபெயரைப் பிற்காலத்தார் தெரியாமற் கூறநேரினும், சயங்கொண்டார் தெரிந்துகூற ஒருப்படார் எனக. இனிப் புதியபதிப்பில் இத்தாழிசை—

"இருண்முழுதும் புவியகல விரவிகுல
மினிதோங்க இராசராசன்
அருள்திருவின் திருவயிறு மாலிலைபி
னவதரித்தா னவனே மீள"

என்று காணப்படுகின்றது. இது சிறந்த பாடம் என்னத் தட்டில்லை. ஆனால், இராசராசன் என்பதற்கு, சரித்திரவறிஞர் கூறிய இராசேந்திரன் என்ற பொருளே அரும்பதவிளக்கத்து எழுதப்பட்டுள்ளது. 'தபனகுலத்து' என்ற அடைக்கேற்ப அவ்வாறு அவர் கருதநேர்ந்ததாயினும், இப்பாடத்துக்கு அங்ஙனங் கொள்ளவேண்டுவதின்று.

பரணிகொண்ட அபயன் கங்கைகொண்டசோழன்மகளாகிய அம்மங்கையை மணந்தவனும், சந்திரவமிசத்துச் சளுக்கியவேந்தனுமான இராசராசன் என்பவனுடைய புத்திரன்; சோழருடைய வமிசம் சந்ததியற்றிருந்தநிலையில், தௌகித்திரனாய்ச் சுவீகாரம்புகுந்து, அவர தாயுரிமைபெற்றுச் சோழனாக முடிசூடியவன். ஆகவே, மேற்கண்ட பாடத்துக்கு 'இரவிகுலம் இனிதோங்கும்படி, (சளுக்கிய) இராச

ராசனால் பேரன்புசெய்யப்பெற்ற திருவனைய தேவிவயிற்றில் அவதரித்தனன் அபயன்' என்று பொருள்கூறுதலே பெரிதும் பொருந்துவதாதல் காண்க. இதனால், சோழவமிசம் வாழப் புத்திரனைப் பெற்றளித்த ஜனகபிதாவையும் கவி மறவாது பாடிச் சிறப்பித்தமை விளங்கும். இராசராசன் அருள் திரு—இராசராசனால் தலையளி செய்யப்பெற்ற திருப்போன்ற அவன் தேவி. அருளுதல் இப்பொருளதாதலை—'அருளாயாகலோ கொடிதே' (புறம். 144), 'அரும்பவிழ்தாரினா னெம்மருளுமென்று' (நாலடி. 390) என்னுஞ் சான்றோர்கூற்றுக்களாலும் உணர்க. கணவனது பேரன்பு மனைவிக்குரியது என்னத் தட்டில்லை; 'ஆறுடைய சடைமுடியா னருளுடைய பெருந்தேவி' என்றார் சயங்கொண்டாரும் (199); இனி, 'இராசராசன் உவந்த தேவி' எனினுமாம்; அருளுதல் உவத்தற்பொருளில் வந்ததை 'நின்னவ்வயிறருளி' என்பதற்கு நச்சினார்க்கினியர் கூறிய உரையா னறியத்தக்கது. (தொல். பொரு. 146).

(8) பாரிபோகம்.

சரிக ளந்தொறுந் தங்கள் சயமகள்
தன்னை மன்னப யன்கைப் பிடித்தலும்
பரிக ளுங்களி றுந்தன ராசியும்
பாரி பேர்கம் கொடுத்தனர் பார்த்திபர். (242)

இத்தாழிசையுள் 'பாரிபோகம்' என்றிருந்த பழையபாடம் 'பாரிபேர்கம்' என்று பதிப்பிற்பில் திருத்தப்பட்டுள்ளது. ஸ்திரீதனம் என்ற பொருளில் 'பாரிவர்ஹ' என்ற சொல் வடமொழியிலிருத்தல் உண்மையே. இச்சொல்லையே சயங்கொண்டார் ஆண்டவராயின், 'பாரிவர்கம்' என்று தமிழ்முறைக்கியைய அமைத்திருப்பரேயன்றி, இடை வகரத்தை அவசியமின்றிப் பகர வெகரமாகத் திரித்துவழங்கார் என்பது திண்ணம். 'பாரிவர்கம்' என்ற பாடமுள்ளதாகவுங் காணவில்லை. அதனால், 'பாரி போகம்' என்பதே அவர் அமைத்த தொடர் என்பது பெறப்படுகிறது. பாரிபோகம் என்பதும் ஸ்திரீதனம் என்ற பொருள் பயப்பதேயாம். பாரிபோகம்—மகளிர் இன்பம்; அதற்குரியது பாரிபோகம்; அஃதாவது ஸ்திரீதனம் எனக. இனி, 'பாரியாபோகம்' என்பது, தமிழிற் பாரிபோகம் என மருவியதெனினும் அமையும்; ஈண்டுப் போகம் என்பது பிறர் அனுபவிக்கும்படி கொடுக்கும் பூமிதன முதலியன; சாலாபோகம் (-அன்னசாலைக்கு விடப்படும் இறையிலி), அர்ச்சனாபோகம் (—பூசனைக்கு விடப்படுவது) என்ற வழக்குங் காண்க.

(9) ஏழிசைவல்லபி.

"வாழி சோழகுல சேகரன் வகுத்த விசையின்
மதுர வாரியென லாகுமிசை மாதரிதெனு
ஏழ பாருலகோ டேழிசை வளர்க்க வுரியான்
யானை மீதுபிரி யாதுட னிருந்து வரவே." (272)

அபயன் பரிவேட்டைக்குப் புறப்பட யானைமீது ஏறியபோது அவனுடன்விளங்கிய மனைவியைக் குறிக்குஞ் சந்தர்ப்பத்தில் இத் தாழிசை பாடப்பெற்றுளது. இதனுள் 'ஏழுபாருலகொ டேழிசை வளர்க்க வுரியான்' என்றுள்ள பாடம் முன்னைபதினும் திருத்தமுடையதேயாம். ஆனால், சயங்கொண்டாரது கருத்தாகாத குறையொன்று அதனுட் காணப்படுகின்றது. 'ஏழுபாருலகொடு' என முன்வருந்தொடரால், வளர்க்குமுரிமை அபயனுக் குரியதாகக் கருதி, 'உரியான்' என்று ஆண்பால்விகுதி புணர்த்து — 'ஏழுலகையும் ஏழிசையையும் வளர்க்க உரிமைபூண்ட அபயன்' என்று பதிப்பாளராற் பொருள் எழுதப்பட்டுளது.

அபயனது ஆட்சியின் பிற்பகுதிக் காலத்தே அவன் மனைவியாக விளங்கியவர், தியாகவல்லி ஏழிசைவல்லபியென்னும் இருவர். முன்னவள் தலைமைத்தேவியும், பின்னவள் அபயனது பேரன்புக்கு உரிமைபூண்ட மனைவியுமாவள். அதனால், ஏழிசைவல்லபி தன்னாயகன் ஏறிய யானையில் வீற்றிருந்து உடன்சென்றதை இத்தாழிசையிலும், பட்டமஹிஷி தனியாக உடன்போந்ததை அடுத்த தாழிசையிலும் கவி பாடலாயினர். இக்கருத்திற் பதிப்பாளரும் வேறுபட்டவரல்லர். அங்ஙனமாயின், 'தியாகவல்லி....சேர்ந்துவரவே' என்று தலைமைத்தேவியின்பெயரைக் குறிப்பிட்ட சயங்கொண்டார் ஒருகளிற்றில் ஏறிய காதலியாகிய ஏழிசை வல்லபியின்பெயரையும் அங்ஙனமே மறவாது குறிக்கவேண்டியவ ரன்றோ? அதனால், 'ஏழிசை வளர்க்க வுரியாள்' என்பதனால் அவ் வேழிசைவல்லபியையும் அவர்குறிப்பிட்டவராதல்வேண்டும் என்க. ஏழு பாருலகொடு ஏழிசைவளர்க்குமுரிமை பாட்டிற் கூறப்படுதலால் அத் தொடர் அபயனுக்கன்றி அவ னிரண்டாந்தேவிக்குப் பொருந்துமாறு எங்ஙனமெனிற் கூறுவல்.

சோழவரசர்களில், முக்கியமாக அபயனுடைய தேவியருள்ளே தலைமையானவளை—புவன முழுதுடையாள் அவனிமுழுதுடையாள் என்றும், அடுத்த தேவியரை—ஏழுலகுமுடையாள், திரிபுவனமுடையாள், உலகமுடையாள் என்றும் இவ்வாறு அவரியற்பெயர்களையொட்டி விசேடிப்பது, அக்காலத்துப் பெருவழக்காகும். * அபயன்மெய்க்கீர்த்தியுள்,

" வீரமுந் தியாகமும் விளங்கப் பார்தொழச்
சிவனிடத் துமையெனத் தியாக வல்லி
உலகமுழு துடையா ளிருப்ப வவளுடன்
கங்கைவீற் றிருந்தென மங்கையர் திலதம்
ஏழிசை வல்லபி யேழலகு முடையாள்
வாழி யமர்ந்தினி திருப்ப வூழியும்
வீரசிம் மாசனத்து வீற்றிருந்தருளின—"

என்று இம்முறையே பாடப்படுதல் நோக்கத்தக்கது. தங்காலத்ததாகிய மெய்க்கீர்த்தி 'ஏழிசைவல்லபி யேழுலகுமுடையாள்' என்று கூறியவாறே சயங்கொண்டாரும்—இரண்டாந் தேவியின் இயற்பெயர் சிறப்புப்பெயர்களின் பொருள்களை விரிப்பவர்போல—'ஏழுபாருலகொடேழிசை வளர்க்க வுரியாள்'என்று பாடலாயினர் என வுணர்க. அபயன் மகன் விக்கிரமசோழன்தேவியை 'எண்ணு முலகங்க ளேழுடைய பெண்ணணங்கு' என்றார் கூத்தரும் (விக். உலா). ஏழுலகுமுடைமையாவது— சத்த தீவங்களையுந் தாய்போல் வளர்க்கும் உரிமையாம். இசைமாதாகிய வளர்க்கவுரியாள் என இயையும். அரிது எது—அரிய செயலென்று உலகம் கூற என்றவாறு. அரியது என்றுமல் எனினுமாம். இனி, பட்டத்துத் தேவியாகிய தியாகவல்லியை—'புவனி காவலர்க டேவியர்கள் சூழ்புடைவர' என்று புலவர் சிறப்பித்தலால் அவள் புவனமுழுதுடையாள் என்பது பெறப்படுதலும், ஏழிசை வல்லபி அபயனது காதற்றேவி என்று சயங்கொண்டார்வாக்குக் குறிப்பித்தல்போலவே, சிவபிரான் சடையிற்றரித்துச் சிறப்பித்த கங்காதேவியை அவட்கு மெய்க்கீர்த்தி உவமைகூறுதலும் ஈண்டு அறியத்தக்கவை.

* இங்ஙனம் வழங்குமுறையைக் கண்டு, டாக்டர் ஹூல்ஷ் (Dr. Hultzsch) துரையவர்கள் விவரமாக விளக்கியிருத்தல் அறியத்தக்கது. (S. I. I. III, 171-2.)

(10) திருமந்திரவோலையாள்.

"முறையி டத்தரு மந்திர வோலையாண்
முன்வணங்கி மொழிவதும் வேந்தர்தம்

திறையி டப்புற நின்றன ரென்றலும்
செய்த நோக்கில்வந் தெய்தி யிருக்கவே" (315)

இத்தாழிசையுள்—"தரு—வெளியிலுள்ளவர்களை அழைத்துவருகின்ற. ஓலை வெளியிலுள்ளவர்கள் அரசனுக்கனுப்புவதும், அரசன் வெளியிலுள்ளவர்களுக்கு அனுப்புவதுமாகிய ஓலை" என்று அரும்பத விளக்கத்து எழுதப்பட்டுள்ளது. இக்கூற்று ஆக்கியோரது கருத்தன்றாம். 'திருமந்திரவோலையாள்' என்பதே கவி கருதியமைத்த தொடர். இப்பாடம், சென்னை-மியூசியம் கையெழுத்துப் புத்தகசாலைப் பிரதியொன்றிலுங் கண்டது. திருமந்திரவோலை என்பது, அரசன் கட்டளைகளை அவன் சொல்ல எழுதுவதும் அவற்றை நிறைவேற்றுவதுமாகிய சோழராஸ்தான உத்தியோகம்.

"கோயில் நாயகஞ்செய்வார்களும் திருமாளிகைக்கூறுசெய்வார்களும் செய்யத் திருவாய்மொழிந்தருளினபடி.........இப்படிச் செய்யப்பண்ணுவது. எழுதினேன்,திருமந்திரவோலை இராசேந்திர மூவேந்தவேளான்." S. I. I. IV. 28.

என்று, அபயனது 36-ம்ஆண்டுச் சாஸனமொன்று கூறுகின்றது. 'திருமந்திரவோலை கோளாந்தகப் பல்லவராயன்' என்பவனும் அவ்வபயனது 30-வது ஆட்சி வருஷத்தில் அப்பதவியை அவன்கீழ் வகித்தவனே (S. I. I. iii, 161). ஆகவே, இத்தாழிசைப்பொருளாவது-("பகையரசர் அரண்மனை வாயிலினின்று) முறையிட, 'அவர் தம் திறையைச் செலுத்தற்கு மனைவாயிற்புறம் நின்றனர்' என்று திருமந்திரவோலையாள் வணங்கிக் கூறவும்" என்பதே யாகுமென்க.

(11) கருணாகரன்மரபு.

"இறைமொ ழிந்தளவி லெழுக லிங்கமவை
யெறிவ லென்றுகழ றெழுதனன்

மறைமொ ழிந்தபடி மரபின் வந்ததுல
திலகன் வண்டைநக ரரசனே," (328)

இத்தாழிசையுள் 'மறைமொழிந்தபடி மரபின்வந்த குலதிலகன்' என்பது கவியின்கருத்தமைதிபெற்ற தொடரன்று. 'வேதமொழிந்தபடி மரபில்வந்த குலதிலகன்' (கருணாகரன்)என்று,பொருணயமில்லாததொடரொன்றைப் புலவர்பெருமான் பாடினாராகாமை, ஊன்றி நோக்குவார்க்குப் புலனாம். அதனால், இப்பாடத்துள் ஒரு தவறுண்டென்பது பெறப்படும். அத்தவறுவது பதி எனற்பாலது படி என்று பிறழ்வுற்றதே என்க. மறைமொழிந்த பதியாவான் பிரமன். கருணாகரன் பல்லவமரபினனென்பது சயங்கொண்டார்வாக்கால் நன்கறிந்ததே. இப்பல்லவவமிசம் பிரமனை ஆதியாகக்கொண்டது என்பதைப் பல்லவசாஸனங்கள் பலவற்றாலுந் தெளியலாம். "ஸ்வஸ்திஸ்ரீ இவ்வகையே ப்ரஹ்மன் ஆதியாக வாரா நின்ற பல்லவவமிசத்துள் பரமேசுவரப்போத்தரையன்" என்று பழைய தொருசாஸனம் கூறுதலும் காண்க (S. i. i. iv, P. 10). ஒருவர்வாய்க் கேட்டு ஏடெழுதும்போது, பதிக்கும் படிக்கும் உள்ள ஒலிவேற்றுமை புலனாகாமையால் நேர்ந்த பாடப்பிறழ்வாகவே இது கருதற்குரியது.

(12) தலைமைச் சேனாபதி.

அபயனேவலாற் கலிங்கப்போர்க்கு ஆயத்தமாகிய தலைமைச்சேனாபதியும் உதவிச்சேனாபதிகளும் தத்தங் களிறுகளில் ஏறியவாற்றைச் சயங்கொண்டார் மூன்றுபாடல்களாற் சிறப்பிக்கின்றார். அவற்றுள், தலைமைச்சேனாபதியான கருணாகரத்தொண்டைமானைப்பற்றிய தாழிசை புதுப்பதிப்பிற் காணப்படுமாறு:—

> "தண்ணார் மலர்சேர் திரடோளபயன்
> தானேவிய சேனை தனக்கடையக்
> கண்ணாகிய சோழ னிசக்கரமாங்
> கருணாகரன் வாரண மேற்கொளவே" (350)

இதனுள் 'சோழன சக்கிரமாம்' என்பது பழையபாடம். அது, 'சோழ னிசக்கரமாம்' என்று இப்போது திருத்தப்பெற்றும்—"சேனை முழுமைக்குங் கண்போன்ற (அபயன்மகன்) விக்கிரமசோழனும், படைத்தலைவனுக்கும் படைக்கும் உண்மையான கைபோன்ற கருணாகரனுங் களிற்றை மேற்கொள்ள" என்று பொருளெழுதப்பட்டுமுள்ளது.

அபயன்மகனான விக்கிரமசோழன் இளவயதிலே கலிங்கத்தின்மேற் படையெடுத்துச்சென்று, ஆங்குநடந்த போரொன்றில் வெற்றிபெற்றவ

னென்பது உண்மையே. ஆயின், அது, சயங்கொண்டார் பாடிய கலிங்கப்போர்தான் என்று துணிய இடமில்லை. மற்று அப்போர், தெலுங்கவீமன் என்ற கலிங்கராசனுடன் நடத்தியதென்பது,

"தெலுங்க வீமன் விலங்கன்மிசை யேறவும்
கலிங்க பூமியைக் கனலெரி பருகவும்
ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கி
வேங்கை மண்டலத் தாங்கினி திருந்து
வடதிசை யடிப்படுத் தருளி"

எனவரும் அவன் மெய்க்கீர்த்தியாற் றெளிவாம். கூத்தரும் விக்கிரம சோழனுலாவில்—

"ஏனைக் கலிங்கங்க ளேழனையும் போய்க்கொண்ட
தானைத் தியாக சமுத்திரமே"

என்று பாடியதும் இக்கலிங்கவெற்றியாகவே கருதத்தகும். அபயன் நடப்பித்த கலிங்கப்போர் விக்கிரமனடத்திய அப்போரினும் வேறானதென்பது, சாஸனபரிசோதகர்க்கும் ஒப்பமுடிந்ததே. இனி, சயங்கொண்டார் பாடிய கலிங்கப்போர்க்கு விக்கிரமனுஞ் சென்றிருந்தவனாயின், உடன்சென்ற தலைவர்களின்பெயர்களைக்குறிப்பிட்டுத் தனித்தனித் தாழிசையாற் பாடும் அப்புலவர், இளவரசனென்பது விளங்க அவ்விக்கிரமன்பெயரையுங் குறிப்பிட்டுச் சிறப்பித்திருப்பாரன்றோ? ஒரு தா[illegible] கருணாகரனுடன் சேரவைத்தும், பெயர்விளக்கமலும், இவ்வரசனை இவனைச் 'சோழன்' என்றும் கூறினர் என்பது பொருந்துவதாகவில்லை. அன்றியும், 'சோழ னிசக்கரமாம்' என்ற பாடத்துக்கு—'அபயனுக்கும் படைக்கும் உண்மையான கைபோன்ற கருணாகரன்' என்ற பொருள் தரப்பட்டுளது. இப்பொருள் கொள்ளின் அவ்வபயன் கொண்ட கரம், போலிக்கரம் என்பதுபட்டு, அவன தியற்கை வலியைக் குறைவுபடுத்துவதாகவே முடியும்.

"இராமன் தோள்வலி கூறுவோர்க்கே" (கம்பரா)

....—"மீண்டமரர்,
தாளிரண்டு நோவத் தனித்தனியே யோடியநாள்
தோளிரண்டு மன்றே துணை" (நளவெண்.)

"ஆளரி யேறு போல்வார்,..............
தோளிணை துணையே யாகப் போயினார் (பெரியபுரா.)

என்றாற்போல, வீரரது புசபலத்தை மாசறச் சிறப்பித்தலே பண்டை வழக்காகும். இவற்றால், புதுப்பாடத்தாற் பொருட்சிறப்பொன்றும் பெறப்படாமை காண்க.

[கருணாகரனைச் சக்கரமாக உருவகிக்கை.]

இனி இப்பதிப்பில் ஒதுக்கப்பட்ட 'சோழனை சக்கிரமாங் கருணாகரன்' என்ற பழையபாடத்தை ஆராயுமிடத்து, அதுவே பொருட்பொலிவுகொண்டு திகழ்கின்றது. அதனைச் சிறிது விளக்குவேன். 'சக்கிரமாம்' என்ற பாடத்தின்படி, தலைமைச்சேனாபதியை இத்தாழிசையும், உபசேனாபதிகளை அடுத்துவருந் தாழிசைகளிரண்டும் குறிப்பனவாக அமைகின்றன. 'சேனை முழுதுக்குங் கண்ணானவனும், சோழ (அபய)னது சக்கராயுதம்போன்றவனுமாகிய கருணாகரன்' என்பது இதன் பொழிப்பாம். மேலெல்லாந் திருமாலின் அவதாரமாக அபயனைப் புகழ்ந்துவந்ததற்கேற்பப் போர்க்கெழுந்த அவன்படைத்தலைவனை அவனது சக்கரப்படையாகக் கவி உருவகிக்கலாயினர். கலிங்கப்போர்க்குத் தானே படையெடுத்துச்சென்றவனல்லனாயினும் (458)— பகையறுத்தற்குத் திருமால் தன் சக்கரத்தாழ்வானை ஏவுமாறுபோல அவனமிசமாகிய அபயனும், தன் சக்கரமாகிய கருணாகரத்தொண்டைமானை ஏவினான் என்றார்; என்றதன்கருத்து—துணைக்காரணமான கருணாகரச் சக்கரத்தின் செய்கை யாவும் அதனைத் திரித்துவிட்ட நிமித்தகாரணனாகிய அபயனுடையனவே என்பதாம். திருமாலாக உருவகித்து அபயனது அவதாரங்கூறியவிடத்தே, சயங்கொண்டார்—

" சக்கர முதற்படையொ ரைந்துமுத னாளே
தன்னுடைய வானவத னாலவை நமக்குத்
திக்குவிச யத்தின்வரு மென்றவை பயிற்றிச்
செங்கைமலர் நொந்தில சுமந்தில தனக்கே " (234)

என்பதனால், தெய்வாமிசமாகிய அவன் ஐம்படைதரியாமைக்குக் காரணங் குறிப்பிட்டார்; குறிப்பிட்டதற்கேற்ப—

" கண்டு காணான் படைவலி நீயும் அத்
தண்டு கொண்டவன் சக்கரம் வந்ததே " (375)

என்று—கலிங்கராசனுக்கு அவன் மந்திரி கருணாகரன் படையெடுத்து வருவதைக் கூறுமிடத்தும் அவனை அபயன்சக்கிரமாகவே உருவகித்துப் போந்தமை காணலாம். ஆகவே, 'சோழன சக்கிரமாங்*கருணாகரன்'என்பதே, சயங்கொண்டார் கருதியமைத்த தொடர் என்பது ஐயமின்றிப் போதரும். இனி, அபயனை —"திரிபுவனசக்கரவர்த்திகள் ஸ்ரீ குலோத்துங்கசோழதேவர்" என்று கூறுவது அவன்காலவழக்காதலின், அச்சக்கரவர்த்தியின் சக்கிரமாகக் கருணாகரனைக் கவி கூறினர் என்றலும் பொருந்தும். சந்தநோக்கி, 'சோழன சக்கரம்' என, ஆறுவதன் பன்மையுருபு ஒருமைக்கண் மயங்கியது. 'புல்லியவேங்கடம்' (=புல்லி என்பானது வேங்கடம்) எனப் புறநானூற்றினும் (385), 'தப்பினபிள்ளைகளைத் தனமிகு சோதிபுக' எனப் பெரியாழ்வார்திருமொழியினும் (1, 5, 7), 'எனகருத்திடை'எனக் கந்தபுராணத்தும் (மேருப். 56) முன்னோரும் பின்னோரும் சிறுபான்மை இம்மயக்கம்படக் கூறுதலுங் கண்டுகொள்க. இனி, 'கண்ணாகிய கோனியல் சக்கிரமனங்—கருணாகரன்' என்ற பாடம் 'மியூசியம்' புத்தகசாலைப் பாணிப்பிரதியொன்றிற் காணப்படுதலால் அதுவும் இயைத்துக்கொள்ளற்பாலது.

(13) உபசேனாபதிகள்.

"தொண்டையர்க் கரசு முன்வருஞ் சாபி
துங்க வெள்விடை யுயர்த்தகோன்
வண்டையர்க்கரசு பல்லவர்க்கரசு
மால்க வித்றின்மிசை கொள்ளவே" (351)

"வாசி கொண்டரசர் வார ணங்கவர
வாண கோவரையன் வாண்முகத்
தூசி கொண்டுமுடி கொண்ட சோழனொரு
சூழி வேழமிசை கொள்ளவே" (352)

[1. பல்லவராசர்]

இத்தாழிசையிரண்டும் கருணாகரனது உதவிச்சேனாபதிக ளிருவரைப் பற்றியனவாம். இவற்றுள், முன்னதிற் கூறப்பட்டவன் பல்லவரசன் என்பவன். இவன் கருணாகரனுக்குப் பதவியில் இளையனாயினும் உடன்பிறப்பால் மூத்தவனென்பது "தொண்டை

* சக்கிரமெனினும் சக்கரமெனினும் பொருந்தும்

யர்க்கரசு முன்வருஞ் சுரபி" என்னுஞ் சயங்கொண்டார்கூற்றால் வெளியாகின்றது. கருணாகரன் யானைமேற்கொண்டதைத் தனியே மேற்பாட்டுக் கூறிவிட்டமையால், இத்தாழிசை வேறு படைத்தலைவனொருவன் யானையேறியதைக் கூறுவதென்பதும், அவன் கருணாகரனது தமையனான சேனாபதியேயாதல்வேண்டும் என்பதும், அன்னான் வள்ளன்மையுள்ளவனென்பதும் 'முன்வருஞ் சுரபி' என்ற தொடரினின்று நன்கறியக்கிடக்கின்றன. இத்தொடர்க்கு இங்ஙனம் பொருள்கொள்ளாது வேறுகூறுதல் எவ்வாற்றானுஞ் சிறவாமை உய்த்துணர்க. அபயனது படைத்தலைமை வகித்தவருள், இராசராசமூவேந்தவேளார்—சேனாபதி பல்லவரசர் என்ற ஒருவர் (I.M.P. Tj. 189)உளர். இவர், சோழவரசியலிற் பெரிய அதிகாரியாக விளங்கியசெய்தி சாஸனங்கள் பலவற்றால் அறியக் கிடக்கின்றது. இவரன்றி, அபயன்காலத்துச் சேனாபதிப்பதவி வகித்த பல்லவரசர் என்ற பெயருடையார் வேறு காணப்பட்டிலர். கருணாகரனது சகோதரர் இவர் என்பதற்குத் தெளிவான ஆதாரம் இப்போது கிடைத்திலதேனும் சயங்கொண்டார்வாக்கானும் சாஸனக்கூற்றானும் அவ்வாறு கருத இடமுண்டென்றே சொல்லலாம். கருணாகரனது மூத்தசகோதரர் இவராயின், 'வெள்விடையுயர்த்தகோன் வண்டையர்க்கரசு' என்று அப்புலவர், இவர்க்குங் கருணாகரனுக்குரிய விசேடணங்களைக் கூறுதல் பொருத்தமே என்க. இனி, 'தொண்டையர்க் கரசின் முன்வருஞ் சுரவி' என்ற பாடம் மியூஸியம்-புத்தகசாலைப் பரணிப்பிரதியொன்றிற் காணப்படுதலும் அறிந்துகொள்ளற்பாலது.

[2. வாணகோவரையனும், முடிகொண்டசோழனும்]

இரண்டாந்தாழிசை, மற்ற உபசேனாபதிகளான— வாணகோவரையன், முடிகொண்டசோழன் என்ற இருவரும் களிறுகளில் ஏறிய செய்தி கூறுவதாம். இவ்விருவரும் அபயன்காலத்தும் அவன்மகன் விக்கிரமசோழன்காலத்தும் அரசியலிற் றலைமைவகித்தவர்களே. இவருள் முதலவன் அதுவே பெயருடன் வழங்கப்பெறுவன் (I. M. P. Tj. 220) விக்கிரமசோழனுலாவிற் கூத்தரால்—

" புல்லாத மன்னர் புலாலுடம்பைப் பேய்வாங்க
ஒல்லாத கூற்ற முயிர்வாங்கப்—புல்லார்தந்
தாங்கு மடமகளிர் தத்த மிழைவாங்க
வாங்கும் வரிசிலைக்கை வாணனும் "

என்று புகழப்பட்டவன், இவ்வாணகோவரையனேயாவன். அடுத்த உபசேனாபதி, முடிகொண்டசோழ மூவேந்தவேளான் என்று சாஸனங்களிற் கூறப்படுவோனாதல்வேண்டும்(IBID. SA. 986). இவனும் விக்கிரமசோழன்காலத்து அரசியலதிகாரியாக விளங்கியவனே (IBID. SA. 786). அடியில்வரும் சாஸனப்பாட்டலொன்று இவன் அபயன் காலத்திற் படைத்தலைவனாயிருந்தமை குறிப்பிக்கின்றது.

" புயன்மேவு பொழிற்றஞ்சை முதற்பஞ்ச நதிவாணன் புதல்வன் பூண்ட
வடமேவு களியானை முடிகொண்டான் மாநெடுவேல் வத்தர் வேந்தன்
இயன்மேவு தோளபயற் கிருபத்தை யாண்டதனி லிடர்க்கரம்பைச்
செயன்மேவு மீச்சுரர்க்குத் திருநந்தா விளக்கொன்று திருத்தினானே."
(S. i. i. iv. 470).

மேற்கண்ட தாழிசையுள் வாணகோவரையன் வேழமிசைகொள்ள, முடிகொண்டசோழன் வேழமிசைகொள்ள எனத் தனித்தனி இயைக்க. ஒரு என்றது ஒப்பற்ற என்றவாறு. இங்ஙனம், பிரதமசேனாபதியும் உபசேனாபதிகளும் போர்க்கெழுந்த செய்தியைச் சயங்கொண்டார் பாடுதலால், சேனைத்தலைவனை கருணாகரன் இகன்மேற்சென்றதைக் குறிக்கும் 353-ம் தாழிசையுள்—'பல்லவர்கோன் வண்டைவேந்தன்' என்று கீழ்க்குறிப்பிற்கண்ட பாடமே கொள்ளத்தக்கதாம் என்க.

(14) சேனையின் செலவு.

" எழுதூளி யடங்க நடந்துதயத்
தெகுந்திசை கண்டது மீளவெழும்
பொழுதேக லொழிந்து கடற்படையெப்
பொழுதுந் தவிராது வழிக்கொளவே " (349)

இத்தாழிசையுள் 'மீள விழும்பொழுது' என்ற பழைய பாடம் 'மீள வெழும்பொழுது' என்று திருத்தப்பெற்றுள்ளது. இப்பாடப்படி 'உதயத்தே செல்லுந்திசையைக் கண்ட சேனை, மீளச் சூரியோதயத்தில் ஏகுதலொழிந்தது' என்பது பொருளாகும். ஆயின் இதற்கு ஒருநாள் விட்டொருநாள் சேனை சென்றது என்பது கருத்தாதல்வேண்டும். இக்கருத்துக்கு 'எப்பொழுதுந் தவிராது வழிக்கொளவே' என்று அடுத்துவருந் தொடர் விரோதமாகவுள்ளது. ஒருநாள் இடைவிட்டுச்

சேனை செல்வது, எப்பொழுதுந் தவிராது வழிக்கொள்வதாகாதன்றே? இவ்வாறன்றி, 'இரவுதோறும் நடந்து உதயந்தோறும் போக்கொழிந்து' என்று கருத்துக்கொள்ளுதற்கும் பாட்டில் இடமில்லை; இது கருத்தாயின், சேனை நடந்தது இரவென்றும், ஏகுந்திசையென்னாது நிற்குந் திசை என்றும் தெளிவாக ஆசிரியர் பாடியிருப்பர். இவற்றாற் புதிய பாடம் பொருட்பொருத்தமுறல் அரிதாகின்றது.

இனி, "மீள விழும்பொழு தேகலொழிந்து" என்ற பழையபாடத்திற்கு—'உதயத்தே செல்லற்குரிய திசையைக் கண்டு நடந்த சேனை, மீளப் பொழுதுசாயுங்கால் ஏகுதல் ஒழிந்து' என்பது பொருளாகும். இதனால் காலை ஏகுதற்கும், மாலை தங்குதற்கும் உரியவாகக்கொண்டு படைகள் வழிக்கொண்டன என்பது பெறப்படும். ஆயின் எப்பொழுதுந் தவிராது எனப் பின்வருந்தொடர் இக்கருத்துடனும் மாறுபடுவதே எனின், அத்தொடரிலுள்ள தவறொன்றைத் திருத்தி நோக்கப் பொருள் செவ்வனே புலப்படுமென்க. அத்தவறாவது—'எற்பொழுது' என்பது, 'எப்பொழுது' எனப் பாடப்பிறழ்வுகொண்டதேயாம். எனவே, காலையில் நடந்தும், மாலையிற் போக்கொழிந்து சிறிது இளைப்பாறியும், பின் இரவினும் விடாதுபுறப்பட்டும்—இவ்வாறு சேனையின் பகைமேற்செலவு இடையறாது விரைந்து நடைபெற்றது—என்ற சிறப்புடைப்பொருள் இப்பாடத்தாற் பெறப்படுதல் காணலாம். எற்பொழுது-இரவு; 'எல்லுறு பொழுதிற் செல்ல லோம்பி' என்பது பெருங்கதை (3, 7, 26.)

(15) அளத்திப்போர்.

" தளத்தொ டும்பொரு தண்டெழப் பண்டொர்நாள்
அளத்திற் பட்ட தறிந்திலை யையநீ " (372)

கலிங்கவரசனுக்கு அவன் மந்திரி, அபயனது வீரப்பிரதாபங்களைக் கூறிவருமிடையிலுள்ள இத்தாழிசையுள், 'அளத்திபட்டது' எனற்பாலது 'அளத்திற்பட்டது' என்று பாடப்பிறழ்வு கொண்டுள்ளது. அரும்பதவகராதியிற் குறித்தவாறு, சயங்கொண்டார் இப்பாட்டிற் கருதியது உப்பளமன்று; அளத்தி என்னு மூரில் அபயனால் நடத்தப்பட்ட போரேயாம். சளுக்கியருடன் நடந்த அப்போரில் அபயனடைந்த வெற்றியை—

" சொல்லெதிர் கோடிற் றல்லது தன்கை
வில்லது கோடா வேள்குலத் தரசர்
அளத்தியி லிட்ட களிற்றின தீட்டமும் "

என, அவன் மெய்க்கீர்த்தி கூறுவதுங் காண்க. கஞ்சம் ஜில்லா 'பர்லாகிமெடி' தாலூகாவில், ஜம்ஜென்றன் தலைமையூராக 'அளதி' என்பதுள்ளது. அபயன் போர்க்களம் இதுவோ வேறோ தெரியவில்லை.

(16) அருவர்.

" ஒருவ ரொருவரி னோடு முந்தினர்
உடலி னிழலினை யோட வஞ்சினர்
அருவ ரருவ ரெனவி றைஞ்சினர்
அபய மபய மெனந டுங்கியே " (438)

இத்தாழிசைக்கு—'ஓடவஞ்சினர் சிலர், தம்முடலி னிழலையே (அருவர் அருவர் என=)மாபெருபத்தோடு வந்த சோழவீர ரென் றெண்ணி, வணங்கினர்கள்' என்ற பொருள் புதுப்பதிப்பில் எழுதப் பட்டுள்ளது. அருவரென்பதற்குக் கவி கருதிய பொருள் இஃதன்று. மற்று, இத்தாழிசைப் பொருளாவது :—

"(கலிங்கவீரர்) ஒருவர்க்கு முன்னொருவர் ஓடித் தப்பமுந்தினராய், தம் நிழல் பின்தொடர்ந்து ஓடிவர (அதனைப் பகைவர்வருகையாக) அஞ்சி, 'தமிழர்! தமிழர்!!' என்று கதறிக்கொண்டு, அபயமிட்டு நடுங்கி வணங்கினர்"—என்பதாம். அருவர் என்பது வடுகர், தமிழர்க்குவழங் குஞ்சொல்; இஃது இக்காலத்து அரவர் எனத் திரிந்தது. 'அரவ ரென்பது தமிழராகும்' என்றார் அகராதிநிகண்டுடையாரும். இவ்வாறே, தண்டியலங்கார மேற்கோட்பாட்டொன்றும்,

" ஒருவ ரொருவர்மேல் வீழ்ந்து வடநாடர்
அருவ ரருவரென வஞ்சி—வெருவந்து
*தீத்தீத்தீ என்றயர்வர் சென்னி படைவீரர்
போர்க்கலிங்க மீதெழுந்த போது "

---

* 'தீத்தீத்தீ' என்னும் அடுக்கும் தெலுங்குத்தொடரென்பது இப்போது தெரியவருகின்றது. 'தீ' என்பது, அம்மொழியுள்; 'வழிவிடு, ஒதுங்கு' என்ற பொருளில் வழங்குவதாம். சோழவீரரைக் கண்டதும் வடநாடர் அருவாருவ ரென்றஞ்சி, ஒருவரொருவர்மேல் வீழ்ந்து ஓடுநிலையில் 'ஒதுங்கு ஒதுங்கு (வழிவிடுக, வழிவிடுக) என்றுகூறிக்கொண்டு (போக்கிடமின்றித்) தடுமாறுவர் என்பது இப்பாடற் கருத்தாமென்க. 'நெருப்பு நெருப்பு' என்று அடுக்குதற் குரிய முன்னிகழ்ச்சியொன்றும் பாட்டிற்குறிப்பிடப்பெறாமையால், இப்பொருள் கூறுதலே தக்கதாதல் கண்டுகொள்க.

என, இவ் வருவர் என்ற சொல்லை வடநாட்டார் (வடுகர்) கூற்றாகக் கூறுதலுங் காண்க. அருவவரென்ற வழக்குப்பற்றித் 'தமிழரும் ஆந்திரரும்' என்ற தலைப்பின்கீழ்ச் செந்தமிழில் எழுதிய உபந்நியாசத்தும் விரித்துரைத்துள்ளேன்.

(17) பைதல் என்ற சொற்பொருள்.

" கொய்த விறைச்சி யுறுப்பனைத்துங்
கொள்ளுங் கூழை வெள்ளாட்டின்
பைத லிறைச்சி தின்றுலர்ந்த
பாரப் பேய்க்கு வாரீரே" (555)

இத்தாழிசையுள்—'வெள்ளாட்டின் பைதலிறைச்சி' என்பதற்கு, 'வெள்ளாட்டினுடைய (பைது + அல்=) பசியதல்லாது உலர்ந்த,—இறைச்சி' என்று பதப்பொருளும், 'பெரும்பேயாதலால் உலர்ந்த இறைச்சி வயிற்றுக்குப்பற்றாது உலர்ந்துநின்ற'தென்று விசேடவுரையும் எழுதப்பட்டுள்ளன. பைதல் என்பதனை மேற்கூறியவாறு பிரித்துப் பொருள்காண்டல் கவியின்கருத்தாகாது. அது தனிச்சொல்லாய்க் குழவி, குட்டி என்ற பொருளுடையதாகும். 'பைதல்வெண்பிறை' (தேவா. சுவாமிநா. பதிப். பக். 251, பாட். 2), 'பைதற்பிணக்குழைக்காளி' (ஷை.251,2) என்னும் முன்னோர்திருவாக்குங் காண்க. 'சிறுகிளிப்பைதலே' என்றார் பெரியாரும் (திருவாய். 8. 5. 6). 'வெள்ளாட்டுக்குட்டியின் சிற்றிறைச்சியைத் தின்று தேகம்வற்றிய பெரும்பேய்க்குப் போராட்டின் முழுவுறுப்புமிட்டுச் சமைத்தகூழை வாரீர்' என்பதே இத்தாழிசைக்குப் பொருள் என்க

(18—26) பாடச்சிறப்புக்கள்.

இனி, மூலமாகக் காட்டிய பாடங்களினும் கீழ்க்குறிப்பில் இரண்டாந்தரமாகக் காட்டப்பட்ட பாடங்கள்சில பொருட்சிறப்புடையனவாகவும், வேறுசில திருத்தம்பெறவேண்டியனவாகவும் உள்ளன; அவற்றுட் சில வருமாறு:—

(18) "செய்யதிரு மேனியொருபாதிகரி தாகத்
தெய்வமுத லாயகலை யெய்தசிலை மாரன்
கையின்மலர் பாதமலர் மீதுமணு காநங்
கன்னிதன் மலர்க்கழல்கள் சென்னிமிசை வைப்பாம்" (15)

இத்தாழிசையுள்—'பாதமலர் மீது மணுகா' என்பதற்குப் பாட பேதமாகப் 'பாதமலர் மீதணியநல்கும்' என்பது கீழ்க்குறிப்பிற் கண்டுளது. 'சிவபிரான் திருமேனியையும் ஒருபாதி கரிதாம்படி எய்த வலியனை மன்மதனையும் அவன் கைக்கொண்டுள்ள மலரம்புகளைத் தன் திருவடிகளில் அருச்சிக்கும்படி செய்தருளுங் கன்னி' என்னும் பொருட் சிறப்பு, 'மீதணியநல்கும்' என்ற பாடத்துக்குப் பெறப்படுதலும் 'கையின்மலர் பாதமலர் மீதுமணுகா' எனின் அத்துணையாகப் பொருட் பேறு சிறவாமையும் உய்த்துணரத்தக்கன. குளகமாய் இப்பாட்டினைத் தொடரும் அடுத்த தாழிசையுள் 'பாதமலர் மீதணிய நல்கும்' என்னுமுறையே இதனையும் புலவர்பாடுதலின், கீழ்க்குறிப்பிற் காணப் படுவதே மூலபாடமாதற் கேற்ற தென்க. 'கன்னிகமலக்கழல்கள்' என்று சங்கத்தேட்டிற் காணப்படும் பாடம் முன்னையதினும் ஓசைநய முடைத்து.

(19) " ஆனை சாய வடுபரி யொன்றுகைத்
தைம்படைப்பரு வத்தப யன்பொருஞ்
சேனை வீரர்நின் றூர்த்திடு மார்ப்பினிற்
றிமிரி வெங்களத் திற்செவி டானவும்". (136)

இத்தாழிசையுள் 'அபயன் பொருஞ் சேனைவீரர்' என்பது 'அபயன்பெறுஞ்சேனைவீரர்' என்று சங்கத்தேட்டிற் காணப்படுகின்றது. ஈண்டுச் சேனைவீரர் அபயனைச் சார்ந்தவரேயாதலின், அபயனாற் பொரப் படுஞ் சேனைவீரர் என்னுங் கவர்பொருள்தரும் முன்னைப் பாடத்தினும் பின்னையதே தெளிவுடைத் தென்க.

(20) " உழந்து தாமுடை மண்டிலந் தண்டினல்
இழந்த வேந்த ரினையரென் றெண்ணுகேன்" (374)

இதனுள் 'இனையர்' என்பது பாடமாயின், 'படையால் நாடிழந்த வேந்தரை இவ்வளவினரென் றெண்ணுவேன்' என்பது பொருளாய்,

அவ்வேந்தர் அளப்பிலர் என்று கவி கூறப்புக்க கருத்தோடு மாறுபடும்; அதனால் 'எனையர்' என்று திருத்தற்பாலது.

(21) "கடுத்த விசையிருள் கொடுத்த வுலகொரு
கணத்தில் வலம்வரு கணிப்பில் தேர்"

என்ற 344-ம் தாழிசையடியுள், முதன் மூன்று சீரும் 'கடுத்த விசையுருள் தொடுத்த' என்று கொள்ளற்குரியன. விசை என்ற விசேடணம் இருளுக்குப் பொருந்தாமையும், உருளுக்குப் பொருந்துதலும், 'இருள் கொடுத்தவுலகு' என்பதனாற் பொருட்சிறப்பின்மையும் கண்டு கொள்க. உருள்தொடுத்த தேர், வலம் வரு தேர் என இயையும். உருளை இருளென்றும், ககர தகரங்கட்குள் வேற்றுமைகாணாமல் தொடுத்த என்பதைக் கொடுத்த வென்றும் ஏடெழுதுவோர் தவறுதல் இயல்பேயாம்.

(22) "நிழற்கொடி தழற்கதுவ விற்கடி தொளித்தவை
நினைப்பவர் நினைப்ப தன்முனே
அழற்படு புகைக்கொடி யெடுத்தன புதுக்கொடி
யணைத்தினு நிரைத்த தெனவே" (399)

என்பதனுள், 'கடிதொளித்தவை' என்பது 'கடிதொழித்தவை' என்று கொள்ளற்பாலது. 'தழல் கதுவுதலால் விரைந்து அழிக்கப்பட்ட (பானைமேற்) கொடிச்சீலைகள், புதுக்கொடிகணிரைத்தாற்போலப் புகைக் கொடி எடுக்கலாயின' என்பது கருத்தாம். நிழற்கொடி—நிழல் செய்யுங் கொடிச்சீலை.

(23) "அலைபடை நிரைக ணிரைத்த செருக்களம்
அழல்புரி களமென வொப்பில விற்படை
தலைபொர வெரிய நெருப்பினின் மற்றது
தழல்படு கழைவன மொக்கினு மொக்குமே" (406)

இதனுள் 'அழல்புரி களம்' என்பது 'அழல்புரி கலம்' என்றும், 'எரிய' என்பது 'எரியும்' என்றும் கொள்ளற்பாலன. செருக்களம், அக்கினிச்சட்டிபோல அம்பாற் றலையில் தாக்கப்பட்டெரியும் நெருப்பை யுடைமையின், அது தீப்பட்ட மூங்கிற்காட்டை ஒத்தல்செய்யும்' என்பது தாழிசைப்பொருளாம். தலையில் எரியும் நெருப்புக்கு அழல்புரி கலம் உவமை; அழல்புரிகலம்-தீப்பெய்கலம், அக்கினிச் சட்டி;

(24) "பொருநர்கள் சிவர்த நூரத்தி னிற்கவிம்
புகர்முக மிசையடி யிட்ட திற்பகை
விருதரை யரிவர் சிரத்தை யச்சிரம்
விழுபோரு தறையெனு மக்க ளிற்றையே" (427)

இதனுள்—'விழுபொருது' என்பது 'விழுபொழுது' என்று திருத்தற்பாலது. தம் மார்பின்மேற் பாயும் யானைமேல் அடியிட்டேறி அதன்மேலுள்ள பகைவர்சிரத்தை வீரர் அரியவும், அச்சிரம் அற்று விழும்பொழுதுப் (பகைவனை) 'அறை' என்று அக்களிற்றுக்குக் கூறு நின்றது—என்ற சிறப்புடைப்பொருள் பெறப்படுதல் காண்க.

(25) "எற்றைப் பகலினும் வெள்ளணிகாண்
இருநிலப் பாவை தனைநிழற்றுங்
கொற்றக் குடையினைப் பாடீரே
கோக்குலோத் துங்கனைப் பாடீரே" (520)

இதனுள் 'வெள்ளணிகாண்' என்பதினும் 'வெள்ளணிநாள்' என்ற பழையபாடமே சிறப்புடைத்து. எல்லாநாளினும் வெள்ளணிநாட் சிறப்பை, இருநிலப்பாவைக்குத் தன்னிழலால் அருளுங் குடை என்க. வெள்ளணிநாட்சிறப்பாவது, அரசன் பிறந்தநாளிற் செய்யும் போருள்; இதனைப் பெருமங்கலம் என்பர் தொல்காப்பியனார். "மங்கலவண்ண மாகிய வெள்ளணியணிந்து எவ்வுயிர்க்கண்ணும் அருளோநிகழ்த்தலின் வெள்ளணி என்ப" என்பர் நச்சினார்க்கினியர்.

(26) "இடைபார்த்துத் திறைகாட்டி யிறைவிதிருப் புருவத்தின்
கடைபார்த்துத் தலைவணங்குங் கதிர்முடிநூ றுயிரமே" (523)

இதனுள் 'இறைவிதிருப் புருவத்தின்' என்பது கவி கருதிய தொடரன்றென்று தோற்றுகின்றது. 'நூறுயிரமே' என்று முடிவனவாகக் கீழ்வருந் தாழிசைகளனைத்தும் அபயன்புகழ்கூறுவனவேயாதலின், தேவியின் சம்பந்தம், அவ்வாறு முடியும் இதன்கண்ணும் வருதற்கு இடமின்

றும். இடைபார்த்துத் திறைகாட்டிவணங்கல் அரசனுக்கே ஏற்றதாத லுங் காண்க. இதனால் 'இறைவனிரு புருவத்தின்' என்பதுபோன் றிருந்தபாடம் சிதைந்ததாகல்வேண்டும்.

(27) சில தொடர்ப் பொருள்கள்.

சில தொடர்கள் அடியில்வருமாறு பொருள்கொள்ளற் குரியன:—

(1) எயிற்கழுத்து நிணக்கொடியும் (92)—கோயின்மதிலில் அழுந் தக்கட்டிய நிணத்துகிலாகிய கொடியும் எ-று. எயிற்கு என்பது, 'கிழங்குமணற்கீன்றமுளை' என்பதுபோல, உருபுமயக்கம். நிணத்துகில் என்ற வழக்கை 473, 496 முதலிய தாழிசைகளிற் காண்க.

(2) உவைபுட்பகம் ([illegible]23):—அரும்பொருள்விளக்கத் தெழுதப் பட்டவாறு, புட்பகம் என்பது ஆபரணமன்று; சளுக்கியர்போன்றவ ரிடமிருந்து பெற்ற உயர்ந்த களிறுகளாம். 'புட்பகப்பிடியும்' என்பது சாஸனவழக்கு.

(3) பேய்க்கு....புரவி யுரித்தோற் பட்டைக்கே பொதிகூழ் பொதிந்து வைப்பீரே (563):—ஈண்டுப் பட்டை என்றது இறை கூடையையன்று; கமுகம்பட்டை, வாழைப்பட்டைகளிற் பொதிசோறு வைத்துக் கட்டுதல் வழக்காதலின் அதனையே குறிப்பதென்பது, உரித் தோற்பட்டை என்பதனாற் பெறப்படும். 'பாக்குப்பட்டையிற் கட்டிற பொதிசோறு' என்பது திருவாய்மொழியீடு (6.4.6). இனிப் பட்டை குடையோலையுமாம்; 'ஆறுசென் மாக்கள் சோறுபொதி வெண்குடை' என்பது அகநானூறு (121).

(4) 'விலக்குக விலக்குக விளைத்தன விளைத்தன':—இத்தொடர்க் குப் பேய்கள் 'இளைத்த இளைப்புக்களை' என்று பொருள் தரப்பட்டுள் ளது. ஈண்டு விளைத்தன விளைத்தன என்பதே மோனைக்கேற்ற அடுக்கா தலின், "சலகம்விளைத்தன, விலக்குக' என்று சொல்லும்படி அப்பேய் கள் களிப்புவிளையாடல் புரிந்தன" என்பதே கருத்தாமென்க.

(28) 'இடைச்செருகலான' தாழிசைகள்.

புதுப்பதிப்பின் 9-ம் பக்கத்துக் கீழ்க்குறிப்பிலே பதின்மூன்று தாழிசைகள் இடைச்செருகலென்று கருதி ஒதுக்கப்பட்டுள்ளன. அங்ஙனங் கருதற்கு, ஒருபிரதியிலிருந்தபடி மற்றப்பிரதியில் இல்லாமையே சிறந்தகாரணமாகத் தெரிகின்றது. ஆனால், இக்காரண மொன்றேபற்றி அவற்றுட் பலவற்றை அங்ஙன மொதுக்குதல் நியாயமன்று. அரிய கருத்துக்களும் தொடர்களும் வழக்குக்களும் அத்தாழிசைகளிற் காணப்படுதலின், ஒருசில அவ்வாறு கருதப்படினும், பெரும்பாலன கொள்ளத்தக்கவை என்பது நோக்குவார்க்கு நன்கு விளங்கும்.

முடிவுரை.

இவ்வாறே திருத்தம்பெறவேண்டிய பாடங்கள் வேறுசிலவுமுள்ளன. இவையன்றி, விளக்கப்படவேண்டிய சொற்களுந் தொடர்களும் வழக்குக்களும் பலவாம். அவற்றையெல்லாம் எழுதின் விரியுமென்று, குறிப்பிடத்தக்கனவற்றையே வெளியிடலாயினேன். இவ்வாராய்ச்சியுட் கண்ட விஷயங்கள் இனிவரும் பரணிப்பதிப்புக்கு ஏற்றபெற்றி உதவக்கூடியனவாயின், அதுவே, எனது இச்சிறுமுயற்சிக்குப் பெரிய பிரதிப்பயனாகும்.

ஸ்ரீ:

*கருணாகரத்தொண்டைமான்.

இப்பெயர்பெற்ற தலைவனைப்பற்றி முதன்முதலாக நமக்குத் தெரிவித்தவர், சயங்கொண்டார் என்ற புலவர்பெருமானென்றே சொல்லலாம். யாவரும் அருமைபாராட்டும்படி இவர் இயற்றிய கலிங்கத்துப்பரணியால் இத்தலைவனது வரலாறுகளுள் ஒருசில நமக்குத் தெரியவருகின்றன. இவற்றுடன் சாஸனங்களினின்று புதியவாக யான் கண்ட செய்திகளையும், சரித்திரவறிஞர் இவனைப்பற்றி எழுதியுள்ளவற்றைப் பரிசீலனைசெய்ததில் ஏற்பட்ட என் முடிபுகளையும் ஒருங்குதிரட்டி, இப்போது இம்மகாசபைமுன் வெளியிட எண்ணுகின்றேன். செந்தமிழறிஞர் செவிசாய்த்துக் கேட்டருள்க.

சோழஸாம்ராஜ்யத்தை உயர்நிலையில் நிறுவிய அரசர்களுள்ளே, முதற்குலோத்துங்கனெனப்பட்ட அபயன் என்பவனும் ஒருவன் என்பது சரித்திரநூலோர் அறிந்த விஷயம். நாற்பத்தெட்டு வருஷகாலம் (கி. பி. 1070—1118) ஆட்சிபுரிந்த இவ்வேந்தன் அடைந்த பெரும்புகழ்க்குச் சிறந்தகாரணமாயிருந்தோர், இவன்கீழமர்ந்த தானைத்தலைவர்களேயாவர். இத்தலைவர்க்கெல்லாம் முதன்மைபெற்ற மகாசாமந்தன் கருணாகரன் என்ற சிற்றரசன். கலிங்கப்போரை நேரிற்சென்று நடத்தித் தன்னரசனை அபயனுக்கு வாகைமாலைசூட்டியவன் இத்தலைவனே. அதனால், ஏவுதற்கருத்தனை அபயனுடன் இயறுதற் கருத்தனாகிய இக்கருணாகரனையும் சயங்கொண்டார் தம் பரணியிலே பெரிதுஞ் சிறப்பித்துப்பாடுவர்:—

“தண்ணார் மலர்சேர் திரடோ ளபயன்
தானேவிய சேனைத னக்கடையக்
கண்ணாகிய சோழன சக்கிரமாங்
கருணாகரன் வாரண மேற்கொளவே.” (350)

*இவ்வியாசம், மதுரைத்தமிழ்ச்சங்கத்தின் 24-வது வருஷக்கூட்டத்தின் இரண்டாநாளில், ஸேதுஸம்ஸ்தானவித்வான் ஸ்ரீமாந்: ரா. இராகவையங்காரவர்கள் அக்கிராசனத்தின்கீழ்க்கூடிய வித்துவசமூகத்தின்முன்பு படிக்கப்பெற்றது.

T. 1076

"அலகில் செருமுதிர் போதில் வண்டைய
ராச ராசர்க ணாதன் மந்திரி
உலகு புகழ்கரு ணாக ரன்றன
தொருகை யிருபணை வேழ முந்தவே." (430)

"காட்டிய வேழ வணிவாரிக்
கலிங்கப் பரணிநங் காவலனைச்
சூட்டிய தோன்றலைப் பாடரே
தொண்டையர் வேந்தனைப் பாடரே." (522)

இக் கருணாகரன் வண்டை என்ற ஊரின் தலைவனென்பதும், பல்லவவமிசத்தவனாய்த் தொண்டைமான் என்ற சிறப்புப்பெயர்பெற்றவன் என்பதும், அபயனது சேனாபத்தியத்துடன் மந்திரத்தலைவனாகவும் விளங்கியவன் என்பதும்—

"வண்டை வளம்பதி பாடரே...பல்லவர்தோன்றலைப் பாடரே."(520)

"மறைமொ ழிந்தபதி மரபின் வந்தகுல
திலகன் வண்டைநக ராசனே" (328)

"வண்டைமன், தொண்டை மான்முதன் மந்திர பாலகர்
சூழ்ந்து தன்கழல் சூடி யிருக்கவே." (314)

என வரும் பரணித்தொடர்களால் அறியலாம். தொண்டைமண்டலசதக நூலார், இவனைத் தொண்டைநாட்டினனாக அடியில்வருமாறு பாடுவர்:—

"பண்டையோர் நாளையி லோரேழ் கலிங்கப் பரணிகொண்டு
செண்டையு மேருவிற் றீட்டுவித் தோன்கழற் செம்பியன்சேய்
தொண்டைநன் னாடு புரக்கின்ற கோனந்தி தோன்றலெங்கள்
வண்டையர் கோனங் கருணா கரன்றொண்டை மண்டலமே." (92)

கருணாகரனுக்குரிய இவ்வண்டை, தொண்டைநாட்டிலுள்ள வண்டலூர்* ஆகும் என்று சரித்திரநூலோர் கருதுவர்†. இங்ஙனங் கருதற்குக்காரணம், இத்தலைவன் பல்லவமரபினனாய்த் தொண்டைமான்

* இவ்வூர், சென்னைக்கும் செங்கற்பட்டுக்கும் இடையில் ரயில்பாதையிலுள்ளது.

† காலஞ்சென்ற ஸ்ரீ. வி. கனகசபைப்பிள்ளையவர்கள், டாக்டர். ஹுல்ஷ் (Dr. Hultzsch) முதலியோர் இங்ஙனங் கருதினர் (S. I. I. ii, 113 footnote.)

என்ற சிறப்புப்பெயர்பெற்றிருப்பதும், தொண்டைநாட்டினாக அதன் சதகத்திற் பாடப்பட்டிருப்பதுமேயாகும். ஆயின், இம்முடிபு உண்மையுடையதன்றென்பது, ஆராய்ச்சியால் இப்போது புதியதாகத் தெரிய வருகிறது.

மத்தியகாலத்துச் சோழர்நாளிலே, பல்லவவேந்தர் தம் பழைய பெருவலிமைகுன்றி, அச்சோழரின்கீழ் அமைச்சராகவும் படைத்தலைவராகவும் அதிகாரிகளாகவும் அமர்ந்ததோடு, தொண்டைநாட்டின்மட்டு மன்றிச் சோணாட்டிலும் பிறவிடங்களிலும் சிறியவும் பெரியவுமான ஊர்கட்குத் தலைவர்களாகவும் இருந்தவரென்பது சாஸனங்களால் நனகறியலாம். அவ்வாறமர்ந்த பல்லவவமிசத்தவருள் இக்கருணாகரனும் ஒருவன். இவன்முன்னோர் தொண்டைநாடாண்டமைபற்றி, அவர் நாட்டு ஊர்களையும் செய்திகளையும் புலவர்கள் இவனுக்கும் உரியவாகச் சிறப்பிப்பாராயினும், உண்மையில் இவன சோணாட்டவனே. இவனூராகிய வண்டையென்பதும், இதுவரை கருதப்பட்டதுபோல் தொண்டைநாட்டிலுள்ள வண்டலூரன்றிச் சோழநாட்டிலுள்ளதோர் ஊரேயாகும். இவ்வுண்மைகளை அடியில்வரும் சாஸனம் நன்குவிளக்குதல் அறியத்தக்கது:—

"ஸ்வஸ்திஸ்ரீ. கோ இராஜகேசரிவன்மரான திரிபுவனசக்கரவர்த்திகள் ஸ்ரீகுலோத்துங்கசோழதேவர்க்கு யாண்டு நாற்பத்துமூன்று. ஜயங்கொண்ட சோழமண்டலத்து எயிற்கோட்டத்து எயில்நாட்டுத் திருவத்தியூராழ்வார்க்குச் சோழமண்டலத்துக் குலோத்துங்கசோழவளநாட்டுத் திருநறையூர்நாட்டு வண்டாழஞ்சேரியுடையான் வேளான் கருணாகரனான தொண்டைமானார் தேவியார் அழகியமணவாளனி மண்டையாழ்வார் வைத்த திருநுந்தாவிளக்கு" (S. I. I. IV, No. 362.)

இச் சாஸனத்தினின்றும், வண்டாழஞ்சேரி என்பது, சோழமண்டலத்துத் திருநறையூர்நாட்டைச்சார்ந்த ஊரென்பதும், அதன் தலைவன் கருணாகரத்தொண்டைமான் என்பதும் வெளிப்படையாகும். மேற்காட்டிய சாஸனம், முதற்குலோத்துங்கனது 43-ம் ஆண்டில் அமைந்ததாதலாலும், அதனுட்கண்ட வண்டாழஞ்சேரியுடையானைக் 'கருணாகரனான தொண்டைமானா' என்றும், அவன மனைவியை, 'தேவியாரான அழகியமணவாளனி மண்டையாழ்வார்' என்றும் உயர்பதவியினரை வழங்குமுறையில்வைத்துக் கௌரவித்தலாலும், வண்டாழஞ்சேரி என்பதை வண்டை என்று மரூஉவாக்கி வழங்குவது

தொன்றுதொட்ட தமிழ்மரபுக் கொத்ததாதலாலும்,* அபயனுடைய மகாசாமந்தனும் கலிங்கமெறிந்தவனுமாகிய கருணாகரத்தொண்டைமானே அச்சாஸனத்துக் குறிக்கப்பட்டவன் என்பது ஐயமின்றிக் கொள்ளற்குரியது. அரசர் அமைச்சர்குலம்போன்ற உயர்பதவியிலுள்ள மகளிரை ஆழ்வார் என்ற சிறப்புப்பெயரால், சோழர்காலத்தவர் வழங்கி வந்தவர் என்பது அடியில்வரும் சாஸனத்தொடர்களால் விளக்கமாகும்.

"நம்பெருமான் (அபயன்) திருத்தங்கையார் மதுராந்தகியாழ்வார்"
(S. I. I. IV. p. 18).

"சங்கந்தவிர்த்த குலோத்துங்கசோழன்மகளார் அம்மங்கையாழ்வார்"
(Ibid, p. 35.)

"விருதராச பயங்கர வாணகோவரையர் தங்களாச்சி
சோழகுல சுந்தரி விச்சாதிரி யாழ்வார் (Ibid, III, p. 153).

இனி, வண்டாழஞ்சேரியைப்பற்றி ஆராயுமிடத்து, அது, முதற் குலோத்துங்கனுக்குப் பலதலைமுறைகட்கு முன்பே, சோணாட்டிற் பிரபலம்பெற்ற ஊர்களுள் ஒன்றாயிருந்ததென்பது தெரியலாம். பாகேசரி வர்மனான முதற்பராந்தகன்காலத்தே, சோழவதிகாரிகளுள் ஒருவனாக விளங்கியவன்—"திருநறையூர்நாட்டு வண்டாழஞ்சேரியுடையான், மூவேந்த வேளான் சாத்தன் உலகன்" என்று சாஸனங்கூறுதலுங் காண்க.† இவ்வூர் முதல் இராஜராஜன்காலத்தே, க்ஷத்ரியசிகாமணிவளநாட்டைச் சார்ந்ததாகவும்,‡ அபயன்காலத்தே குலோத்துங்கசோழவளநாட்டைச் சார்ந்ததாகவும் அமைந்திருந்தது. இப்போது கும்பகோணந்தாலூகாவில் அடங்கியதோர் சிறு கிராமமாய் அதனையடுத்த தென்கிழக்கில் திருநறையூராகிய நாச்சியார்கோயிலுக்கும் திருச்சேறைக்கும் இடையில் வண்டுவாஞ்சேரி என மருவி வழங்குகின்றது.

இவ்வூர்த்தலைவன்கொண்ட கருணாகரன் என்ற பெயர், ஸ்ரீராமபிரானது திருநாமங்களுள் ஒன்றாகும். தர்ப்பசயனமெனப்படும் திருப்

---

*புதுச்சேரியைப் புதுவை என்பதுங் காண்க. ஊர்களின் பெயர்கள் இவ்வாறு மருவிவழங்குமுறையை, தொல்காப்பியம் செய்யுளியல் 80-ம் சூத்திரவுரையுள், பேராசிரியரும் நன்கு விளக்குவர்.

† Inscriptions of Madras Presidency, Ct. 1045.

‡ S. I. I. II, p. 329.

புல்லாணித் திருக்கோயிலுட் பள்ளிகொண்டருளிய அப்பெருமானைப் பற்றிக்கூறுமிடத்தே— "வருணாலயத்தை வழிவேண்டிச் சரணமாகக் கிடந்த கருணாகரப் பெருமாளையுந் திருவடிதொழுது" என இராமாநுஜ திவ்யஸூரி சரிதை (பக். 164) கூறுதலுங் காண்க. கம்பராமாயண ஏடுகள் சிலவற்றின் தலைப்பிற் கம்பநாடர்பாடிய இராமஸ்தோத்திரங்களுள் ஒன்றாகக் காணப்படும்,

"நாராயணாய நமவென்னு நன்னெஞ்சர்
பாராளும பாதம் பணிந்தேத்து மாறறியேன்
காரார் மேனிக் கருணா காரமூர்த்திக்
காரா தனையென் னறியாமை யொன்றுமே."

என்ற அழகிய பாட்டினும், கருணாகரமூர்த்தி என்று இராமபிரான் வழங்கப்பெறுதல் காணலாம். வருணனை வழிவேண்டி, அப்பெருமான் தருப்பசயனத்திருந்து பிராயோபவேசம்புரிந்ததைக் கூறுமிடத்தே—

"தருண மங்கையை மீட்பதோர் நெறிதரு கென்னும்
பொருண யந்துநன் னூனெறி யடுக்கிய புல்லிற்
*கருணை யங்கடல் கிடந்தனன் கருங்கட றோக்கி
வருண மந்திர மெண்ணினன் விதிமுறை வணங்கி"

என்றும், குகப்பெருமாளுக்குத் தன் தாயைப்பற்றிப் பரதாழ்வான் கூறுமிடத்தே—"கடுமையார் கானகத்துக் கருணையார்கலி யேக" என்றும் கம்பநாடர் இராமபிரானை அவனது கருணாகரப்பெயரின் பொருளை விளக்கியே கூறிச்செல்லுதலும் ஒப்பிடத்தக்கது. இது பற்றியே சயங்கொண்டாரும்—

"இலங்கை யெறிந்த கருணா கரன்றன்
இசைவெஞ் சிலையின் வலிகேட்பீர்.
கலிங்க மெறிந்த கருணா கரன்றன்
களப்போர் பாடத் திறமினோ."

---

*இவ்வடிக்கு 'இரத்நாகரத்தை வழிவேண்டிக் கருணாகரன கிடந்தான்' என்பது கருத்தாகும். கம்பரது இவ்வடியையுட்கொண்டே 'கருணையென்னுங் கடல் கருங்கடலைநோக்கிக்கிடந்ததே' என்று பங்கியெழுதியருளினர், திருவாய் மொழிக்கு ஈடு என்னும் பேருரையிட்ட பெரியோரும். (ஈடு 5, 10, 6; 6, 9, 3.)

என்ற தாழிசையுள், இராமபிரானுக்கு அப்பெயர்வழக்குண்மையைக் குறிப்பிட்டாரெனக. இருவரும் கருணாகரப்பெயருடையராயினும், ஒருவன் இலங்கையெறிந்த புகழுடையான், மற்றவன் கலிங்க மெறிந்த புகழுடையான் என்பது அப்புலவர்கருத்தாம்.

இனி, மேற்குறித்த சாஸனத்தினின்று, கருணாகரத் தொண்டைமான் தேவிக்கு, 'அழகியமணவாளனி மண்டை' என்பது பெயர் என்பது தெரியலாம். திருவரங்கத்துப் பெரியபிராட்டியாரின திருநாமமாகிய 'அழகியமணவாளனி'* என்பதைத் தன்பெயராகக் கொண்டிருத்தலாலும், அத்திகிரித் திருமாலு (காஞ்சீபுரம் ஸ்ரீ வரதராஜப்பெருமாளு)க்குத் திருநந்தாவிளக்கொன்று அமைத்திருத்தலாலும் இத்தேவி திருமால்பத்திபூண்டவள் என்று கருதல்தகும். பல்லவருள்ளே திருமாலடிமைத்திறத்தாற் சிறந்தோரும் விளங்கிய செய்தி பெரியதிருமொழி, சாஸனமுதலியவற்றால் நன்கறிந்தது.

நம் கருணாகரனுக்குப் பல்லவரரசர் என்ற பெயர்கொண்ட தமையனொருவர் இருந்தனர் என்பது,

> "தொண்டை யர்க்கரசின் முன்வருஞ் சுரவி
> துங்க வெள்விடை யுயர்த்தகோன்
> வண்டை யர்க்கரசு பல்லவர்க்கரசு
> மால்க ளிற்றின்மிசை கொள்ளவே."

என்ற சயங்கொண்டார்வாக்கால் அறியப்படுகிறது. இவர், கருணாகரனுடைய உபசேனாபதிகளுள் ஒருவரென்பதும், இங்ஙனம் பதவியில் இளையராயினும் உடன்பிறப்பால் மூத்தவரென்பதும், வள்ளன்மையுள்ளவரென்பதும் 'தொண்டையர்க்கரசின் முன்வருஞ் சுரவி' என்ற தொடரினின்று நன்கறியக்கிடக்கின்றன.

> "ஒருகுடிப் பிறந்த பல்லோ ருள்ளும்
> மூத்தோன் வருக வென்னு தவருள்
> அறிவுடை யோனு றாகுஞ் செல்லும்" (புறம். 183)

*அழகியமணவாளன்—திருவரங்கத்துத் திருமால்; அக்கோயிற் பெரியபிராட்டியாரை 'அழகிய மணவாளனி' என்பது, அக்காலவழக்குப்போலும்.

என்பராகலின், ஒருதாய்வயிற்றுச் சகோதரருள் மூத்தோனிருப்பவும் கருணாகரன் அரசியலிற் றலைமைவகிக்கநேர்ந்தது ஒக்குமென்க. 'முன் வருஞ்சுரவி' என்பதற்கு, யான்கூறும் இப்பொருளன்றி, வேறெதுவும் மேற்றொடிசையுட னியையாமை உய்த்தறியத்தக்கது. கருணாகரனது மூத்தசகோதராகிய இப்பல்லவராசர், அபயன்காலத்தே படைத்தலைவருள் ஒருவராகவும் அரசியலதிகாரியாகவும் விளங்கிய—'இராசேந்திர மூவேந்த வேளார் சேனாபதிப் பல்லவரசர்'* என்பவராகக் கருதற்குப் பொருத்தம் உள்ளது. இப்பல்லவராசரைப்பற்றிய வேறுகுறிப்புக்கள் யான் எழுதிய 'கலிங்கத்துப்பரணி யாராய்ச்சி'யாலும் (பக். 22-23.) அறியத்தக்கன. பராந்தகசோழன்காலத்தே அரசியலதிகாரியாக விளங்கிய "வண்டா ழஞ்சேரியுடையான் செம்பியன் மூவேந்தவேளான் சாத்தன் உலகன்" என்பவன், இப் பல்லவரசர் கருணாகரனிருவர்க்கும் முன்னோன்போலும்.

இற்றைக்கு 200வருஷங்கட்குமுன், வேளூர் ஆத்மநாததேசிகரால் இயற்றப்பட்ட சோழமண்டலசதகத்தில், கருணாகரன் என்பானொருவனைப்பற்றிக் கூறப்பட்டுள்ள பாடல் வருமாறு:—

"பூதம் பணியச் சீட்டெழுதிப் பொருளா யிலட்சம் பொன்கொடுத்த
ஓதும் பூத மங்கலவாழ் வுடையா னீத லுடையானே
காதல் சேருங் கடாரமெலாங் கண்ட கருணா கரப்பெருமான்
மாது பாகன் திருப்பணிக்கே வைத்தார் சோழ மண்டலமே." (86)

இச்செய்யுளால், பூதமங்கலம் என்ற ஊரில் கருணாகரன் என்ற தலைவன் வாழ்ந்தமையும், அவன் திருவாரூர் ஸ்ரீ தியாகராஜர்க்குத் திருப்பணிகள்பல செய்த வரலாறுந் தெரியவருகின்றன. பூதமங்கலம் என்பது நாகபட்டினந்தாலூகாவிலுள்ளதோர் ஊராகும். இவனைப் பற்றி வேறு கர்ணபரம்பரைச் செய்திகள் சிலவும் வழங்குவன என்பர்.† கலிங்கமெறிந்த கருணாகரனே இவன் என்பது, ஊரும் செய்தியும் வேறுபடுதலாற் றுணியக்கூடவில்லை. ஆயினும், திருவாரூருலா, 246-ம் கண்ணியுள், அத்தலத்திற் றிருப்பணிசெய்தவன் கருணாகரத்தொண்டைமான் என்று குறிப்பிடப்படுதலால், இப்

---

*I. M. P. Tj. 189; (திருப்பனந்தாட் சாஸனம்.)

†இலக்கணவிளக்கபரம்பரை; திருவாரூர். ஸ்ரீ. சோமசுந்தரதேசிகர் பதிப்பித்த சோழமண்டலசதகம், 86ம் பாட்டின் விசேடக்குறிப்புக் காண்க.

பூதமங்கலமுடையான் கலிங்கம் வென்ற கருணாகரன்மாயினனோ என்று சங்கிக்கவிட முண்டு.

இனி, கலிங்கத்துப்பரணியில், கருணாகரன் தன்னரசன் ஏவலாற் கலிங்கத்தின்மேற் படையெடுத்துச்சென்று, அந்நாட்டை வென்றடிப் படுத்தியதைப்பற்றிச் சயங்கொண்டார் கூறும் செய்திகளைச் சாஸனங் கட்கு இயையச் சுருக்கிக்கூறுவேன்.

[கலிங்கவெற்றி.]

சோணாட்டின் இராசதானியாக விளங்கிய கங்கைகொண்டசோழ புரத்தில், முதலிராசேந்திரன்மகள்வயிற்றுப்பேரனும், வேங்கைநாட்டரச னான சாளுக்கிய–இராசராசன்மகனுமாகிய விசயதரன் என்ற இராச குமாரன், சோழவமிசம் நேரான சந்ததியில்லாதிருந்ததுபற்றி, அவ் வமிசத்துக்குரிய புத்திரனாக எடுத்துக்கொள்ளப்பெற்று, அவன் தாய்ப் பாட்டியான கங்கைகொண்டசோழன்தேவியால் அருமையோடு வளர்க் கப்பட்டுவந்தான். அக்காலத்து இவனுடைய தாய்மாமனான வீர ராசேந்திரன் என்ற சோழன் ஆட்சிபுரிந்துவந்தனன். அரைமனையில் வளர்ந்துவந்த இவ் வரசிளங்குமாரன், அறிவு ஆற்றல் பெருமை முதலிய உத்தமகுணங்கள் பெருகி, 'இவன் ஓர் அவதாரபுருஷன்' என்று கண் டோர் புகழும்படி இளம்பிராயமும் அடைந்தனன். அப்போது வட நாட்டிலுள்ள சக்கரக்கோட்டத்துத் *தாராவர்ஷனை அடக்கிவருதற்கு அந்நாட்டின்மேற் படையெடுத்துச்செல்லவேண்டிய அவசரமொன்று இளைஞனான விசயதரனுக்கு நேர்ந்தது. அவன் அக்காரியத்தின்மேல் வடநாடுசென்றிருந்தசமயத்தே, தாய்மாமனான வீரராசேந்திரன் இராச தானிநகரில் தேகவியோகமாயினன். ஆகவும், சோழசிம்மாதனத்துரிமை பற்றி அங்கிருந்த அரசவமிசத்தினருள் விவாதமுண்டாகியதனால், † நா

*சக்கரக்கோட்டமண்டலத்து இராசதானியான பாரஸ்பிருவிலிருந் தாண்ட விந்தாராஜன்—தாராவர்ஷன், (கி. பி. 1065) இவனென்பர். (Ep. Rep. No. 538 of 1909, 112.)

† தாய்மாமனான வீரராஜேந்திரனுக்கு நேர்மனைவிவயிற்றுப் பிறவாதவ னும், அதிராஜேந்திரன் என்னும் பெயரினனுமாகிய மகனொருவன் இருந்தன னென்றும், சோழசிங்காதனத்துரிமை இவனுக்கில்லையாயினும், அபயன் வடக்கே யுத்தயாத்திரையாகச் சென்றிருந்தபோது, இறந்த தன் தந்தையின் சிங்காதனத்தை இவன் கைப்பற்றவே குடிகள் கலகம்விளைத்து இவனைக் கொன்றுவிட்டனரென்றும், அதுவே பரணியிற் கூறப்படும் அராசகநிலைக்குக் காரணமென்றும் என் நண்பர் ஸ்ரீ. ஏ. வி. வேங்கடராம ஐயரவர்கள், எம். ஏ., கருதுவர்.

டெங்கும் கலகமுங் குழப்பமும் விளைந்தன. தன் மாமன் இறந்ததையும், சோணாடு அராஜகமாய்க் குழப்பமடைந்திருப்பதையும் வடக்கே சென்று வெற்றிபெற்ற விசயதரன் கேள்வியுற்றதும், அதிவேகமாக அங்குநின்றுந் திரும்பிச் சோணாடடைந்து கலகத்தையடக்கி நாட்டில் முன்போல் அமைதியை உண்டாக்கியதோடு, தௌகித்திரனாய்ச் சுவீகாரம்புகுந்த தன்னுரிமைப்படி, சோழசிம்மாசனத்தில் வீற்றிருந்து நாடு மகிழ நீதிதவறாது ஆட்சிபுரிந்தும் வந்தான். அக்காலத்து விசயதரனுக்கு இராசேந்திரன், குலோத்துங்கன், அபயன் முதலிய பெயர்கள் வழங்கலாயின. இவ்விசயதரனது ஆட்சிக்காலத்தே, அவனது பெருவலிமைக்காற்றாது பகையரசரெல்லாம் அடங்கியொடுங்கி அவனுக்குத் திறைசெலுத்தி வணங்கிவந்தனர்.

இங்ஙனம் நிகழ, ஒருகால், விசயதரன் காவிரிக்கரையில் வேட்டையாடிக்கொண்டுவந்தபோது, அங்குநின்று தொண்டைநாட்டுப் பாலாற்றங்கரையிற் பரிவேட்டையாடிவர விரும்பித் தன் பெரும் பரிவாரங்களுடன் கோலாகலமாகப் புறப்பட்டான். அப்பயணத்தில், அவன் முதலிற் சிதம்பரஞ்சென்று தங்கி ஆங்குச் சிவபிரானைத் தரிசித்துக் கொண்டு, அங்குநின்றுந் திருவதிகைசென்று பின் கச்சியம்பதியை அடைந்தனன். ஒருநாள், அக்கச்சிமாநகர் அரைமனையின் தென்மேற்குமூலையில் அமைந்த *சித்திரமண்டபத்திலே தன்பரிவாரங்கள் சூழ எல்லா இராசவைபவங்களுடனும் அபயன் சிங்காதனத்தில் வீற்றிருந்தபோது, அரசரெல்லாந் தத்தந் திறைகளைக் கொணர்ந்து அவனடி வணங்கிநின்றார்கள். அவற்றை ஏற்றுக்கொண்டு அவ்வவர்க்குரிய அருள்களைச் செய்தபின்னர், அவ்வேந்தர்வேந்தன்—"இவர்களையொழியத் தம் கடமைகளைச் செலுத்தாதொழிந்த வேறு அரசரும் உளரோ?" என்று தன் கருமத்தலைவனான திருமந்திரவோலைநாயகனை உசாவினன். அவன் அரசனைப் பணிந்து, 'பெருமானே! தத்தந் திறைகளுடன் வந்து வினைவேந்தரெல்லாம் நின்கழல் வணங்கினாராயினும், கலிங்கதேசாதிபதி

*இச்சித்திரமண்டபம், முதற்பராந்தகன்காலத்தே (900—950 கி. பி.) விளங்கியதென்பது "யாண்டு 16-வது; உடையார் கச்சிப்பேட்டுக் கோயிலினுள்ளால் தெற்கில் சித்திரமண்டபத்தெழுந்தருளியிருக்க" என்னும் சாஸனப் பகுதியால் அறியலாம் (s. i. i. iii, p. 269).

யாகிய அனந்தவன்மன்* என்பவன்மட்டும், உரியதிறையொடும் இருமுறையாக வந்திலன்' என்றான். இதுகேட்டதும், வேந்தர்பெருமான் முகத்திற் புன்முறுவல் அரும்பியதேயன்றிச் சிறிதும் கோபக்குறி தோன்றியதில்லை. 'இதன்பொருள் என்னையோ? இனி நிகழ்வது யாதோ' என்று உடல் குலைந்து கலங்கலாயினர், வந்துநின்ற ஏனை மன்னர்கள். அப்போது, சோழன் தன் தானைத்தலைவரை நோக்கி, 'கலிங்கர்பதி படைவலியற்றவனாயினும், அவனது குன்றரண் பெருவலிமைகொண்டது; அதனால் நம் யானைப் படையுடன் நீவிர் சென்று அம்மலையரணை யிடித்து, கலிங்கனையும் பிடித்துவருதிர்' என்று கட்டளையிட்டனன். இவ்வாறு தன்னரசன் ஆணையெழுந்ததும் தலைமைச் சேனாபதியும் பல்லவகுலதிலகனுமாகிய கருணாகரத்தொண்டைமான் எழுந்து அடிவணங்கி—'எழுகலிங்கங்களையும், வேந்தர்வேந்தே! யானே படையெடுத்துச்சென்று அழித்துவருவல்' என்று கூறினன். இங்ஙனங்கூறி விரைந்து பகையழிக்கும்விருப்புடன், அவன் அரசன்பால் விடைகேட்க அவனும 'அங்ஙனமேசெய்க' என்று ஆஞ்ஞையளித்தனன. அப்போதே, சேனாபதியின் கட்டளையால் நாற்பெரும்படைகளும் பல்லியங்களார்ப்பப் போர்க்கோலம்பூண்டு யுத்தயாத்திரைக்குச் சித்தமாயின. பிரதம சேனாபதி–கருணாகரனும், உபசேனாபதிகளான பல்லவரசர், வாணகோவரையன்,† முடிகொண்டசோழன் என்பாரும் தத்தம் மத்தயானைகளின்மேல் ஆரோகித்தனர். இங்ஙனமாகப் படைகளும் படைத்தலைவர்களும் யாத்திரைபுறப்பட்டு இரவும் பகலும் வழிக்கொண்டு இரைவேட்டெழுந்த புலிகள்போல் இகன்மேற் சென்றனர். அப்பெரும்படை ‡ [1]பாலாறு, [2]குசைத்தலை, [3]முகரி, [4]கொல்லி, [5]பெண்ணை, வயலாறு,

*இவன் சாஸனங்களில் அனந்தவர்மன் சோடகங்கன் (கி.பி. 1078—1146) எனக் கூறப்படுகின்றானென்பர் (Ep. Rep. 1905, p. 52—3).

†வாணகோவரையன் முடிகொண்டசோழன் என்ற இருவரையும் பற்றிய விசேடச்செய்திகளை, யான் எழுதிய 'கலிங்கத்துப்பரணியாராய்ச்சியுட் காண்க (பக். 23—24).

‡ 1, 2—செங்கற்பட்டுஜில்லாவில் ஓடுவன; பின்னதைக் குசஸ்தலை என்று இப்போதும் வழங்குவர். 3—பொன்முகரி அல்லது ஸ்வர்ணமுகி எனப்பெற்று, ஸ்ரீகாளஹஸ்திப்பக்கத் தோடுவது. 4—வட-ஆர்க்காடு, நெல்லூர் ஜில்லாக்களிற் செலலும் கலலாறுபோலும். 5—வடபெண்ணை,

[6]மண்ணாறு, [7] குண்டியாறு, [8]பேராறு, கோதாவரி, [9]கம்பை, [10]சந்தநதி, [11]கோதமை—என்ற நதிகளைக்கடந்து புகார்த்தக்கடல் கொதித்து வருவது போலக் கலிங்கதேசத்தினுட் புகுந்து, தங்கள் வருகையை அறிவிப்பவர் போல் நாடெங்குந் தீக்கொளுவிச் சூறையாடினர். அந்நாட்டார் சோழ சேனைகளின் கொடுமைக்காற்றாது ஓடி, அத்தாணியில் அமைச்சருட னிருந்த தம்மரசனிடம், 'எடுத்துவரும்படைகள் சோழன் நம்மேல் விடுத்தனவாகும்' என்று நடுங்கித் தெரிவித்தனர். கலிங்கபதி அதனைக் கேட்டு, 'திறைகொடுக்க நான் மறுத்தமைக்காகச் சோழன் தனபடையை ஏவினன் ஆவன. வலியனாய அபயனுக்கன்றி அவன் விடுத்த சேனைக்கும் நான் எளியனோ? காட்டரண், மலையரண், கடலரண் என்ற மூவகை அரணுமுடையது நம் கலிங்கதேசம் என்பதை அச்சோழன் அறியான் போலும்; அவன்சேனையை எதிர்த்தழிப்பேன்' என்று வீராவேசத்துடன் தன் மந்திரிகளிடம் கூறினன். கூறவும், அவ்வமைச்சருள் ஒருவனான எங்கராயன் என்பான் எழுந்து—'அரசே! நீ சினந்தாலும் உறுதிகூறுதொழிதல் என்போன்றவர் கடமையன்றாதலால், யான் சொல்வனவும் சில உண்டு' என்று கூறிவிட்டு, 'பாண்டியரைவரையும் அவர்நாட்டிலும், சேரரைச் * [1]சாலை [2]விழிஞங்களிலும், [3]வத்தவனைச் சக்கரக்கோட்டத்திலும், சளுக்கியரை நவிலை [4]அளத்தி என்ற ஊர்களிலும், இன்னும் வேந்தர்பலரைப் பல்லிடங்களிலும் அவ்வபயன வென்றடிப்படுத்தியதெல்லாம் தான் சென்றறிந்த தன் தண்டைக் கொண்டேயன்றோ? அவ்வாறே, இப்போதும் சக்கரவர்த்தியான

6—மன்னேறு என வழங்கப்பெற்று நெல்லூர்ஜில்லாவில் ஓடுவது. 7—குண்டேர்ஜில்லாவில் அப்பெயருடன் ஓடுவது; குண்டலகம்மா என்றும் வழங்கும். 8—கிருஷ்ணாநதி; 'பேராற்றங்கரைக் கொப்பத்து' என்பது சாஸனத் தொடர். 9, 10, 11—என்ற 'மூன்றும் சப்தகோதாவரிகளைச் சார்ந்தனவாகக் கருதப்படுகின்றன.

* [1]சாலை—திருவனந்தபுரத்தைச் சார்ந்த காந்தளூர்ச்சாலை.

[2]விழிஞம்—மேலைக்கடற்கோடியி லுள்ளதோர் துறைமுகம்; திருவனந்தபுரத்துக்குத் தெற்கே 10-வது மைலில் உள்ள தென்பர். S. I. I. iii, p. 13. 'விழிஞக்கடற் கோடியுள்' என்பது இறையனாரகப்பொருள் மேற்கோள்.

[3]மத்தியமாகாணத்திலுள்ள சக்கரக்கோட்டமண்டலத்தது வத்ஸராஜ்யத்தை (Baster State) ஆண்ட தாராவர்ஷன் ஆவன் (Ep Ind. ix. p. 178).

[4]இது மைசூர்—இராச்சியத்தைச் சார்ந்த நவிலை நாடென (Navale Nadu) தலைமையூராகக் கருதுவர் (s. i. i. iii, p. 1307).

அவனது சக்கரமாகவுள்ள கருணாகரனைத் தலைமையாகக்கொண்டு, அவன்சேனை நம்மைத் தாக்க வருகின்றது. இப்போது என்னை நீ முனியக்கூடுமாயினும், அவன் சேனைமுன் நீ நிற்கும்போது, யான் கூறியதன் உண்மையை உணர்வாய்'—என்று கூறினன். இவற்றைக் கேட்ட கலிங்கவரசன் அவ்வார்த்தைகளைப் பொறாது தன்னமைச்சனைப் பலவாறுகடிந்து, தன்படைகட்குமுன் எதுவும் நிற்குந் தரத்ததன்று என்று கூறிவிட்டு, எதிர்த்துவருஞ் சோழன் சேனையை எதிர்த்து அழிக்கும்படி தன் படைத்தலைவர்க்குக் கட்டளையிட்டான். உடனே, யானை தேர் பரி காலாட்கள் என்ற நால்வகைக் கலிங்கசேனைகளும் சோழன் பெரும்படையைத் தாக்கலாயின; பெரும்போர் மூண்டது. இருதிறத்து வீரர்களும் அத்யாச்சரியகரமான வீரச்செயல்களைக்காட்டிப் போர்புரிந்துவந்தனர். இருசேனைகளும் ஒத்த பலமுடையவாய்ப் பொருதுவரும்பொழுது, சோழசேனாபதி—கருணாகரன் மதகளிற்றின் மேற்கொண்டு நேராகவே போர்முகத்துள் நுழைந்தனன். அவன் யுத்த களத்துட் புகுந்தது முதலே, சோழன்படைகள் உற்சாகமிகுந்து கலிங்கசேனைகளைச் சின்னபின்னஞ் செய்யலாயின. அதனால் அப்பகைச் சேனைமுழுதும் எதிர்த்துநிற்கும் வலியற்றுத் தோற்றோடியது. எண்ணிறந்த களிறுகளுடன், குதிரை தேர் ஒட்டகம் நிதித்திரள் மகளிர் கூட்டம் முதலிய கலிங்கர்செல்வ மெல்லாவற்றையும் சோழசேனைகள் கைப்பற்றிக்கொண்டன. தோல்வியுற்ற கலிங்கர்பதி அப்போரினிடையே ஓடி யொளித்தனன். இவ்வாறாகத் தன்சேனை பெருவெற்றி பெற்றபின்பு கலிங்கவேந்தன் ஓடிப் பதுங்கிய இடத்தையும் சோழசேனாபதி ஒற்றர் மூலந் தேடலானான். அவ்வேந்தன் தன் பெரும்பலத்துடன் மலையரணொன்றைப் பற்றியுள்ளான் என்ற சுவடு ஒற்றரால் அவனுக்குத் தெரிய வந்தது. உடனே அவ்வரணைக் கருணாகரன் சேனைகள் அத்தமனத்துள் வளைந்துகொண்டு தாக்கலாயின. அங்கிருந்த கலிங்கப்படைகளும் சோழசேனையால் பெரும்பாலும் அழிக்கப்பட்டொழிந்தன. எஞ்சி நின்ற ஒருசிலர் மூலைக்கொருவராக ஓடி யொளித்தனர். இங்ஙனமாக—

"கடற்கலிங்க மெறிந்துசயத் தம்ப நாட்டிக்
கடகரியும் வயமாவுந் தனமுங் கொண்டு
சுடர்க்கதிர்வா ளபயனடி யருளி னேடுஞ்
சூடினான் வண்டையர்கோன் தொண்டை மானே." (458)

இவ்வளவே, கலிங்கப்போரைப்பற்றிய வரலாறுகளாகப் பரணியாலும் பிறவற்றாலும் அறியப்பட்டவை. இச்செய்திகளை அடிப்படையாகக்கொண்டு, காடுகெழுசெல்வியாகிய தூர்க்கைக்குப் பரணிநாளிற் கூழுந் துணங்கையுங் கொடுத்து* வழிபடுவதோர் பழையவழக்குப்பற்றி,

"கடவுள் வாழ்த்துங் கடைதிறப் புரைத்தல்
கடும்பாலை கூறல் கொடுங்காளி கோட்டம்
கடிகண முரைத்தல் காளிக் கதுசொலல்
அடுபேய்க் கவள்சொல லதனாற் றலைவன்
வண்புக ழுரைத்த வெண்புறத் திணையுற
வீட்ட லடுகளம் வேட்டல்" (இலக். வி.)

என்பன முதலியவாகப் பகுத்துப் பேய்கள்கூற்றாகவும் தேவிகூற்றாகவும் சோழராது திருமுடியடைவையும்† அபயனது பிறப்பு வளர்ப்பு முதலிய செய்திகளையும் புனைந்துரைவகையாற் புலவர்பெருமானாகிய சயங்கொண்டார் தம் பரணியுள் மிக வழகாகப் பாடுகின்றார். பரணிநாளின் அதிதேவதை கொன்றுயிர்பருகும் யமதருமனாதலின், பரணிக்களத்தைப் பகைவனுக்குரிய இடமாகவே யாண்டும் அமைத்துப்பாடுதல், பண்டையோர்கொண்டமுறை என்பர் அறிந்தோர்; கூத்தர் இயற்றிய தக்கயாகப் பரணியுட் பிறவும் இங்ஙனமே பெயர்பெற்றிருத்தலுங் கண்டுகொள்க.

கலிங்கத்துப்பரணித் தலைவனான அபயனது 45-ம் ஆண்டிற் பொறிக்கப்பட்ட ஆலங்குடிச் சாஸனமொன்றில்‡, இக்கலிங்கப்போரின் விவரம் காணப்படும் பகுதி வருமாறு:—

"வடதிசை வேங்கை மண்டலங் கடந்து
தாங்கிய கலிங்கமுந் தழலெரி பரப்ப

* தொல்காப்பியம், செய்யுளியல், 149-ம சூத்திரவுரையுள்—பேராசிரியரும் நச்சினார்க்கினியரும் இங்ஙனம் எழுதல் காண்க.

† கலிங்கத்துப்பரணியின் இராசபாரம்பரியப்பகுதிக்குத் திருமுடியடைவு என்ற பெயர்வழக்கு, சென்னை "மியூஸியம்" கையெழுத்துப் புத்தகசாலையிலுள்ள பரணிப்பிரதியொன்றிற் கண்டது. வைஷ்ணவசம்பிரதாயத்தில், ஸிம்மாசனாதிபதிகளான ஆசாரியபரம்பரையின் வரலாறுகூறும் நூல்கள் "பெரியதிருமுடியடைவு, சிறியதிருமுடியடைவு" என்ற குறியீடுகள் பெற்றிருத்தலாலும், இவ்வரிய வழக்கினுண்மை பெறப்படும்.

‡ S. I. I. iv. p. 136.

விலங்கல் போல விலங்கிய வேந்தர்
விட்டவெங் கரியொடு பட்டனர் புரளப்
பொருகோ பத்தொடு போர்முக மதிர்வரு
கோமட் டையன் மாதவ னெதிர்பட
எங்க ராய னிகலவ ரேச்சணன்
மாப்பிறளா(?) மதகரி வீராசணன்
தண்டுபதி யாகிய தலைச்சே னாபதி
மண்டலிக தாமய னெண்பாத்(?) திசைமுகன்
போத்தயன் கேத்தணன் செருச்சே னாபதி
என்றிவரனைவரும்
வெற்ற வேழத்தொடு பட்டு மற்றவர்
கருந்தலை யோடு வெண்ணிணங் கழுகொடு
பருந்தலைத் தெங்கணும் பரப்ப வுயர்த்துத்
தருங்கட லாடைத் தராதலந் திறந்து
கலிங்க மேழுங் கைக்கொண் டொருபகல்
* * * * *
வீரசிம் மாசனத்து வீற்றிருந் தருளின
கோவிராச கேசரி வன்மரான...
ஸ்ரீகுலோத்துங்கசோழதேவர்க்கு—"

இவ்வடிகளினின்று கருணாகரன்சேனையோடு எதிர்த்துப்பட்ட கலிங்கசேனாபதிகள் இன்னாரின்னார் என்பது தெரியலாம். இவர்களுட் சிலர் பெயர்கள் தெளிவாகவில்லை. அபயனது மற்றச் சாஸனங்களெல்லாம் அவனது கலிங்கவெற்றியைப் பொதுவாகக் கூறுவனவேனும், அப்போரை விவரமாகச் சிறப்பித்துக்கூறும் சாஸனமாக இப்போது தெரியவருவது இஃதொன்றே எனலாம். இதனுட்கண்ட கலிங்கசேனாபதிகளுள் எங்கராயன் என்பவன், கருணாகரனுடன் எதிர்க்காது அவனோடு சந்துசெய்துகொள்ளும்படி தன்னரசனை கலிங்கராசனுக்குக் கழறிக் கூறியவனென்பது—

"என்று கூறவே யெங்க ராயனன்
ஒன்று கூறுகே னென்று ரைக்குமால்"

எனவரும் பரணித்தாழிசையால்* அறியப்படுகின்றது. இனி, மேற்காட்டிய ஆலந்துடிச் சாஸனத்தால் அபயனது 45-ம் ஆட்சி வருஷத்

*இத்தாழிசை, பரணிப் புதுப்பதிப்பில், 365-ம் தாழிசைக்குப் பிரதியாகக் கீழ்க்குறிப்பில் வைத்துப் பதிப்பிக்கப்பட்டுள்ளது; சாஸனத்துக்கும் மோனைக்கும் இயைய 'எங்கராயன்' என்று இதனுள் அமைதல் பொருந்தும்.

துக்குமுன்பு (கி. பி. 1115) கருணாகரனது கலிங்கப்படையெடுப்பு நடந்திருத்தல்வேண்டுமென்பது பெறப்படும். அபயன்மகனும் இளவரசனுமான விக்கிரமசோழன் கருணாகரனுடன் இக்கலிங்கப்போர்க்குச் சென்றவனென்று சரித்திரவறிஞர்சிலர் கருதுவர். அங்ஙனமாயின், அப்போர்க்குச் சென்ற சேனாபதி உபசேனாபதிகளின்பெயர்களை எடுத்துச் சிறப்பித்துக்கூறும் சயங்கொண்டார் அவ்விளவரசனையும் அவ்வாறே கூறுதுபோகாராதலாலும் வேறு சாஸனப்பிரமாண மில்லாமையாலும் அங்ஙனந் துணியக்கூடவில்லை. விக்கிரமசோழன் மெய்க்கீர்த்தியுள்—

"தெலிங்க வீமன் விலங்கன்மிசை யேறவும்
கலிங்க பூமியைக் கனலெரி பருகவும்
ஐம்படைப் பருவத்து வெம்படை தாங்கி"

என்று அவனது கலிங்கவெற்றி புகழப்பட்டுள்ளதே எனின், அஃது, அபயன் கி. பி. 1095—6-ல் நடத்திய தென்கலிங்கப்போர்க்கு* அவ்விக்கிரமன் தன் சிறுபிராயத்திற் சென்றதைப்பற்றியதாகவே தோற்றுகின்றது. இரண்டாமுறையாக நடத்திய வடகலிங்கப்போரோ, அபயனது ஆட்சிமுடிவுக்குச் சிலவருஷங்கட்குமுன் கருணாகரன் நடத்தியதென்க. இதனைப்பற்றிக் கலிங்கத்துப்பரணியாராய்ச்சியுள்ளும் நன்கு விளக்கியுள்ளேன் (பக். 19–20.)

இனி, சென்னையிலே சென்றவாண்டிற்கூடிய "மூன்றாவது கீழ்த்தேச வித்தியாசங்கத்தில்† அரங்கேறிய வியாசங்களுள்ளே—"கருணாகரத்தொண்டைமானும் ஸ்ரீஸூக்திரத்நஹாரமும்" என்பதும் ஒன்று. இதனை எழுதிப்படித்தவர், திருவனந்தபுரம் சாஸனவிலாகா அத்யக்ஷரான ஸ்ரீமாந். ஏ. எஸ். இராமநாத ஐயரவர்கள், B.A. ஆவர். 'ஸூக்திரத்நஹாரம்' என்ற பெயர்கொண்ட வடமொழி நீதித்திரட்டின் பிரதியொன்று, திருவனந்தபுரம் அரைமனை ஸாஸ்வதிமாலில் உள்ளதென்றும் அந்நூலைக் குலசேகரன் என்ற தன்னரசன்பெயரிட்டுத் தொகுத்தவர் அவனுடைய தலைமைமந்திரியான காலிங்கராசர் என்பவரென்றும் ஐயரவர்கள் குறிப்பிட்டுவிட்டு, இக்காலிங்கராசர் முதற்குலோத்துங்கனுடைய

* Ep. Rep. 1905, p. 52—3.

† All India Oriental Conference, Third Session—Madras.

அபயன் சேனாபதியாகவும் சிதம்பர முதலிய கோயில்களிற் றிருப்பணி செய்தவனாகவும் சாஸனங்களால் அறியப்பட்ட காலிங்கராயனேயாதல் வேண்டுமென்றும், இக்காலிங்கராயனது சாஸனங்களில் இவற்கு அருளாகரன் என்ற மறுபெயரும், தன்னாசனான அபயன்பொருட்டு வடவரசருடன் போர்கள்பல புரிந்தசெய்தியும் காணப்படுதலால், இவனே அவ்வபயன் றலைமைச்சேனாபதியாய்க் கலிங்கமெறிந்த கருணாகரனாக வேண்டுமென்றும், வண்டையென்ற ஊரின தலைவனாகக் கருணாகரனையும், மணவில் என்ற ஊரின்தலைவனாக இக்காலிங்கராயனையும் பரணியும் சாஸனங்களும் முறையே வேறுபடக்கூறினும், முதலில் வண்டையிலிருந்த கருணாகரனே கலிங்கம்வென்றதனபின் மணவிலைத் தனக்குரிய ஊராக மாற்றியிருக்கக்கூடுமென்றும், ஸௌந்திரத்நஹாரத்தில்—குலசேகரன்மந்திரியாக இக்காலிங்கராசனைக் கூறியுள்ளதே எனின், அக் குலசேகரப்பெயர் அபயனுக்குரியதென்பது 'வாழி சோழ குல சேகரன்' என்ற பரணித்தொடரால் அறியப்படுதலின், அவ்வபயனே அந் நீதிநூல் கூறும் குலசேகரன் என்றும் எழுதியிருக்கின்றார்கள்.

இவற்றால், குலசேகரன்மந்திரி காலிங்கராசன், மணவிற் காலிங்கராயனான அருளாகரன, கலிங்கம்வென்ற கருணாகரன் என்ற மூவரும் ஒருவரே என்பது ஐயரவர்கள் முடிபாதல் நன்குவிளங்கும். இக் கொள்கைக்கு அவர்கள்கூறிய ஏதுக்கள் பொதுப்பட நோக்கும்போது பொருந்தியவைபோலவே தோற்றினும், ஆராய்ச்சியில் அதற்குத் தடைகள் பல நிகழ்கின்றன. ஐயரவர்கள் ஈற்றிற் குறித்தபடி, 'சோழகுல சேகரன்' என்ற பரணித்தொடரைக்கொண்டு அபயனுக்குக் குலசேகரனென்ற பெயருண்டென்று கருதுவது ஏற்புடையதன்று. அத்தொடர் ஒன்றுடனொன்று இணைந்து 'சோழகுலத்துக்குக் கிரீடம்போன்றவன்' என்ற பொருள் பயப்பதாம். 'சோழகுலதுங்கன்'(82), இரவிகுலோத்தமன் (12), உபயகுலோத்தமன் (2) என்பனபோல, 'சோழகுலசேகரன்' என்பதும் பாடலமைதிக்காகக் கவி அமைத்துக்கொண்டதேயன்றி, இயற்பெயரைக் குறிக்குந் தொடராகாது. இங்ஙனம் முன்பின்சேடணமின்றித் தனித்தநிலையில், குலோத்துங்கன் என்பதுபோலக் குலசேகரனென்பது அபயனுக்கு எங்கும் வழங்கக்காணாமையால், ஸௌந்திரத்நஹாரஞ்செய்த காலிங்கராசனை அவ்வபயன்மந்திரியாகக் கருதச் சிறிதும் இடமில்லையென்க. எனவே, ஐயரவர்கள் காட்டியவாறு, பாண்

டியன் மாறவர்மன்—மூதற்குலசேகரனது (கி. பி. 1268–1308) மந்திரியாகச் சாஸனத்தால் அறியப்பட்ட காலிங்கராசனாகவே, குலசேகரஸ-சதுர்வேதிமங்கலத்தைத் தொகுத்த காலிங்கராயனைக் கருதல் பெரிதும் பொருந்துவதென்னலாம். காலிங்கராசனென்ற பெயர் பாண்டியன்கீழமர்ந்த அதிகாரிகள் சிலர்க்கும் சாஸனங்களில் வழங்குதல் அறியத்தக்கது.

இனி, மணவிற் காலிங்கராயனது சாஸனங்களின் *வடமொழிப் பகுதியுள்—அவனுக்குச் சபாநர்த்தகன், மானவதரன் அருளாகரன் என்ற பெயர்களும் தமிழ்ப்பகுதியுள் கூத்தன், காலிங்கர்கோன், தொண்டையர்கோன் என்ற பெயர்களும் பயில்கின்றன. இவற்றுட் கூத்தன் என்பது சபாநர்த்தகன் என்ற வடபெயரோடு ஒத்த பொருளது. அவ்வாறே, அருளாகரன் என்பது கருணாகரனோடு ஒத்ததாய் ஒருவன் பெயர்களேயாம் என்றும், காலிங்கராசனுக்கு மணவில் என்ற ஊரையும், கருணாகரனுக்கு வண்டையென்ற ஊரையும் வேறுபடச் சாஸனங்களும் பரணியுங் கூறுகின்றனவே எனின், அப்பரணி கூறும் கலிங்கவெற்றிக்குப் பின்பு கருணாகரன் என்ற பெயர்நீங்கிக் காலிங்கராசன் என்ற பெயரும், வண்டையை நீங்கித் தொண்டைநாட்டு மணவில் என்ற ஊரும் அபயன்சேனாபதி பெற்றவனாதல்வேண்டுமென்றும் ஐயரவர்கள் கருதுகின்றார்கள். இக்கூற்றுக்களை ஆராய்வேன்.

தொண்டையர்கோ, அருளாகரன், காலிங்கராயன் என்ற பெயர்கள் கருணாகரனுக்கும் பொருந்தக்கூடியனவாயிருத்தல்பற்றிப் பொதுவாக அவ்வாறு கருதக்கூடுமேனும், ஊன்றிநோக்குமிடத்து அப்பெயர்களையுடையான் கருணாகரனின் முற்றும் வேறானவனென்பதே தெளிவாகின்றது. கருணாகரன் பல்லவவமிசத்தவனென்பது சயங்கொண்டார்வாக்கால் நன்கறியப்பட்டதாம். இக்காலிங்கராசனோ வேளாளமரபினன். இதனை "வேளாண் குடிமுதலான் தொண்டையர்கோன்' என்னும் திருவதிகைச் சாஸனப் பாடற்பகுதியால் (18) அறியலாம். பல்லவர் வேளாளமரபினரல்லர் என்பது திண்ணம். "பிரமனுதியாக வாராநின்ற"வர் என்றும், பாரத்துவாசகோத்திரத்தவர் என்றும் பல்லவர்க்

---

* S. I. I. IV, no. 225; திருவதிகைச் சாஸனம் (செந்தமிழ், தொ. 23, பக்—கூகூ,௩).

குக் கூறப்படும் குலவரலாறுகள், வேளாளர்க்கு எவ்வகையினும் இயைய வனவல்ல. "மறைமொழிந்தபதி மரபின்வந்த குலதிலகன்" என்று கருணாகரனைப் பிரமன்மரபினனாகவே சயங்கொண்டார் பாடுதலுங் காண்க.* இனிக் காலிங்கராயனை 'வேளாண்குடிமுதலான்' என்றதற் கேற்ப, அவனை 'அரும்பையர்கோன்' என்றும் சிதம்பரசாஸனப் பாட் டொன்று (23) கூறுகின்றது. 'அரும்பை' என்பது வேளாளர் குடிப்பெயருள் ஒன்று; 'அரும்பூர்க்கூற்றத்து வேளாளர்'† என்பது வழக்கு. இவற்றால், அருளாகரனான காலிங்கராசனும் கருணாகரத் தொண்டைமானுங் குலத்தால் வேறுபட்டவர் என்பது விளங்கியது.

இனி, தன்னரசனை 'அபயனுக்கேயாக—மலைகின்ற தொண்டை யார் மன்' ஆகிய காலிங்கராயனது போர்ச்செய்கைகளுள், மலைநாட்டில் அவனடத்தியவற்றையே, அவனைப்பற்றிய சாஸனப்பாடல்கள் மிகுதி யுஞ் சிறப்பிக்கின்றன.

"தென்னன், குடமலை நாடெறிந்து கொண்டவேற் கூத்தன்" (திருவதி. சா. 6)

"மலைநாடு கொண்டபிரான்" (ஷை. 14)

"வேணாடும் வெற்பனைத்துஞ் செந்தீ விளைவித்தான்" (ஷை. 22)

"வில்லவர்தம் வெஞ்சிலையி னாற்றலை மாற்றியகோன்" (சிதம்.சா.5)

"சேரனளப்பரிய வாற்றற் கிழிவு கண்டான்" (ஷை. 15.)

என்பன காண்க. கலிங்கப்போர்க்குப் பின்பே, இவன் காலிங்கராயன் என்ற பேரையும், மணவில் என்றவூரையும் பெற்றவனாயின், அப் போர் வெற்றிக்குப்பின் வரையப்பட்ட சாஸனங்களிலுள்ள வடமொழிச்சுலோ கங்களும் தமிழ் 55-வெண்பாக்களும், கலிங்கத்திலடைந்த அவன் பெரு வெற்றியை வெளிப்படக்கூறிப் பலபடியாகப் புகழாமற்போகுமோ? அவ் விசயம்பற்றிய குறிப்பொன்றுமே அப்பாடல்களிற் காணப்படாமைக்குக் காரணம் யாது? சாஸனங்களில்—

* கலிங்கத்துப்பரணியாராய்ச்சியுள் '11. கருணாகரன்மரபு' என்ற தலைப் பின்கீழ் என்னால் எழுதப்பெற்ற விஷயங் காண்க (பக். 18—19).

† 'அரும்புகட்டி வேளாளர்' என்று இக்காலத்தார் சிதையவழங்குவர்.

"வடவேந்தர் செல்வமெலாம் வாங்கவேல் வாங்குங்
குடைவேந்தன் தொண்டையார் கோ." (சிதம். சா. 2)

"மலைமன்ன ரேனை வடமன்னர் மற்றக்
குலமன்னர் செல்வமெலாங் கொண்டு" (ஷை. 4.)

என்று பொதுவாக வடமன்னரைக் காலிங்கர்கோன் வென்றசெய்தி குறிக்கப்பட்டதாயினும், அவன் அப்பெயர்பெற்றதற்குச் சிறந்தகாரணமாதற்குரிய கலிங்கப்போரைச் சுட்டியபாட லொன்றுமே காணப்பெறாமையால், அவ் வடமன்னர் கலிங்கரன்றி வேறானவரென்பதே தெளிவு. அவ்வாறே, மணவில் என்ற ஊரும், கலிங்கவெற்றிக்குப்பின் அவன் வண்டையைவிட்டு மாற்றிக்கொண்டதென்பதும் பொருத்தமன்று. மேலே நான் விளக்கிப்போந்தபடி, வண்டையென்ற வண்டாழஞ்சேரி, சோணாட்டிலே கருணாகரனுக்குப் பல தலைமுறைகட்கு முன்பே சோழவதிகாரிகள் வாழ்ந்துவந்த பிரபல ஊராகும். அவ்வூரினனாகிய சோழசேனாபதி கலிங்கவெற்றிக்குப் பின்பு, அவ்வூரின்வாசனையும் இல்லையாம்படி அதனை அறவே விட்டொழிய நியாயமில்லை. வண்டைக் கருணாகரன என்று சயங்கொண்டாராற் பெரிதுஞ் சிறப்பிக்கப்பெற்றவன, மணவிற் காலிங்கராயனாக ஊரும் பேரும் மாறும்படி அவ்விரண்டற்குஞ் சேர நேர்ந்த தௌர்ப்பாக்கியந்தான் என்னையோ? ஊரைமாற்றியவனாயின, மணவிற் சேனாபதியைப்பற்றிய 55-சாஸனப்பாடல்களுள் ஒன்றேனும், அவனது பழையவண்டையைச் சுட்டாதுபோகாதென்பதும் ஒருதலை.

இனி, காலிங்கராசனென்றபெயரை மணவிற் சேனாபதிபெற்றதற்கு, பரணிகூறுங் கலிங்கப்போரே காரணமாகவேண்டுமென்றும் நியதியில்லை. அபயனது நீண்டஆட்சியில் அவனது 23-வது ஆண்டுக்குமுன் (கி. பி. 1095) ஒரு கலிங்கப்போரும், 45-வது ஆண்டுக்குமுன் ஒரு கலிங்கப்போரும் நடந்தேறின என்பது சாஸனபரிசோதகர்க்கெல்லாம் ஒத்தது. அவற்றுள் முன்னதாகியபோரில் அச்சேனாபதி வெற்றிபெற்றதினின்று காலிங்கர்கோன் என்ற பெயர் அரசனால் அவன் பெற்றிருத்தல்கூடும். அன்றேல், வமிசபரம்பரையில் அப்பெயர் அவனுக்கு வழங்கியிருத்தலும் ஆம்.* இனி, இக்காலிங்கராயனும், கருணாகரனும் வெவ்வேறானவரென்பதற்கு மற்றொரு சிறந்த பிரமாணமும கூறுவேன.

* முதல் இராசேந்திரனாட்சியில, சோழவதிகாரிகளுள் ஒருவன காலிங்கராசன் என்ற பெயர் கொண்டிருத்தலுங் காண்க. (T. A. S. VOL. 1. p. 165.)

கவிச்சக்கரவர்த்தியாகிய கூத்தர், அபயன்மகனான விக்ரமசோழன் மேல் *உலாப்பாடியுள்ளசெய்தி பலரும் அறிவர். உலா என்பது தலைவனொருவன் யானையேறிப் பவனிபோந்ததை வருணிப்பதாய், அவன் இளமையைப் பலபடியாகச் சிறப்பித்துப்பாடும் பிரபந்தமாகும். அதனால் விக்கிரமசோழனது ஆட்சித்தொடக்கத்தே கூத்தர் அவ்வுலாப் பாடியவர் என்பது பெறப்படும். அக்காலத்தில், தந்தை அபயனிடம் பிரபலராய் விளங்கிய சேனாபதிகளிற் பலரும் சீவிதராயிருந்தவரென்பது, இன்னாரின்னார் அவ்விளஞ்சோழனது பவனியுடன்போந்தனர் என்று விவரமாகக் கூத்தர் பாடுதலினின்று தெரியவருகின்றது. அங்ஙனம் உடன்சென்ற தானைத்தலைவருள்ளே, கருணாகரனை—"ஒருநாட் கொண்ட பரணி, மலையத் தருந்தொண்டை மானும்" என்று தலைவனாகக்கூறிவிட்டுப் பின், முனையர்கோன், சோழகோன், கண்ணன், வாணன் என்ற இவர்களைக் குறித்து, அடுத்து ஆறுவானாக—

"...............................வேங்கையினுங்
கூடார் விழிஞத்துங் கொல்லத்துங் கொங்கத்தும்
ஓடா விரட்டத்து மொட்டத்தும்—நாடா
தடியெடுத்து வெவ்வே றாசிரிய வீரக்
கொடியெடுத்த காலிங்கர் கோனும்"

என்று, காலிங்கராயனைத் தனியே சிறப்பிக்கின்றனர், ஒருகாலத்தவரான அக்கூத்தர். இதனால், கருணாகரனும் காலிங்கராயனும் வேறானவரே என்ற மேற்கூறிப்போந்த என்முடிபு, ஐயத்துக்கிடமின்றி உறுதிப்படுதல் காண்க. இவ்வுலாவடிகளிற் காலிங்கர்கோன் புரிந்தனவாகக்கண்ட போர்களனைத்தும் இளைஞனான விக்கிரமசோழன்காலத்து நடந்தனவல்ல என்பதும், அவன் தந்தைகாலத்து நடந்தேறியவை என்பதும் சொல்லாதே அமையும். உலாவிற் குறிக்கப்பட்ட காலிங்கர்கோனே சிதம்பர முதலிய சாஸனப்பாடல்கள்கூறும் காலிங்கர்கோன் என்பதற்கு, அவ்வுலாவடிகளிற்கண்ட போர்ச்செய்திகள் பலவும் சாஸங்களிலும் சிறப்பிக்கப்பட்டிருத்தலே தக்க சான்றாகின்றது. கொல்லம் முதலிய மலைநாட்டில் நிகழ்ந்த போர்களை—

"தென்னன், குடமலை நாடெறிந்து கொண்டவேற் கூத்தன்"
(திருவதி. சா. 6.)

* இவ்வுலா, செந்தமிழ்ப் பிரசுரங்களுள் ஒன்றாகப் பலவருஷங்கட்குமுன் என்னாற் பதிப்பிக்கப்பெற்றுள்ளது.

"தென்னாடன் சாவேற்றின்* றிண்செருக்கை யன்றவித்தான்."

(ஷை. 16)

"கொல்லமழிவுகண்டான்" (சிதம். சா. 15.)

என்பவற்றாலும், வேங்கை, இரட்டம், ஒட்டத்துப்போர்களை,

"வடவேந்தர் செல்வமெலாம் வாங்கவேல் வாங்குங்
குடைவேந்தன் தொண்டையார் கோ." (சிதம். சா. 2)

"மலைமன்ன ரேனை வடமன்னர் மற்றக்
குலமன்னர் செல்வமெலாங் கொண்டு" (ஷை. 4.)

என்பவற்றாலும் சாஸனப்பாடல்கள் குறிப்பிடுதல் கண்டுகொள்க. மற்றைப் படைத்தலைவரினும், காலிங்கர்கோன் புரிந்த போர்களைக் கூத்தரைப்போலவே சாஸனங்களும் மிகுதியாகக் கூறுதல் ஒப்பிடத்தக்கது.

இனி, தொண்டைமான் என்பது, தொண்டைநாட்டார்க்குத் தலைவன் என்ற பொருளுடையதாதலின், அங்ஙனந் தலைவராயினோர் பலர்க்கும் வழங்கக்கூடியதேயாம். கருணாகரனுக்கு அச்சிறப்புப்பெயர், அவன் தொண்டைநாடாண்ட பல்லவமரபினனாதலால் வழங்கியதென்பதும், காலிங்கராயனுக்குத் தொண்டைமண்டலத்தில் அவன் தலைவனாயிருந்தமையால் வழங்கியதென்பதும், அவ்விருவகையார்க்கும் தொண்டைநாட்டின் பழைய தலைநகரங்களையும் உரிமையாக்குதல் கூடுமாபென்பதும் அறியத்தக்கன.

அடுத்து, அருளாகரன் என்ற சிறப்புப் பெயரைச் சாஸனங்கள் காலிங்கராயனுக்கு வழங்குமுறையை நோக்குமிடத்து, அஃது, அவன் கருணாகரனின் வேறானவன் என்பதனையே தெளிவாக்குகின்றது. அருளாகரப்பெயரும் கருணாகரப்பெயரும் ஒருவனே கொண்டனவாயின், சாஸனத் தமிழ்ப்பாடல்களில் மணிப்பிரவாளத்தொடராக அருளாகரன் என்ற பெயரை அமைத்துப் பாடுதல் ஏற்குமாயினும், அதன் வடமொழிச் சுலோகப்பகுதியுள், கருணாகரன் என்ற வடதொடரையே

---

* "கடன்மலைநாட்டுள்ள, சாவே றெல்லாந் தனிவிசும் பேற, மாவே றியதன் வருதினித் தலைவரைக், குறுகலர் குலையக் கோட்டா றுட்பட, நெறிதொறு நிலைகளிட் டருளி" என்ற அபயன் மெய்க்கீர்த்தியால், சாவேறுகளின் செருக்கை யழித்தது, மலைநாட்டுக் கோட்டாற்றுப்பக்கத்தென்பது விளங்கும்.

அமைத்திருத்தல்வேண்டுமன்றோ? ஏதோ நிர்ப்பந்தமிருந்தாலன்றி, வடதொடரான கருணாகரப்பெயரைவிட்டொழித்துத் தமிழ்கலந்த அருளாகரப்பெயரைச் சாஸனசுலோகங்கள் ஆள நியாயமேயில்லையாம். அதனால், பல்லவனான வண்டைக்கருணாகரனின் வேறுபிரித்து மணவில் அருளாகரனைக் காட்டும் நோக்கத்தாற்றான் அச்சுலோகங்களில் தமிழ்கலந்த அத்தொடர் வழங்கப்பட்டிருக்கிறது என்று கருதல் தகுமென்க.

மேற்கூறிப்போந்த பிரபல காரணங்களாலும் பிரமாணங்களாலும் ஸமுத்திரதந்ஹாரஞ்செய்த காலிங்கராசரும், அபயனசேனாபதிகளுள் ஒருவனான மணவிற் காலிங்கராயனும், அவன பிரதமசேனாபதியான வண்டைக் கருணாகரனும் மூவேறு தலைவர்களே என்பதும் அம்மூவரை யும் ஒருவராக முடிப்பதற்கு ஆதாரமில்லையென்பதும் தெளிவாகத் தக்கன.

இனிக் கலிங்கத்துப்பரணிப் பிரதிகளிலும், தண்டியலங்காரமேற் கோள்களிலும் கலிங்கப்போரையும் கருணாகரனையும்பற்றிக் காணப்படும் பழம்பாடல்களைக் குறிப்பிட்டுவிட்டு இவ்வுபந்யாசத்தை முடிக்கின்றேன்.

*"தடங்குலவு நாண்மாலைத் தாமத்தன் கையில்
விடங்குலவு வெள்வாள் விதிர்ப்ப—நடுங்கியதே
கோண்மேவு பாம்பின் கொடுமுடிய தல்லவோ
வாண்மே வியகலிங்கர் மண்"† (கலிங். பரணிப்பிரதி).

*"சாநிரைத் தாலன்ன தண்பணி தூங்கத லைமிசைச்செங்
கரநிரைத் தாரையுங் காண்பன்கொ லோகலிங் கத்துவெம்போர்
பொரநிரைத் தார்விட்ட வேழமெல் லாம்பொன்னி நாட்டளவும்
வரநிரைத் தான்றொண்டை மான்வண்டை மாநகர் மன்னவனே" (ஷை).

"ஒருவ ரொருவர்மேல் வீழ்ந்துவட நாடர்
அருவ ருவரென வஞ்சி—வெருவந்து
தீத்தீத்தீ யென்றயர்வர் சென்னி படைவீரர்
போர்க்கலிங்க மீதெழுந்த போது" (தண்டி. 103.)

---

*இக்குறியுள்ள பாடல்களிரண்டும், சென்னை 'மியூசியம்' கையெழுத்துப் புத்தகசாலையிலும், தஞ்சைச் சரச்சுவதிமாலிலும் உள்ள பரணிப்பிரதிகளின் இறுதியிற் கண்டவை.

†'மன்' என்றும் பாடம்.

"கோட்டந் திருப்புருவங் கொள்ளா ரவர்செங்கோல்
கோட்டம் புரிந்த கொடைச்சென்னி—நாட்டஞ்
சிவந்தன வில்லை திருந்தார் கலிங்கஞ்
சிவந்தன செந்தீத் தெற" (தண்டி. 76).

"நாடத்தான் மாரியுங் கண்ணால் வெயிலும்
நிரைவயிரக் கோட்டா னிலவுஞ்—சொரியுமால்
நீளார்த் தொடையதுல னேரார் கலிங்கத்து
வாளாற் கவர்ந்த வளம்" (ஷை. 58).

ஸ்ரீ:

கலிங்கத்துப்பரணியாராய்ச்சிச்

சந்தோஷம்.

செந்தமிழில் யான் வெளிப்படுத்திய "கலிங்கத்துப்பரணியாராய்ச்சி" பற்றி, அப் பரணியின் புதுப்பதிப்பாளர், ஸ்ரீமத்: அ. கோபாலைய ரவர்கள் எழுதிய 'சில குறிப்புக்களைப்' பார்வையிட்டேன். பரணிப்பதிப் பிற் செய்தற்குரியனவாக யான் குறிப்பிட்ட திருத்தங்களிற் பலவும் தமக்கு உடம்பாடே என்பதை—"பழைய நூல்களை அச்சிடும்விஷயத் தில் எத்துணையாற்றலுடையார்க்கும் சில தவறுகள் நேர்தல் இயற்கை யென்பது ஆன்றோரறிந்தவிஷயமே; அவை ஆராய்ந்து திருத்தியமைக் கப்படவேண்டுமென்பதும் எல்லார்க்கும் ஒத்த துணிபே" எனக் குறிப் பித்துப்போந்த அவர் பெருமிதவுரை, குறிப்பிடத்தக்கதாம். ஆயி னும், என்னாராய்ச்சிகளிலும் பிறழ்ச்சிகள் உள்ளனவென்றுகருதி, நான்கு விஷயங்களைக்குறித்து அவர் வாதிக்கின்றார். அவர் கூறும் வாதங்களை இனி நோக்குவோம்.

I. (i) கடைதிறப்பின்பொருள்.

கடைதிறப்பென்பது—கலிங்கப்போர்க்குச்சென்ற வீரராகிய தங் கணவரைப் பிரிந்த மகளிர் ஊடியுங் கவன்றும் பகலில் தம்வீட்டுக்கதவு களை அடைத்துக்கொண்டு உள்ளேயிருப்ப, சயங்கொண்டார் அவர் வீட்டு முகப்புக்களிற்சென்று தாம் பாடும் கலிங்கவெற்றியைக்கேட்கக் கதவுதிறக்குமாறு அவர்களை வேண்டுதலே என்பது பதிப்பாளர்கருத்து.

என்கருத்து—அபயன் அடைந்த கலிங்கவெற்றியைக் கொண்டா டும் விழாவுக்கு நகரத்துப் பல்வேறுமகளிரும் காலையிலெழுந்து ஒரு வரையொருவர் துயிலெழுப்புவதே என்பது. என்கூற்றுப் பொருந்தா தென்பதற்கு அவர்கூறும் ஏதுக்களை ஒவ்வொன்றாய் ஆராய்வோம்.

(1) "கருணாகரன்றன் களப்போர்பாடக் கடைதிறமின்' என்று கடைதிறப்பை முடித்து, மேலே 'களப்போர் விளைந்த கலிங்கத்து.... உறையுங்காடு பாடுவாம்' என்று புலவர் காடுபாடப்புகுதலால், கடை

திறப்புப் புலவர்கூற்றன்றி நகரமகளிர்கூற்றெனல் தகாது" என்றார்.— கடைதிறப்புக்கு அடுத்த இயலின் தொடக்கத்தே 'காடுபாடுவாம்' என்று புலவர்கூறிய தொடர், தாம் பாடப்புகுவதைக் கேட்கும்படி வீரமகளிரைநோக்கியகூற்றென்பது எதனாற் பெறப்பட்டது? "நாடுகூறினும் நகரங்கூறுவாம்" என்ற கம்பர்வாக்குப்போல, அதிகாரங்களின் தொடக்கத்துக் கவி கொண்டுமொழியப்புகுவதை அது குறிப்பதன்றிக் கடைதிறந்தமகளிரைநோக்கிய கூற்றாகுமோ? 'அணங்கினுக்குப் புதிய கோயிலுண்டது விளம்புவாம்' 'அவ்வணங்கை யகலாத வலகைகளை யினிப்புகல்வாம்' என இயல்களின் தொடக்கங்களினும், 'மன்னர் வீரனுந் தென்றிசைக்குப் புகுந்தமை செப்புவாம்' என நூலிடையினும் பாடியவாற்ற, நூல்கேட்போர் உணரும்படி புலவர் ஈண்டும் நுதலிப்புக்கார் என்பதனறி, 'காடுபாடுவாம்' என்பது, கடைதிறந்தபின் மகளிரைநோக்கி, அவர் பிரசங்கஞ்செய்பலாயினர் எனல் பொருத்தமற்றதென்க.

(2) "இலங்கையெறிந்த கருணாகரன்ற னிசைவெஞ்சிலையின் வலி கேட்பீர்" என்று மகளிர் கேட்பவராகவே விளிக்கப்பட்டிருத்தலால், அக்கேட்பவரின் வேறான புலவரே பாடுபவரென்பது நன்கு விளங்குகின்றது" என்றார்.—தாம் பாடுவதைக் கேட்டுவக்கவே மகளிரைச் சயங்கொண்டார் விளிப்பவராயின், 'சிலையின் வலிகேட்பீர்' என்றதுபோலவே, அத்தாழிசையுட் 'களப்போர் கேட்கக் கடைதிறமின்' என்றன்றோ அவர் பாடியிருத்தல்வேண்டும்? கடைதிறக்கும்படி புலவர் வேண்டுவது மகளிர் கேட்பதற்கேயாகவும், பாடுவதையே ஈற்றுத்தாழிசைகளிரண்டாலும் அவர் வற்புறுத்தியதன் நோக்கம் என்னை? 'களப்போர்பாடக் கடைதிறமின்' என்பதற்கு 'நான் போர்பாடுவதை நீங்கள் கேட்கக் கடைதிறமின்' என்று, தங்கருத்துக்கியைய இழுத்துக்கொள்ளும்பொருளினும் "பந்தார் விரலியுன் மைத்துனன் பேர்பாட...வந்து திறவாய்" என்ற திருப்பாவைத் தொடருட்போல, 'நாமெல்லாஞ்சேர்ந்து களப்போர் பாடுதற்குத் திறமின்' என்பதே நேரான பொருளாகாதோ? இவற்றை அறிஞரே ஆராய்ந்து தெளியவல்லர். இலங்கையெறிந்த கருணாகரனது வெற்றிப்பாட்டைக்கேட்டு நீவிர் தெளிந்தவராதலின், அதனினுஞ் சிறந்த கலிங்கவெற்றியைப் பாடுதற்கு நீரே தக்கவரென்பது பின்னடியாற் பெறப்படுங் கருத்தாதலுங் கண்டுகொள்க.

(3) "மகளிர்கூற்றுயின் 'களப்போர்பாட வம்மினோ' என்றன்றோ, அமைந்திருத்தல்வேண்டும்" என்றார்.—'பாடக்கடைதிறமின்' என்றால், 'பாடுதற்காகக் கடைதிறந்து வம்மின்' என்பது பொருளாகாதோ? 'யான்பாடுவதை நீங்கள்கேட்கக் கடைதிறமின்' என்று இவர் கூறும் பொருளினும் 'கடைதிறந்து வம்மின' என்பதுதானே கருத்தாகும்? ஆகவே வம்மின் என்னுமையால் நேர்ந்த இழுக்கென்னையென்க

(4) 'இரவிடை உறங்குமகளிரை விடியுமுன்னெழுப்பிப் பாணி பாடப்புகுவிக்குமுறை யாங்கும் கண்டதில்லை' என்றார்—ஆபின், பகலிடைக் கதவடைத்திருக்கும் மகளிரைப் புலவர் சென்று வெற்றி கேட்பிக்கும் முறை, எங்குக் காணப்பட்டதோ? போர்க்குச் சென்ற தங்கணவரை நினைந்து ஊடியுங் கவலையுற்றும் பகலிற் கதவடைத் திருந்த மகளிரைப் புலவர் திறக்கவேண்டுகின்றார் என்பதே பதிப்பாளர் கருத்தாம். ஆபின், பிரிந்தநிலையிற் கணவருடன் ஊடுதல் மகளிர்க்கு எங்ஙனம் நிகழ்ந்ததோ? பிரிவிலே, கதவைபடையாமலும் அவர்தம் ஊடலைநிகழ்த்துமிடத்து நேருந் தடை என்னே? பதிப்பாளர் கருத்துப் படி, கடைதிறத்தற்குரிய மகளிரெல்லாம போர்வீரமனைவியரே யாதலின், அவரெல்லாம் வீரக்குடியினா என்பது பெறப்படும்; படவே, தம்மரசன்பொருட்டுப் போர்க்குச் சென்ற கணவரது வெற்றியேவிரும்பி அவர்க்கு நன்மையுண்டாகத் தம் தெய்வங்களை வாழ்த்தியிருப்பதன்றி, பட்டப்பகலில் ஊடியுங் கவன்றுங் கதவடைத்திருந்தனரென்பது, அக் குடிமகளிர்க்கு ஏற்காததென்க. 'அடல்வேலாடவர்க் கன்றியு மவ்வின்— மடவரன் மகளிர்க்கு மறமிகுத் தன்று' என்றும், "கன்னின்று னெந்தை கணவன் களப்பட்டான்......எய்போற் கிடந்தானென் னேறு" என்றும் வீரப்பெருமையால் அன்னோரைச் சிறப்பிப்பதே முன்னோர்மரபாதலுங் காணலாகும். ஆகவே, பழையவழக்கொன்றைப்பற்றிப் பாணிப்பிர பந்தம் பாடப்புக்க புலவரொருவரை, ஒவ்வொரு வீரர்மனைவியர்வீட்டி லும் பட்டப்பகலிற் கொண்டு நிறுத்துவதும், அம்மகளிரையெல்லாம் ஒருங்குகூட்டிப் பாணிப் 'பாட்டுக்கச்சேரி' பண்ணுஞ் சிரமத்தை அவர்க்குக் கொடுப்பதும் சிறிதும் அடாதனவே என்க.

(5) "கோழியழைத்தன' 'ஆம்பல்வாய் கூம்பின' என்று திருப் பாவையுட்கண்ட விடியற்காலக் குறிப்பும் கடைதிறப்பில் இல்லை" என்றார்.

இரவிடை நிகழ்தற்குரிய கனவுநிலைகளையும் அக்காலத்துக் கணவருடனிருந்து நிகழ்த்தும் கலவிபுலவிகளையும் கூறி, 'புலர்ந்ததறியாதேகொழுநராகவமளிமிசைத்துயில்வீர்' 'விடிவளவும் பொய்யேயுறங்கு மடநல்லீர்' 'விடிவளவுந் தோயுங்கபாடம்' என்றும் புலவர் பாடுவாராயின் அவை விடியற்காலம் என்பதையன்றி வேறுகாலத்தையும் குறிக்குமோ? இதனினும் வெளிப்படைவேண்டுவது எற்றுக்கென்க.

(6) "இவையெல்லாம் மகளிரியல்பு உணர்த்திநின்றவிசேடணமாவதல்லது காலக்குறிப்பாகமாட்டா" என்றார்.—விசேடணங்களாயின் பதிப்பாளர்கருத்துக்கேற்றவாறு பகல் மாலைக்காலநிகழ்ச்சிகளாலும் அம்மகளிரை விசேடித்திருக்கலாமே? இரவுச்செய்திகளும் விடிதலுமேகூறிப் புலவர்பாடியதென்? காரணமின்றியே, 'காலக்குறிப்பாகமாட்டா' என்னுங் கூற்று வற்கத்தக்கதன்றென்க.

(7) "அருவருப்பும் அச்சமுமிக்க பேயும்பிணமுமிக்க செருக்களத்தியல்பு முதலியவற்றை மகளிர்பாடுவது அவரியல்புக்குத் தக்கதுமன்று" என்றார்.—இதனால், அத்தகைய செருக்களத்தியல்புகளாகத் தாம் பாடப்புகுவனவற்றைக் கேட்கும்படி புலவர் மகளிரைவேண்டுதல் அவரியல்புக்குத் தக்கதென்பது பதிப்பாளர் கருத்தாகின்றது. தீயதொன்றைத் தாமேசொல்வதிலுள்ள அருவருப்பும் அச்சமும் பிறர்வாயினின்று கேட்பதனால் உண்டாகா என்பது அவர் கொள்கைபோலும். பரணிப்போரைப் பாடுவது அன்றிக் கேட்பதொன்றின்கண்ணே கடைதிறப்பு—மகளிர் நிறுத்தப்பட்டிருத்தலால், அருவருப்பும் அச்சமும் அவரைவிட்டொழியச் சிறிதும் இடமில்லையென்க. தம்மரசாது வெற்றித்திறங்களை மகளிர்பாடுவதும், அப்பாடல்களுட்புறத்துறைகள் பலவற்றையும் புலவர்கள் கொண்டுமொழிவதும் பழைய மரபுகளே என்பதை முன்னூல்களால் உணரலாம்.

(8) "மகளிர்கலவிபுலவிகளை மகளிரே வியந்துபாடுதல் வழக்காறில்லை" என்றார்.—அக்கலவிபுலவிகளை அவர்முன்னின்று ஆண்மக்கள் வியந்துபாடுவதுதான் வழக்காறுபோலும்; தம்மினத்தவராய்த் தம்முடன் வேற்றுமையற்றுப் பழகுந் தோழியரினும், பெண்பாலாருடையகலவிபுலவிகளை அவர்முன்னின்றுகூறுமுரிமை ஆண்பாலார்க்கேயுரியதென்பது விபரீதமேயாம். 'கனவினிற் சயதான் புணரவே

பெறினும்' 'அவசமுற்று' "கூடுமிளம்பிறையின்" என்பனமுதலிய புலவிவருணனைகளை ஆண்மகனொருவன் அம்மகளிர்முன்னின்று கூறுவனாயின், அவர் நாணி வெறுத்தோடுவதன்றி வேறும் நிகழுமோ? சயங்கொண்டார் அத்தகைய செய்கைக்கொருப்பட்டாரென்று கருதல் பெரியதோர் அபவாதமாமென்க.

(9) சோழனுடன் ஊடிக் கதவடைத்து நின்ற அவன் தேவியை விளித்துக் கூத்தர் கதவுதிறக்கப்பாடிய செய்யுளைத் தமக்கு ஆதாரமாகக் காட்டினர்.—தலைவன் தலைவியருள் 'உணர்ப்புவயின்வாராவூடல்' நிகழும்போது, அறிவர், இடைநின்றுணர்த்தற்கு உரியர் என்னு மரபுபற்றி அப்புலவர் அவ்வாறு இடைநின்றனர். அதுபோற் சயங்கொண்டார் யாரது 'நெடுந்துனி'யை இங்கே தீர்க்கலாயினர்? 'ஊடுவீர்' என்பனபோலக் கடைதிறப்பில்வருங் கூற்றுக்கள், பதிப்பாளர்கருத்தின் படி மகளிரியல்புணர்த்தும் விசேடணங்களாதலின், அவை அவர்க்கு ஆதாரங்களாகாவாம்.

(10) 'களப்போர் பாடக் கடைதிறமின்' என்றுமுடியுந் தாழிசைகள், தம் பதிப்புள் கடைதிறப்பினீற்றில் தாம் அமைத்தனவென்றும், மற்றப்பதிப்புக்களில் அவை இடையே காணப்படுவன என்றும், வேறு பதிப்புமுறையைத் தழுவிய நான், அவற்றை ஈற்றுத்தாழிசைகளாக எழுதியது மாறுமென்றுங் கருதி யெழுதினர். அத்தாழிசைகளைத் தக்க காரணமின்றியே அவர் ஈற்றிலமைக்க, யான் அங்ஙனம் அமைத்தது சிறந்ததோர் ஆதாரம்பற்றியேயாகும். சயங்கொண்டாரை அடியொற்றிக் கூத்தர்பாடிய தக்கயாகப்பரணியுள்—

"வாசவனார், குயிலாய்ப் பிறந்த கதைபாடக்
கூடக் கபாடந் திறமினோ

"சிரமொருவர், முக்கா லிழந்த கதைபாட
மூரிக் கபாடந் திறமினோ"

என்றும், அக்கூத்தர் நூலை அடியொற்றிப் பாடப்பட்ட இரணியவதைப் பரணியுள்—

"இரணியனைத், தாமங் கிடந்த கதைபாடத்
தகைபொற் கபாடந் திறமினோ"

"அவுணேசன், மடியிற் றுயின்ற கதைபாட
மாடக் கபாடந் திறமினோ"

என்றும் அவ்வப்போர்வெற்றிகளைப் பாடுவதே கடைதிறப்பின் கருத்தென்பதைக்கூறி அப்பகுதியை முடித்து, பின்னர், 'அணங்கின்.... காடுபாடுவாம்' என்று அடுத்தஇயல் தொடங்கப்பெற்றுள்ளது. இவ்வனம், அடியொற்றிச் செய்யப்பட்ட நூல்களின முறையே அவற்றின் முன்னூற்கும் முறையாம் என்பது நன்கு விளங்கலின், வேறுபதிப்புக்களிலே இடையிற்கண்ட தாழிசைகளிரண்டும் கடைதிறப்பினீற்றில் வைத்துப் படித்தற்குரியன என்பதே என் நோக்கமாமென்க. இவற்றால் பதிப்பாளர் என் கருத்திற்கண்ட தவறுகள் யாவும் தவறுதல் காண்க.

இனி, கடைதிறப்புக்கு யான்கூறிய கருத்தைத் தொகுத்து விளக்குவேன். 'கடைதிறமின்' என்று வேண்டப்படுவோர், தலைநகரத்துப் பல்வேறு மகளிருமாமென்பது முன்னரே ஆராய்ச்சியுள் நன்குவிளக்கப்பட்டது*. வீரர்மனைவியரே அதனுட் கூறப்படுவோரெனின்—'நனவினிற் சயதரன் புணரவே பெறினும்' 'நரதுங்கசெனு டணைவுறாது' என்பன முதலியவை அம்மகளிர்க்குச் சிறிதும் இயையாவாம். இயையுமேல், அவர் கற்புநெறி நிலைதலையும். அன்றியும், "காவலன் காவல் இன்றெனினின்று" ஆகிய மடவார்கற்பை அழித்தபழி அரசனையும், போர்முகத்தே தன் வீரரையெல்லாம் போக்கிவிட்டு அவர் மனைவியரிடம் அவன்புரிந்ததீச்செயலைப் புனைந்து பாடிய அபவாதம புலவரையும் ஒருபோதும் விட்டகலாவாம். ஆகவே, அக்கூற் றியாவும் போலியே என்றும், யான் கூறியதே கருத்தென்றும் தெளியலாம். இனி, கடைதிறப்பு ஏனைப்பொழுதுகட்கு ஏற்காமை மேலே(5) பெறப்பட்டமையின், எல்லா மங்கலங்களுந் தொடங்கற்குரிய காலையே பரணிவிழாவின் தொடக்கத்துக்கும் உரியதெனல் நன்கு பொருந்தும். "பரணியாவது—காடுகெழுசெல்விக்குப் பரணிநாட் கூழுந் துணங்கையுங் கொடுத்து வழிபடுவதோர் வழக்குப்பற்றியது ; அது, பாட்டுடைத்தலைவனைப் பெய்துகூறலிற் புறத்திணை பலவும் விராயிற்று" என முன்னோர் எழுதுவர் (தொல். செய். 149, நச்.). இதனால் கொற்றவைபொருட்டுப் பரணி நக்ஷத்திரத்தில் நடத்தும் விழாவொன்றுளதென்பதும், அவ்விழாவில் தேவியின்பொருட்டுக் கூத்தும் பலியுங் கொடுத்து வழிபடுவதுண்டென்

*கலிங்கத்துப்பரணி (1) ஆராய்ச்சியுட் கண்டுகொள்க.

பதும், அதனுள் தம்மரசனைப் பாட்டுடைத்தலைவனாக்கி அவன் வெற்றித்திறங்களைக் கொண்டாடுவரென்பதும் நன்கறியலாம். 'வழிபடுவதோர் வழக்குப்பற்றியது' என்பதனாலும் 'வழக்கெனப்படுவ துயர்ந்தோர் மேற்றே' என்பதனானும் அவ்வழக்கு, மக்கள்வழக்கே என்பது இனிது பெறப்படும். பதிப்பாளர் கருதியதுபோல்,* அது பேய்வழக்கன்று. பேய்வழக்காயின் 'பேய்கள் வழிபடுவதோர் வழக்குப்பற்றியது' என்று விசேடித்துக் குறித்திருப்பரென்பது திண்ணம். 'கூழுந் துணங்கையுங்கொடுத்து வழிபடுவதோர் வழக்கு' என்பதனால், அவை கொடுப்போர் மகளிரேயாவர்; என்னை? "மள்ளர் குழீஇய விழவினானும், மகளிர் குழீஇய துணங்கை யானும்" (குறுந். ௩௧.) "இலங்குவளை மடமங்கையர்—துணங்கையஞ்சீர் தழூஉமறப்ப" (மதுரைக்காஞ்சி 159–60) என மகளிர்க்குரியதாகவே துணங்கைக்கூத்துக் கூறப்படுதலால் என்க. விழாக்காலங்களிற் கூழுந் துணங்கைமுதலிய கூத்துங் கொடுத்துத் தெய்வங்களை வழிபட்டுத் தம்மரசனையும் நாட்டையும் வாழ்த்துவது மகளிரது பண்டைவழக்காதலை—

"காவற் பூதத்துக் கடைகெழு பீடிகை
புழுக்கலு நோலையும் விழுக்குடை மடையும்
பூவும் புகையும் பொங்கலுஞ் சொரிந்து
துணங்கையர் குரவைய ரணங்கெழுந் தாடிப்
பெருநில மன்ன னிருநில மடங்கலும்
பசியும் பிணியும் பகையு நீங்கி
வசியும் வளனுஞ் சுரக்கென வாழ்த்தி" (சிலப். 5, 67-73)

என்ற இளங்கோவடிகள்வாக்கானும் அறியலாம். இப்பரணிவிழாவும் அத்தகையதொன்றாகலின், அபயனது போர்ச்செய்திகளைப் பெய்து பாடப்புக்க சயங்கொண்டாரும், களப்போர்பாடிக் களிக்கும் இவ்விழாவின் தொடக்கமாக, அதற்குரிய மகளிரின் துயிலெடை கூறலாயினரென்றும், மார்கழிநீராட்டின்பொருட்டு மகளிரெல்லாம் வைகறையிலெழுந்து தந் தோழியரைத் துயிலுணர்த்துமாறுபோல, இவ்விழாவைக் கொண்டாடவேண்டி நகரமகளிர் ஒருவரையொருவர் எழுப்பலாயினரென்றுங் கொள்வதே ஏற்புடைத்தென உணர்க. தக்கயாகப்பரணி, இரணியவதைப்பரணிகளுள் வருங் கடைதிறப்புக்களிலே,

* "பேய்கள் கூழ்சமைத்துத் துணங்கையிட்டு வழிபடு"வதாக, இவர் தம் பதிப்பின் அரும்பொருள்விளக்கத்தொடக்கத்து எழுதியுள்ளார்.

வானரமகளிர், நீரரமகளிர், மேரு கயிலைகளில் வாழுமகளிர் முதலியோர் கடைதிறக்க விளிக்கப்படுகின்றனர். பதிப்பாளர்கருத்துப்படி நோக்கின், கூத்தரும் இரணியவதைப்பரணியாசிரியரும், அவ்வானம் மேரு முதலிய இடங்கட்கு நேரேசென்று, ஆண்டுத் தூக்கத்தாற் பகலிற் கதவடைத்திருந்த மகளிரைக் கதவுதட்டுபவராகக் கூறல்வேண்டும். இஃது அசம்பாவிதமேயன்றோ? இதனால், அவ்வவர் தோழியரால், அவ்வம்மகளிர் விழாக்கொண்டாட அழைக்கப்படுகின்றார் என்பதே குற்றமற்றதென்க. குறித்த விழாநாள் தொடங்கவும், இரவில் நிகழ்ந்த ஊடல் கூடல் முதலிய செய்கைகளால் அயர்ந்து துயிலெழாது காலையில் உறங்கிக்கிடக்கும் மகளிரை, அவர்செய்திகளைப் பலபடியாகவும் அசதியாடிக் கூறித் துயிலுணர்த்துமுரிமை,—'தாமே யவரோ' என்ற வேற்றுமையற்ற அவர் தோழியர்க்கேயுண்டென்பது சொல்லாமலே அமையும். திருப்பாவையிற்போலத் தோழியர்பேச்சென்று வெளிப்படக் கூறவில்லையேயென்று பதிப்பாளர் சங்கிக்கின்றார். வெளிப்படக்கூறினராயின், வேறாராய்ச்சிக்குமிடமுண்டோ? முன்னோரால் விளக்கப்படாத கடைதிறப்பின் கருத்தை, அப்பகுதியுட் கூறப்படுவனவற்றோடும் பண்டை வழக்குக்களோடுங்கூட்டி ஏற்பதொன்றைக் கொள்வதே உரியதென்க. தம் அரசனது பெருவெற்றியைக் கேட்டதும், அதனைத் தம் தலைவியர்க்குக் காலையிற்சென்று துயிலெழுப்பியுணர்த்திப் பாட்டொடு தொடுத்து வாழ்த்துவது அவராயத்தார் கொண்டொழுகிய மரபென்பது, செங்குட்டுவனது வடநாட்டுவெற்றியைத் தெரிந்த ஆயச் செவிலியர், அதனை அவன் தேவிக்கு அங்ஙனமுணர்த்திப்போந்ததால் தெளியலாம். இதனை—

"வெயிலிளஞ் செல்வன் விரிகதிர் பரப்பிக்
குணதிசைக் குன்றத் துயர்மிசைத் தோன்ற
... ...
துணையணை பள்ளித் துயிலாற்றுப் படுத்தாங்கு
எறிந்துகளங் கொண்ட வியநேர்க் கொற்றம்
அறிந்துரை பயின்ற வாயச் செவிலியர்
தோட்டுணை துறந்த துயரீங் கொழிகெனப்
பாட்டொடு தொடுத்துப் பல்லாண்டு வாழ்த்த"

(சிலப். 27, 195—213)

என்னும் இளங்கோவடிகள்கூற்றால் அறிக. விழாக்காலங்களிலே துணங்கை குரவை முதலிய கூத்துக்களையும், அம்மானை பந்து ஊசல் முதலிய ஆட்டங்களையும், தம் அரசனது போர்வெற்றிகளைப் புனைந்து பாடிக்கொண்டே நிகழ்த்துவது மகளிர்வழக்காதல், சிலப்பதிகாரமுதலிய முன்னூல்களால் தெளியத்தக்கது. அங்ஙனம் பாடுவது, வேந்தன் வெற்றித்திறங்களேயாயின், அவற்றுட் களவழி முதலிய புறத்துறைகள் பலவும் அமைதல் கூடியதன்றோ? அதனால் செருக்களத்தியல்புகளைப் புலவர் மகளிர்கூற்றாகக் கொண்டுகூறிச் சிறப்பித்ததனாற் குற்றமென்னை என்க. இவற்றால், கடைதிறப்புக்கு யான்கூறிய கருத்து, எக்குற்றத்துக்கும் இடமின்றி, முன்னூல்வழக்குக்களோடும் சயங்கொண்டார் குறிப்புக்களோடும் பெரிதும் ஒத்துமுடிதல் தெளியலாகும்.

II. (4) பேய்விழிப்பின் உவமை.

"கொள்ளி கொண்டிரண் டேமுழை யுட்புகக்
குன்றி தோன்றுவ போல விழிப்பன"

என்ற தாழிசைத் தொடர்க்கு "இரண்டு அம்புக்கூட்டினுட் புகுந்த அக்குன்றிமணி தோன்றுதல்போல விழிப்பன" என்று பதிப்பாளர் பொருள் கூறினர். பேய்விழிப்புக்கு இங்ஙனங் கூறும் உவமை சிறவாமையால், பாடமும் பொருளும் வேறுமென்று கருதி, சென்னை இராசாங்கக் கையெழுத்துப் புத்தகசாலைப் பாணிப்பிரதியொன்றிற் கண்ட 'குன்று தோன்றுவ' என்ற பாடம்† பொருட்பொருத்தமுறுதலை விளக்கினேன். இப்பாடம் நான் திருத்தியதென்றுகொண்டு அவர் குற்றங் கூறுகின்றனர். யாவர்க்கும் பொதுவாகக் காட்சிச்சாலையுள் வைக்கப்பட்டுள்ள பாணிப்பிரதியைக் குறிப்பிட்டுக் காட்டியவிடத்தும் இங்ஙனங் கூறுவார்க்கு, மெய்ப்பிக்கும்வகை வேறியாதோ? தம் பாணிப்பதிப்புக்கு உதவியாகச் சென்னை இராசாங்கக்கையெழுத்துப் புத்தகசாலைப்பிரதிகளை ஒப்பிட்டுப்பார்த்ததாக இவர் முகவுரையுள் எழுதியுள்ளார். அதன் பிரதியொன்றனுள் அமைந்துள்ள பாடத்தை, நான் திருத்தியபாடமாக எழுதியதினின்று, அப்பிரதிகளை இவர் பார்த்தவரல்லர் என்பது பெறப்

†இப்பாடம், ஸ்ரீ. வி. கோ. சூரியநாராயணசாஸ்திரியார் பதிப்பித்த அச்சுப்பிரதியினும், கீழ்க்குறிப்பில்வைத்துக் காட்டப்பட்டிருத்தல் காண்க. 'கொள்ளி கொண்டிரண் டேவி(வி?)டையுட்புக' என்று பிரதிபேதமும் உண்டு.

படுதலோடு, மற்றப் பிரதிகள் பலவற்றையும் ஒப்பிட்டதாகக்கூறும் கூற்றையும் உறுதியற்றதாக்குகின்றது. மேலும், இவ்வாறே நான் பாடங்களைத் திருத்தத் துணிந்தவனென்றும், தமக்கு அத்துணிவில்லை யென்றும் பெருமிதம்பாராட்டுகின்றார். ஏடெழுதுவோராலும், பிறழக் கேட்பதனாலும், மாறுபடப் படிப்பதனாலும் பாடங்கள் பிரதிகளிற் சிதைய வழங்குதலுண்டென்பதும், அவற்றை ஆராய்ச்சிசெய்து உண்மைப் பாடங்காண்பதே பதிப்பாளர்கடமை என்பதும் யாவருந் தெரிந்தவை. 'பிரதியிலுள்ளவற்றைச் சிறிதும் மாற்றத் துணியக்கூடாது' என்று சங்கற்பிப்போர் வெளியிடும் நூல்கள் பிழைகள்மலிந்து, சிலசமயங்களில் நகைப்புக்கு மிடமாகும். இம்முறை, அச்சிட்டவற்றைப் படிக்கும் இக்காலத்தார்க்குமட்டுமன்றி, ஏடெழுதிப்படித்த முன்னோர்க்கும் ஒத்ததே. "அறப்பொருளினபழுயிரெச்சம்" என்றும் "சலத்தாற், பொருள்செய்தேமாத்தல்" என்றும் எல்லாருங்கொண்டு உரை கூறி வந்த பாடங்களைப் பரிமேலழகர் தம் நுட்பமதியால் ஆராய்ந்துகண்டு உயிரச்சம்', 'ஏமார்த்தல்' என்றிருக்கவேண்டும் என்று கொண்டார்; இங்ஙனங் கொண்டது தவறென்னலாமோ? இன்னும் எத்தனையோ உதாரணங்கள் இதற்குள்ளன. கவியிருதயமான பாடங்கள் பிரதிகளில் மாறுபட்டுக்கிடப்பனவற்றை ஆராய்ந்துகண்டு திருத்துவதைக் குற்ற முள்ள துணிவென்று நல்லறிஞரெவருங் கூறார். மற்று, ஆராய்ச்சி யின்றி மனம்போனவாறு சுத்தபாடங்களைப் பொருட்பேறு சிதையத் திருத்துந்துணிவே குற்றமுடையதென்க. முற்கூறிய துணிவைச் சிலவிடங்களில் யான்கொள்ள நேர்ந்தது உண்மையே. அதுபற்றிப் பிறர் கூறும் இகழ்ச்சிகள் யாவும் புகழ்ச்சியே என்க.

இனி, இராசாங்கப்பிரதியுட்கண்ட பாடத்தில், பாணிப்பதிப்பாளர் கூறிய குற்றங்களை நோக்குவோம்.

(1) "கொள்ளி கொண்டிரண் டேமுழை யுட்புகக்- குன்றுதோன்றுவபோலவிழிப்பன" என்ற பாடத்துக்கு யான் கொண்ட கருத்து, "கொள்ளிகளைக்கொண்டு இரண்டு முழையுட் புகும் போது குன்றுகள் தனித்தனிதோன்றுமாறுபோல (பேய்கள்) விழிப்பன வாய்த் தோன்றுவன" என்பதே. இப்பொருளில், 'கொள்ளிகொண்டு இரண்டு முழையுட் புகுவன யாவை' என்றார்; 'கொள்ளிகொண்டு இரண்டு

துகைகளுட் புகும்போது' என்ற வாக்கியத்துள், புகுதல் வினை, அவ்வினைநிகழ்த்தற்குரியவிடத்தையன்றி வேறிடத்துஞ் செல்லுமோ? 'இருட்டறையி லேதில்பிணங் தழீஇயற்று' 'கீழ்நீர்க்குளித்தானைத் தீத்துரீஇயற்று' என்ற தொடர்களிலே, தழுவல் துருவல்வினைகள் அவற்றுக்குரிய மக்கட்குரியனவேயன்றோ? அவற்றின் வினைமுதல்களை வள்ளுவனார் கூறாமையால், பதிப்பாளர்கருத்தின்படி 'குறித்தோன் கூற்றந் தெரித்துமொழி கிளவி' என்ற விதிக்கு அவர் கூற்றுக்கள் மாறாதும்போலும்.

(2) "'இரண்டே'என்ற ஏகாரத்துக்குப் பொருளென்ன" என்றார். பொருளுள்ள ஏகாரந்தான் பாடல்களில் அமையவேண்டும் என்பது இவர் கொள்கைபோலும். 'தலையுடனமர்ந்தேயாங்கழை' 'கைக்கேகூழை வாரீரே'என்பன முதலிய பாணியில்வரும் ஏகாரங்களை ஆராய்ந்துதெளிக. இனி, 'நெருப்பைக் கொண்டு இரண்டு அம்புகள் (ஆக்கினேயாஸ்திரங்கள்) இருதுகையுட் புகுங்கால் குன்றுகள் தனித்தனி தோன்றுமாறுபோல (பேய்கள்) விழித்துத்தோன்றுவன' என்று இதற்குப் பொருள்கூறலும் பொருந்தும். இரண்டென்பது எண்டுமுறைமையுடனும்இயையும். கொள்ளி-நெருப்பு; 'கைக்கொள் கொள்ளியர் கவுள்புடையூஉ நடுங்க' என்ற நெடுநல்வாடையடிக்கு நச்சினார்க்கினியர் கூறிய பொருளும் காண்க.

(3) 'குன்று தோன்றுதல் விழித்தற்கு உவமையாகுமா' என்றார். குன்றுகள் தனித்தனியே தோன்றுவனபோலப் பேய்கள் தனித்தனி விழிப்பனவாய்த், தோன்றுவன'என்பதே கவியின்கருத்து பொதுவாடையாகிய 'தோன்றுதல்' ஈண்டு உவமைக் கண்ணுங் கூட்டப்படும். உவமையடைபொருளடைகளைக்கூட்டி முனைனோர்செய்யுட்குப் பொருள்கோடலைச் "சமன்செய்து" முதலிய குறளுரைகளுட் கண்டுகொள்க.

(4) "வற்றியுலர்ந்த கள்ளிமரங்களும் பனைமரங்களும் உவமையாகச் சொல்லப்படும் பேய்களுக்கு மலையை உவமையாகச் சொல்வது வழக்காறாகுமா? முன்னடியில் 'ஒட்டியொட்டு விடாதகொடிற்றின, என்ற பேய்களைப் பின்னடியில் குன்றோடு உவமிப்பது பொருந்துமா?" என்றார். வற்றியுலர்ந்த கள்ளியைப் பேய்க்கு உவமையாகப் பாணி கூறிய இடம் யாது? "கருநெடும்பனங்காடுமுழுமையுங் காலுங்கையு

முடையனபோல்வன" என்புழி, 'நெடும்பனங்காடு' என்ற புலவர் கூற்று அதன் குறுகிய தோற்றத்தையே குறிக்கும் என்பது விபரீதமே. 'வன் பிலத்தொடொவாதுசெய்வாயின' 'தட்டி வானைத் தகர்க்குந் தலையின' 'ஒட்ட லொட்டகங் காணிலென் பிள்ளையை—ஒக்கு மொக்குமென் றெக்கலைக் கொள்வன' என்று அடுத்துவருகின்ற பேயுவமைகளும், அவற்றின் குன் றொத்த நெட்டுருவத்தைய‌ன்றிக் குறுகிய உருவையோ குறிப்பன? பேய்வருணனைகளாகக் கண்டன யாவும் அவற்றின் பெருந்தோற்றத்துக் குரியனவாகவே அமைந்திருத்தலைப் பாணிநெடுக அறியலாம். அங்ஙன முள்ளவை, பசியால் இளைத்தொடுங்கிய நிலையே 'பேய்களைப்பாடியது' என்ற பரணியியலிற் கூறப்படுவது. பேருருக்கொண்ட யானை பசியால் உடல்வற்றியதெனின் அது பூனையாகாது; வயிறாரவுண்டு உடல் தடித்த தெனின் அஃது இமயம் ஆகாது; தன் ஆகிருதியினின்றும் ஒடுங்கியும் பருத்தும் வேறுபட்டதென்பதே கருத்தாதல்போல, அத்தகைய பேய் களும் உணவின்றி யொடுங்கியும் உணவுண்டு பருத்தும் மாறின என்க. எனவே, பேய்களை, தனித்தனிக் குன்றுகளாகவும், "சுழலு மழல்விழிக் கொள்ளிவாய்ப் பேய்" (பதிற்று. மூத்ததிருப் 2, 7) என்றவாறு அவற் றின் தீவிழிக்குங் கண்களைக் கொள்ளிகொண்ட இருமுழைகளாகவும் கூறப்பட்ட உவமை, அவற்றைப் பேருருவமுடையவாகவேவருணித்து வரும் புலவர்கருத்துக்குப் பெரிதும் இயைபுடையதாதல் தெளிக. கூழட்டுண்டு பேய்கள் உடல்தடித்ததைச் சிறப்பிக்குமிடத்தே—

"பருத்துநின்ற, துன்றுதுனிப்பன போற்களத்துக்
கும்பிட் டேநட மிட்டனவே. (572)

என்று சயங்கொண்டார் பாடுதல், பேய்கட்குக் குன்று உவமையாகாது என்று ஒருதலையாகத் துணிந்த பதிப்பாளர்கருத்துக்கு முழுவிரோத மன்றோ! 'கூழின்றிப் பசியால் ஒடுங்கிய குன்றுபோல முன்பிருந்த பேய் கள், வயிறாரவுண்டதும் பருத்தகுன்றுபோலாயின' என்பதே ஈண்டுக் கவி கருதியதென்பது அறிஞர்க்கெல்லாம் நன்குவிளங்கத்தக்கது.

இனி, இராவணனது படைக்காட்சியில் மூலபலத்தை வருணித்து வருமிடையே, "மறக்கண் வெஞ்சின மலையென விங்நின்ற வயவர்" என்று அரக்கரது குன்றொத்த உருவைக் குறிப்பிட்ட கம்பநாடர், அவர் கண் களை—

"தீவங் தோன்றிய முழைத்துணை யெனத்தெறு கண்ணர்"

என்ற தொடராற் சிறப்பிக்கின்றார். 'தீபங்கள் பிரகாசிக்கும் இரண்டு மலைக்குகைகளைப்போல எரியும் கண்களையுடையவர்' என்பது இதன் பொருள். இதனால், கொள்ளிகளைக்கொண்ட இரண்டு மலைமுழைகளைப் பேய்விழிகட்கு, உவமைகூறிய சயங்கொண்டாரைப்போலவே, கம்பநாடரும், தீபங்களைக்கொண்ட இருமுழைகளை அரக்கர்விழிகட்கு உவமை கூறியது காணலாம். தமக்குமுற்பட்ட சயங்கொண்டார் பேய்விழிக்குக் கூறிய ஒப்பைத் தாம் அரக்கர்விழிக்கு எடுத்தாண்டதற்கு, ஒரு பொருத்தங் கற்பிப்பவர்போலக், கம்பர், "கூளிகட்கு நல்லுடன்பிறந்தார்" என்று அவ்வரக்கரைப் பேயின் இனத்தவராக முன்பாட்டிற் கூறிப் போந்தமையும் ஈண்டு உணரத்தக்கது. [நல்லுடன்பிறந்தார் என்பது 'நல்லம்மான்' என்பதுபோல, நெருங்கிய உறவுமுறையைக் குறிக்கும்] இவற்றாலும், எரியைக்கொண்ட இரு மலைமுழைகளைப் பேருருவுடைய பேய் அரக்கர்போன்றார்க்கு உவமைகூறுவது, பண்டைப்புலவர்கொண்ட வழக்கே என்பது தெளியலாம்.

இனி, பாணிப்பதிப்பாளர்பாடத்தை நோக்குவோம். " 'கொள்ளி கொண்டு......விழிப்பன' என்பது, கொள்ளிக்கட்டைகளைக் கையிற் கொண்டனவாயிருந்துகொண்டு, இரண்டு அம்புப்புழையுட்புக்க செங் குன்றி தோன்றுமாறுபோலத் தோன்றுமாறு, சிவந்தாழ்ந்தகண்களை விழிப்பன என்று பொருள்பட்டுச் சிறுகட்பேய்களின் விகாரவடிவு புலப் படுத்தற்குரியதாகின்றது;" என்றார்.—இப்பொருளின்படி, 'கொள்ளி கொண்டு' என்ற வினையெச்சம், 'விழிப்பன' என்ற வினையுடன் இயையும். பேய்கள் விழிப்பதற்கு உவமைகூறவந்தவிடத்தே, 'கொள்ளி கொண்டு......விழிப்பன' என்று புலவர் கூறிய தெற்றுக்கு? உவமேயத்தை விசேடிப்பதனோக்கம், உவமைக்கு ஒருபொருட்பேறு சிறக்கவேண்டுமென்பதேயன்றோ? அச்சிறப்புக்கிடமின்றி, நின்றவற்றும் படி கொள்ளிகொண்டென்பதைப் பெரும்புலவர் கூறினரெனல் பொருந்துமா? 'கொள்ளிவாய்ப்பேய்' என்பதன்றிக் கொள்ளிக்கட்டையைக் கையிற்கொண்டிருத்தல் பேய்க்கியல்பு என்பது யாங்குக்கண்டது? இனி, 'ஏழுழை—அம்புப்புழை' என்றார். எயிலுறுப்பொன்றற்கு வழங்கும் 'ஏப்புழை' என்பது இவர்கருத்துப்படி அம்புக்கூட்டுக் காயினும், முழை என்பது கூடு என்ற பொருளில் வழங்குவதியாண்டு? பேயின்கண்களுக்கு முரசம் (பட்டினப்—236), பறை (சிலப்—26,

208; பதிற்று. மூன்றாம்பதி—2, 1) போலும் உவமைகளன்றி மிகச் சிறிய குன்றியை யொப்புமைகூறிய இடமுண்டா? பெருவடிவினவாகச் செயங்கொண்டார் வருணித்துப்போந்த பேய்களைச் சிறியவடிவினவாக முதலிலே கருதிவிட்டவர்க்கு, அவற்றின் பெருங்கண்களும் சிறுகித் தோன்றுதல் இயல்பேயன்றோ?

III. (19) பாடச்சிறப்பு.

'அபயன்போருஞ் சேனைவீரர்' என்றபாடத்தினும் 'அபயன்பெறுஞ் சேனைவீரர்' என்று சங்கத்துப்பிரதியிற் கண்டபாடம், கவர்பொருட்கு இடமின்மையாற் சிறந்ததென்பது என்னாற் காட்டப்பட்டது. சந்தர்ப்ப நோக்கிப் பொருள்கொள்ளவேண்டும் என்பதற்கு வேண்டிய நியாயங்கள் கூறி, அவ்வாறு நோக்கும்போது தம்பாடமே சிறப்புடைத்தாம் என்றார். பதிப்பாளர்பாடம் சந்தர்ப்பத்தாற் பொருள்பயவாதென்று யான் அதனுட் குற்றங்கூற வந்தவனல்லன். மற்று, சந்தர்ப்பநோக்காமலே பொருள்கொள்ளத்தக்கபாடம் அதுநோக்கிக் கொள்ளும்பாடத்தினும் சிறப்புடையதென்பதே என் கருத்து. விளங்கவைக்குஞ் சொல்லும் பாடமும் பெறாதவழியன்றோ, ஆற்றல் சந்தர்ப்ப முதலாயினவற்றாற் பொருள்கொள்ளவேண்டுவது? அவையுள்வழி, உய்த்துணர்வு எற்றுக்கு என்க.

IV. (25) வெள்ளணிநாள்.

"எற்றைப் பகலினும் வெள்ளணிகாண்
இருநிலப்பாவை தனைநிழற்றுங் கொற்றக்குடை"

என்ற தாழிசைத்தொடருள் 'வெள்ளணிகாண்' என்று பதிப்பாளர் திருத்திய பாடத்தினும் 'வெள்ளணிநாள்' என்ற பழம்பாடமே பொருள் சிறந்துநிற்றலை விளக்கினேன். "வெள்ளணியென்பதே பிறந்தநாட் சிறப்பு என்றபொருளில் வழங்கப்படுதலால், நாளென ஒருசொற்பெய்து மீண்டும் அப்பொருளே பெறவைத்தல் கவிகருத்தன்று" என்றார். "வெள்ளணி"யென்பதற்குப் 'பிறந்தநாளொப்பனை' என்பதே பொருளாம்; இதனைச் சிலப்பதிகார அரும்பதவுரையாலும் (2 , 229), நச்சினார்க்கினியரெழுத்தாலும் (சீவக 114) அறிக [ஒப்பனை - அலங்காரம்] 'பிறந்த நாள்வயிற் பெருமங்கலமும்' என்ற தொல்காப்பிய சூத்திரப்பகுதிக்கு நச்சினார்க்கினியர் —"சிறந்த தொழில்கள் பிறத்தற்குக் காரணமான

நாளிடத்துநிகழும் வெள்ளணியும் என்று பொருளும், "மங்கலவண்ணமாகிய வெள்ளணியணிந்து எல்லாவுயிர்க்கண்ணும் அருளே நிகழ்த்தலின் அதனை வெள்ளணியென்ப" என்று விசேடமுங் கூறினர். இதனானும், பிறந்தநாளிலொப்பனை என்பதே அவர் கருத்தாதல் காண்க. பதிப்பாளர்கருதியவாறு 'பிறந்தநாட்சிறப்பு' என்ற பொருளையே அவர் கருதியவராயின்—வெள்ளணியென்பதே அப்பொருளை விளக்குதலால் சிறந்த தொழில்கள் பிறத்தற்குக் காரணமான வெள்ளணியும்—என்றெழுதியிருப்பாரன்றி, பிறத்தற்குக் காரணமான நாளிடத்து நிகழும் வெள்ளணியும் என்று முன்வந்தபொருளே பின்னும்வர எழுதாரென்க. இவையெல்லாம் ஆராயாது 'வெள்ளணியென்பதே பிறந்தநாட்சிறப்பு என்ற பொருள்பயக்க, நாளொப்பனை மிகையாம்' என்றார். பிறந்தநாளொப்பனைக்கு வெள்ளணியென்ற வழக்குப்போலவே, பிறந்தநாளுக்கு 'வெள்ளணிநாள்' என்பதே பண்டையவழக்காதலை—

"அரும்பகடும் செம்பொன்னும் வெள்ளணிநாட் பெற்றார்"

(புறப். வெண். 9, 24)

"மலைச்சிறைதீர் வாட்கண்டன் வெள்ளணிநாள் வாழ்த்தி"

(தொல். புறத். 34, நச்.)

என்பன முதலிய முன்னோர்கூற்றுக்களாற் றெளிக. பதிப்பாளர் பாடப்படி, "எற்றைப்பகலினும் வெள்ளணிகாணிருநிலப்பாவை" என, நிலப்பாவைக்கு எல்லா விசேடணங்களையும் இணைக்குமிடத்து, கொற்றக்குடைக்கு விசேடணமேயின்மையால், அக்குடையைச் சிறப்பிக்கப் புகுந்த புலவர்நோக்கம் பழுதாதலேயன்றிப் பொருட்பேறும் சிறவாதொழியும். அதனால், "எற்றைப்பகலினும் வெள்ளணிநாட்சிறப்பை நிலப்பாவைக்குத் தன் நிழலாற்புரியுங் கொற்றக்குடை" என்ற பொருணயம்கொண்ட பழம்பாடமே புலவர்கருதியதாதலை ஆராய்ந்து தெளிக. இதுகாறுங் கூறிப்போந்தவற்றால், பாணிப் புதுப்பதிப்பாளர் என்னாராய்ச்சிகள் சிலவற்றுட் கண்ட குற்றங்கள் யாவும் நற்றங்களாதல் யாவர்க்கும் நன்குவிளங்கத்தக்கது.